
# காற்றின் சுவடுகள்



## இராஜேஸ்வரி சண்முகத்தின்

## நெஞ்சில் நிறைந்தவையும் நினைவில் பதிந்தவையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலிக்குயில் திருமதி இராஜேஸ்வரி சண்முகத்தின்
லட்சியக் கனவுகள் ஈடேற வாழ்த்தி மகிழ்கிறது

அனைத்து நாடுகளுக்கும் நினைத்த தினத்தில் பயணமாக விமான
டிக்கட்டுகளையும் பயண ஏற்பாடுகளையும் துரிதமாகச் செய்யும்

# விக்டரி டிரவல்ஸ்

101, காஞ்சனா டவர்ஸ், வில்லியம்ஸ் ரோட்
திருச்சி - 1
போன் : 411344

*Best Wishes*

# C. SHARAN'S SUPER GRAPHISC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

P 28-29

# காற்றின் சுவடுகள்

மேடை முதல் வானொலி வரை

நெஞ்சில் நிறைந்தவையும்
நினைவில் பதிந்தவையும்

*வானொலிக் குயில்*

**இராஜேஸ்வரி சண்முகம்**

ஒலிபரப்பு, கலை, இலக்கியம்,
நாடகம், விளம்பரம்
ஆகிய துறைகளில் முத்திரை பதித்த
நிகழ்வை முன்னிட்ட

# பொன்விழா மலர்

16.03.2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றின் சுவடுகள்

*மேடை முதல் வானொலிவரை*
*நெஞ்சில் நிறைந்தவையும் நினைவில் பதிந்தவையும்*

வானொலிக் குயில் இராஜேஸ்வரி சண்முகம்
ஒலிபரப்பு, கலை, இலக்கியம், நாடகம், விளம்பரம்
ஆகிய துறைகளில் முத்திரை பதித்த நிகழ்வை
முன்னிட்ட பொன்விழா மலர்


உரிமை : திருமதி வசந்தி சிவகுமார், திருச்சி
சந்திரமோகன் சண்முகம், கொழும்பு
சந்திரகாந்தன் சண்முகம், கொழும்பு

முதற்பதிப்பு : 16.03.2001

வெளியீடு : C. Sharan Super Graphics
310/2, காலி வீதி, கொழும்பு – 06
தொலைபேசி : 074–510218, 555066,
077–367686

Victory Travels, Trichy
Telephone : 411344, 455459

அச்சுப் பதிப்பு : யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கொழும்பு – 13

அட்டைப்பட
வடிவமைப்பு : வசந்த விஜயகுமார்

புகைப்படங்கள் : எஸ். சந்திரமோகன்

நூல் தொகுப்பு : செல்வி. விக்னா செல்வநாயகம்
அ. கனகசூரியர்
மஹ்தி ஹசன் இப்ராகிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "நெஞ்சில் நிறைந்தவள்" தந்து நினைவில் நிறைந்தவருக்கு ஒரு கவிதாஞ்சலி

## *தமிழ்ச் சேவை செய்ய வேண்டும் !*

கண்ணுக்குள் புனல் நிறைத்து
திசையெங்கும் கருக்கலிட்டு
நற்பயக் கவிதைத் தென்றல்
மறந்தெம்மை சென்றதிங்கு?

நானில யதார்த்த மெல்லாம்
கதைகளி லும் பொங்குமப்பா
நமக்காய் தொடர்ந் தெழுத
யாரைத்தான் நீ விடுத்தாய்

கற்பனைப் பேழை ஒன்று
கரந்தவறி சிதறியதே
யாரதைச் சிதற விட்டார்
கானவன் தன்னலமா?

குமுறுகின்ற துயரனைத்தும்
இதயத்துள் தேக்கிவைத்து – நீ
உதிர்க்கின்ற குமிழ்ச் சிரிப்பை
இனி என்று காண்போம் நாம்!

அடுத்துக் கெடுக்கின்ற
குணம் இலை உந்தனுக்கு
அதனால்தான் அறிவே!
துயரங்கள் இன்றெமக்கு

விதியின் விளையாட்டென்று
வேதனைகள் மறப்பதுண்டு
விதிக்கும் ஓர் விதியுண்டு
பதிலெவர்க்குந் தெரியாது

சின்னத் தனமனைத்தும்
வெறுத்திட்ட ஷண்முகனே – நம்
எண்ணத்தில் என்றும் நீ
தெய்வமாய்க் கொலுவிருப்பாய்

கற்பனைக் கலவையினால்
அமரனே! நாமுனக்காய்
விற்பனைக் கடங்காத
சிலை ஒன்றை வார்த்து விட்டோம்

ஏழேழு ஜென்ம மிந்த
ஜெகத்தில் நீ பிறக்கவேண்டும்
பாரே புகழ நல்ல
தமிழ்ச் சேவை செய்யவேண்டும்

இருப்போர்க்குப் பல துன்பம்
இறப்போர்க்கு எதுவுமில்லை
இரந்தே நாம் வேண்டுகின்றோம்
உன் ஆத்மா சாந்தி பெறு!

"*பரா சின்னத்தம்பி*"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகக் கலையின் பொருட்டு வாழும் சண்முகம் தம்பதிகள்

*"கலைப்பித்தன்"*

சமீப காலமாக இலங்கையில் நாடக உலகில், விழிப்புணர்ச்சியும் மறுமலர்ச்சியும் ஏற்பட்டு ஒரு புதிய சகாப்தமே உருவாகியுள்ளது என்பதை நாம் எல்லோருமே ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். கிடைத்த சந்தர்ப்பத்தைத் தன் வாழ்வின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறியவர்கள் வாழ முடியாமை என்னும் படு பள்ளத்திலே தள்ளப்படுவார்கள். ஆகவே, நமக்கு ஏற்பட்டிருக்கும் இந்த நல்ல சந்தர்ப்பத்தை மாபெரும் பாக்கியமாகக் கருதி, வளர்ந்துவரும் நாடகக் கலைக்கு நம்மால் ஆனமட்டும் சேவை செய்வோம் என்ற நல்ல இதயம் கொண்டவர்கள்தான் திரு. சி. சண்முகம் தம்பதிகள். சிறந்த குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்று சொல்வார்கள். உண்மையாகவே திரு. சண்முகம் தம்பதிகளை நினைக்கும்போதும் அந்த உயர்ந்த எண்ணமே, இதயத்தில் நிரம்புகிறது. அந்தக் கலைத் தம்பதிகள் நாடகக் கலைக்காகச் செய்து வரும் சேவைகளைப் பாராட்டவா? போற்றவா? புகழவா?

நாடகக் கலைக்காகத் தங்களின் வாழ்வையே அர்ப்பணித்துக் கொண்ட இந்தக் கலைக் குடும்பம் இலங்கையின் நாடகச் சரித்திர வரலாற்றிலே இடம் பெற வேண்டியவர்கள். இலங்கையில் உண்மைக் கலைஞர்களுக்கு உரிய அந்தஸ்த்தைக் கொடுக்க யாராவது முன் வந்தால், அந்த வரிசையிலே முதலாவதாக வருபவர்கள் திரு. சண்முகம் தம்பதிகள்தான். தங்களுடைய செல்லக் குழந்தையான ஐந்தே வயது நிரம்பிய பேபி வசந்தியையும் நாடகக் கலையில் ஈடுபாடு கொள்ளச் செய்கிறார்கள் என்றால் இவர்களின் கலை ஆர்வம் எந்த அளவுக்குக் குடும்பத்தையே ஊடுருவிச் செல்கிறது என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

விளம்பரத்தை விரும்பாத இந்தத் தம்பதிகளைத் தெரியாத தமிழர்கள் இலங்கையில், இல்லையென்றே சொல்லி விடலாம். இலைமறை காயாக எத்தனை காலத்திற்குத்தான் இருக்க முடியும். காய் பழுத்ததும் மரக்கிளையிலிருந்து கீழே விழுந்துதானேயாக வேண்டும். அது போலவே திறமைசாலிகள் எவ்வளவுதான் மறைந்திருந்தாலும் அல்லது மறைக்கப் பட்டிருந்தாலும் என்றாவது ஒருநாள் அவர்களின் புகழ் மக்கள் மத்தியில் வளரும்–வாழும். இதற்கு திரு. சண்முகம் தம்பதிகளே உதாரணம். பகலிரவு பாராமல் பெற்ற பாசத்தையும் மறந்து, தங்களின் ஐம்புலன்களையும் செலுத்தி நாடகக் கலைக்காக உழைத்து வரும் இவர்களைப் பழித்துக் கூறுபவர்களிடமும், பண்போடு பழகி அன்பு செலுத்தும் கண்ணிய மிக்கவர் திரு. சண்முகம் அவர்கள். இலங்கை வானொலியில் "துணிவிடு தூது" என்ற நாடகத்தின் மூலம் "மாடசாமி" என்ற கதாபாத்திரத்தைப் படைத்து கலாரசிகர்களின் மனத்திரையில் நடமாடவிட்டு, தன்னுடைய லட்சியப் படைப்பான அந்தக் கதாபாத்திரத்தின் மூலமாக, தான் ஒரு சிறந்த நாடக ஆசிரியர் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார். இன்னும் இவருடைய திறமைக்குச் சான்று பகரும் வானொலி நாடகங்கள் பற்பல. அதிலே "அப்பாவும்– மகனும்" என்ற நாடகமும் ஒன்றாகும்.

"வானொலி நாடகக் குழுவினர்" என்ற பெயரில் பல மேடை நாடகங்களைத் தானே எழுதியதோடு, பயிற்சியும் அளித்துத் தயாரித்து அரங்கேற்றியதன் மூலம், தான் ஒரு சிறந்த நாடகத் தயாரிப்பாளர் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார். வாழ்க்கைக்குத் தேவையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அம்சங்களை மையமாக வைத்து அமரத்துவம் பெற்ற கதாபாத்திரங்களைப் படைத்து, மக்கள் மத்தியில் நடமாடவிட்டிருக்கும் திரு. சண்முகம் அவர்களின் வெற்றிக்குப், பக்க பலமாக நின்று ஊக்கமளிப்பவர் திருமதி இராஜேஸ்வரி சண்முகம் அவர்கள். வானொலி நாடகங்களில் நடித்துப் பிரசித்தி பெற்ற இவர். தன் கணவர் எழுதித் தயாரித்த பல மேடை நாடகங்களில் நடித்துத் தான் ஒரு சிறந்த நடிகை என்ற புகழுக்கும் உரித்தானார்.

"மாந்தருள் மாணிக்கம்", "ஸ்ரீமான் கைலாசம்', "ஸ்புட்னிக் சுருட்டு", "மோனச் சிரிப்பு", "யாரது?" ஆகிய வெற்றி நாடகங்களை எழுதிய திரு. சண்முகம் அவர்களை, உண்மைக் கலைஞர்களுக்கு உதவியளித்து உற்சாக மூட்டுவதில், ஆர்வமிக்க திரு. எஸ். என். சிவசுப்பிரமணியம் அவர்கள் தன்னுடைய "சிவா பிலிம்ஸ்" இரண்டாவது தயாரிப்பான.......... திரைக் கதைக்கு வசனம் எழுத வாய்ப்பளித்திருக்கிறார். திறமைசாலிகள் எத்தனையோ பேர் நம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் ஒன்று திரட்டி, மக்கள் முன் கொண்டு வந்து நிறுத்தி, அவர்களின் சிந்தனையிலே உருவாகும் அறிவுச் சுடர்களை அணைத்து விடாமல் பத்திரமாகப் பாதுகாக்கும் பட்சத்தில் நமக்கும் நம் நாட்டிற்கும் ஏன் இந்த உலகத்திற்கும் தொண்டு செய்த தியாகிகள் என்போம்.

(ராதா - 26.12.1964)

---



வானொலிக்குயில்
நாடகங்களில் தோன்றும் காட்சிகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றின் சுவடுகள்
## A COLLECTION OF *RAJESWARY SHANMUGAM*
## *"மரகதத் தோரணம்"*

எல்லையற்ற ஒன்றை எல்லையற்ற ஒன்றால்தான் அளக்க முடியும் என்ற வைர வரிக் கவிஞர் சொன்னது என் நினைவுக்கு வந்து போகிறது – இரண்டையும் அளக்கும் கருவி மனம் என்பது தெரிந்த ஒன்று – வாழ்க்கை, பிரபஞ்சம் இரண்டையும் அளந்து பார்க்க மனம் துடித்தபோது கலை பிறந்தது என்றவரின் கூற்று ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒன்று. கலையின் ஈர்ப்பால் பள்ளி நாட்களில் "என் பாவாடை சீத்தை, என் பாதரசம் வெள்ளி" என்று மழலைக் குரலில் பாடித் திரிந்த பொழுதுகளிலே அந்தக் கலையில் மயங்கினேன். வீட்டில் சொல்லத் தயங்கினேன். எனது தயக்கம் போக்கியவர்கள் என் பள்ளி ஆசிரியர்கள். பேச்சுப் போட்டியா? நாடகப் போட்டியா? இராஜேஸ்வரியைப் பழக்குவோம் என்ற குரல்கள் இப்போதும் என் செவிகளில் ஒலிக்கின்றன.

தலைமை உபாத்தியாயர் நாகப்பா அவர்கள், தமிழ் கற்பித்த பாலபண்டிதர் ஆறுமுகம் தெய்வேந்திரன் அவர்கள், இலக்கியத்தில் ஆர்வம் ஏற்படுத்திய பண்டிதர் ஆறுமுகம் அவர்கள், ஆங்கிலத்தில் சரித்திரம், பூகோளம், இலக்கியம் என்ற விதைகளை என்னுள் விதைத்த திரு. மென்டிஸ், திருமதி அல்லிராஜா, திரு. நவரட்ணம், கர்நாடக சங்கீதத்தில் நான் முன்னணி வகிக்க வேண்டும் என விரும்பிய பத்மாவதி பூரணானந்தா போன்ற நல்லாசிரியப் பெருமக்கள் இப்போது என் நினைவில் நிழலாடிச் செல்கின்றனர். சமஸ்கிருதத்தில் பாண்டித்தியம் பெறவிரும்பிக் கற்பித்தவர் நாகபூஷணி நமசிவாயம். ஆர்வமும் அவசியமும் இருந்திருப்பினும் கெப்ரியல் டீச்சர் என்னுள் விதைத்த நாடகம் என்னும் வித்து பெருவிருட்சமாக வளர்ந்து நான் நாடக உலகில் தடம்பதிக்க உதவியது.

வானொலி நாடகத்துறைக்கு சானா என்னும் மாமனிதனால் அறிமுகம் செய்யப்பட்டேன். அதன் வெளிப்பாடாக வானொலியின் நாடகக் கலைஞர்கள் ஒருங்கிணைந்து ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீதேவி நாடக சபா, நற்றமிழ் நாடக மன்றம், வானொலி நாடகக் குழு போன்றவையோடு இணைந்து கொள்ள வாய்ப்புக் கிட்டியது. முதல் மேடை நாடகம் பிரபல திரைப்பட இயக்குநர் லெனின் மொறாயஸ் நெறியாள்கையில் சி. சண்முகம் எழுதிய "மாந்தருள் மாணிக்கம்" என்னும் நாடகம் நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்ட ஒரு நாடகமாக அமைந்தது. இன்றும் கலையுலகில் பலராலும் கௌரவப்படுத்தப்படுகின்ற எம். ஏகாம்பரம், ஆர். விக்டர், கு. இராமச்சந்திரன் போன்ற கலைஞர்கள் அதில் என்னுடன் நடித்து முத்திரை பதித்தனர். வானொலியிலும் மேடையிலும் ஆனந்தி சூரியப்பிரகாசன், வீ. சுந்தரலிங்கம் (சுந்தா), வி. வி. வைரமுத்து, ஆ. குருசாமி, எம். எஸ். ரட்னம், ஆறுமுகம், தர்மலிங்கம் ரி. எஸ். பிச்சையப்பா, என். சோமசுந்தரம், தாசன் பெர்ணான்டோ, மணிவேதமுத்து, பிலோமினா சொலமன், வரணியூரான், இராஜேஸ்வரன், எஸ். எம். ஏ. ஜபார், விசாலாட்சி ஹமீட், வசந்தா அப்பாத்துரை, கே. மார்க்கண்டன், வி. என். நவரத்தினம், ரொசாரியோ பீரிஸ், சரஸாம்பிகை, கே. கணபதி, ஜோக்கிம் பர்ணான்டோ, ஜோர்ஜ் சந்திரசேகரன், லடீஸ் வீரமணி, புஷ்பம் கோமஸ், பரிமளாதேவி விவேகானந்தா, ஜொசபின் கொஸ்தா, விடிவை நோக்கிப் புறப்பட்ட சிவானந்தன், முருகையன், சிறினிவாசன், ந. சுந்தரலிங்கம் போன்ற கலைஞர்களோடு என் திறமை காட்டுவதற்கு சந்தர்ப்பங்கள் வாய்த்தன. ஏற்றுக் கொண்ட பாத்திரங்கள் ஒன்றா இரண்டா? நடித்த நாடகங்களை இப்பொழுதும் மீட்டிப் பார்த்து அசைபோட்டுக் கொண்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைத் துறையிலும் சிறந்த நடிகர்களான ருக்மணிதேவி, சாந்திலேகா, பரினா லை போன்றவர்களுக்கு குரல் கொடுத்து நடிக்கச் செய்வதற்கான பங்களிப்பை எனக்கு மனமுவந்து வழங்கிய கலாபிமானிகளையும் மறந்து விடமுடியாது. நானும் என் கணவரும், என் குழந்தைகளும் கலைத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பை எங்கள் மீது அபிமானமுள்ளவர்கள் அறிவார்கள்.

இன்றும் தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் பரந்து விரிந்து கலைப்பணி ஆற்றிக் கொண்டிருப்பவர்களில் பலர் அந்நாளில் என்னோடு இணைந்து கலைப்பணி ஆற்றியவர்களே.

நாடகக் கலையை வாழ்வின் ஒரு பகுதியாக நிலை நிறுத்திய வேளையில்தான் அறிவிப்பாளர் என்னும் புதிய பாதை நோக்கி என் பயணம் திசை திரும்பியது. இன்று படிப்படியாக முன்னேறி, திறமை ஒன்றை மட்டும் மூலதனமாகக் கொண்டு ஓரளவு வெற்றிகளை எனதாக்கி உங்கள் முன் ஒரு ஒலிபரப்பாளராக நிற்கின்றேன்.

ஐம்பது வருடங்கள் என்பது சாமானியமானதல்ல என்ற சொற்றொடரோடு என்னை வாழ்த்தி நிற்கும் இனிய நெஞ்சங்களே! 1950.12.26ம் நாள் வானொலியில் ஒலித்தது என் குரல். சில்லையூர் செல்வராசன் எழுதிய 'ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்' என்னும் தலைப்பில் பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு முதற்பரிசு பெற்றேன். பள்ளியிலும் முதற் பரிசு, வானொலியிலும் முதற் பரிசு.... இப்படியாக ஆரம்பமான எனது கலைப் பயணம் சிறுவர், மாதர், கல்வி, கலை, இலக்கியம், நாடகம் ஆகிய துறைகளைத் தாண்டி தயாரிப்பாளர், நிகழ்ச்சித் தொகுப்பாளர், செய்தி வாசிப்பாளர் என்று பரந்து விரிந்து நிற்கின்றது.

செய்தவைகள் கையளவு மட்டுமே – செய்ய நினைக்கின்றவை கடலளவு உண்டு. செய்ய நினைத்தவைகளை செய்து முடிக்கத் துணை நின்றவர்கள்– ஆக்கமும் ஊக்கமும் தந்தவர்களின் வரிசையில் – என் கணவர் சி. சண்முகம், கலாநிதி கே. எஸ். நடராஜா, விவியன் எஸ். நமசிவாயம், சி. வி. ராஜசுந்தரம், ஞானம் இரத்தினம், பொன்மணி குலசிங்கம் போன்றவர்கள் அடங்குவர். தட்டிக் கொடுத்து வேலை வாங்கியவர்கள் – வி. என். பாலசுப்பிரமணிய ஐயர், வி. பி. தியாகராஜா, என். சிவராஜா, வி. ஏ. திருஞானசுந்தரம் போன்றோர் – என் நன்றிக்குரியவர்கள். கலையுலகில் சரவணமுத்து மாமா, ஒலிபரப்புத்துறையில் லெவி. ஆர். விஜேமான, தமிழ் வர்த்தக சேவையின் பிதாமகன் எஸ். பி. மயில்வாகனன் – இவர்களை நோக்கி என்கரம் குவிகிறது.

இத்தனை பேரையும் சந்திக்க வாழ்வில் சவால்களுக்கு முகம் கொடுக்க, போட்டி என்று வந்து விட்டால் – சற்றும் தளர்வின்றி வெற்றிவாகை சூடவேண்டும் என ஆசி வழங்கி, உற்சாகப்படுத்தி, நாலு பேர் மத்தியில் என் பெயரை நிலைநிறுத்தக் காரணமாக நின்ற என் குருநாதர் கலாஜோதி சானாவுக்கே என் முதல் வணக்கம். இறவாப் புகழ் பெற்ற சானா எனும் அந்த பெரும் மனிதனுக்கு நான் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளேன். என் நன்றிக் கடனைச் செலுத்துவதற்கு இறுதி நாட்களில் அவருள் முகிழ்த்தெழுந்த அவரது பெருவிருப்பு ஒன்றை நிறைவேற்ற கலாபிமானிகளின் பேருதவியை நாடி நிற்கின்றேன். சானாவின் கனவுகளில் ஒன்றை நிறைவேற்றும் அந்த இனிய நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றேன்.

கலையரசு நினைவாக சானா உருவாக்க நினைத்த *"கூத்தரங்கம்"* என்ற பெயர் தாங்கிய நாடகப் பட்டறையை உருவாக்கி, அந்தப் பட்டறையிலே நாடகத் துறையில் மட்டுமல்ல தமிழ் உச்சரிப்பு, அறிவிப்பு ஆகியவற்றுள் பிரவேசிக்க நினைப்பவர்களுக்குப் பயிற்சிக் களமமைக்க விரும்புகின்றேன். இந்த மேலான பணியினைச் செய்ய தமிழ்த்தாய் எனக்குப் பலமும் வளமும் தரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் குரல் காற்றோடு கலந்து வந்து காதுகளில் ஒலித்ததைக் கேட்ட நேயர்பெருமக்கள் என் மீது கொண்டிருக்கும் அபிமானமும் நேச உறவும் காரணமாக எனது வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் வழங்கிய – வழங்கிக் கொண்டிருக்கின்ற உற்சாகமும், ஒத்துழைப்பும் எனது பணியை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு பெரிதும் உதவி புரிகின்றன என்பதையும் நன்றி மறவாமல் சொல்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இனிய அபிமான நேயர்கள் எனது உயர்வை மதித்து கடிதங்கள், தொலைபேசி ஊடாக மட்டுமன்றி, தங்கள் இருப்பிடங்களுக்கு என்னை நேரில் அழைத்து வாழ்த்திப் பாராட்டுவதன் மூலம் என்னையும் தங்களையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்க வைக்கும் அந்த இனிய நிகழ்வையும் என்றென்றும் என்னால் மறக்க முடியாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் விளம்பரதாரர்களையும் என்னால் மறந்து விட முடியாது. அவர்கள் என்னை பெரிதும் மதித்து வழங்கிவரும் பேராதரவுக்கு எனது இதய பூர்வமான நன்றிகள் இப்போது மட்டுமல்ல எப்போதும் அவர்களுக்கு உண்டு.

நேசமிக்க நெஞ்சங்கள் நான் நடந்து வந்த பாதையிலே என்வளர்ச்சிக்கு வழிகாட்டி, என் ஆக்கங்களுக்கு ஊக்கமளித்து வழங்கியிருக்கும் வாழ்த்துரைகளையும் விமர்சனங்களையும் என் பணிபற்றிப் பத்திரிகைகளில் வெளிவந்த பேட்டிகளையும் கேள்வி பதில் அம்சங்களையும் வாசகர் மடல்களையும் தொகுத்து உங்கள் பார்வைக்காகப் பணிவன்போடு சமர்ப்பித்ததில் பெருமிதமடைகிறேன். இந்தத் தொகுப்பினை உங்கள் கரங்கள் ஏந்தும் நேரம் என் வெற்றியில் பங்கு கொண்ட அனைவரும் நினைவு கூரப்படுவார்கள். வானொலித் துறையில் வானொலிக்குயில், தொடர்பியல் வித்தகர் என்ற விருதுகள் என். சிவராஜா அவர்கள் பணிப்பாளராக இருந்தபோதும் சிறந்த அறிவிப்பாளர் என்ற ஜனாதிபதி விருது வி. ஏ. திருஞானசுந்தரம் அவர்கள் பிரதிப் பணிப்பாளர் நாயகமாக இருந்தபோதும் கிடைக்கப் பெற்றேன். பவளவிழா ஊடகத்துறை விருது இரண்டும் கலாசூரி திருமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் தமிழ்ச்சேவை பணிப்பாளராக இருக்கின்ற இச்சமயம் பெற்றிருக்கின்றேன். இந்த வெற்றிக் களிப்பில் மனம் மகிழும் பொழுது அவர்களது அன்பும் அபிமானமும் ஆசிகளும் என்றும் என்னுள் நின்று நிலைக்கும். நினைவு கூர்ந்து நன்றி செலுத்தக் கடமைப் பட்டவர்கள் பலர் இருப்பினும் விடுபட்டு நிற்பவர்கள் என்னை மன்னியுங்கள்.

முக்கியமாக வானொலிக் குயில் விருது பற்றி செய்தியறிக்கை மூலமாக உலகெங்கும் அறியும் வாய்ப்பை ஏற்படுத்திய மறைந்த கலைஞரும், செய்தியாசிரியருமான திரு. பிராங் புஷ்பநாயகத்துக்கும், அதனை மனமுவந்து ஏற்று விழாவெடுத்துக் கொண்டாடி மகிழ்ந்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சிங்களசேவை பணிப்பாளர், அறிவிப்பாளர்கள் சக ஊழியர்கள் அனைவருக்கும் நன்றி மலர்களைச் சமர்ப்பிப்பதோடு, எட்டயபுரம் தென்பொதிகைத் தமிழ்ச் சங்கத்தினருக்கும், ஐரோப்பிய நாடுகளில் கௌரவப்படுத்திய எஸ். கே. ராஜன் அவர்களுக்கும் ஏனையோருக்கும், முக்கியமாக மல்லிகை இலக்கிய சஞ்சிகையின் முகப்பில் என்னைக் கௌரவப்படுத்திய மதிப்பிற்குரிய திரு. டொமினிக் ஜீவா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

*முதுமையின் அனுபவமும்*
*நடு வயதின் அறிவும்*
*இளமையின் உற்சாகமும்*
*குழந்தையின் இதயமும்*
*எனக்கு எப்போதும் நிலைத்திருக்க*
*தேவர்களே! அருள் புரிவீர்களாக.* (பாரதி)

*வாழ்க தமிழ்! வளர்க கலை*

*அன்புடனும் நன்றியுடனும்*
*ஆனந்தக் கண்ணீருடனும்*
இராஜேஸ்வரி சண்முகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

**பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா**

*பிரதம குரு*

*ஸ்ரீபால செல்வ விநாயக மூர்த்தி கோவில்*

கொழும்பு – 10

# ஆசியுரை

*திருமதி இராஜேஸ்வரி சண்முகம்,*

இப்பொன் விழாவைக் காணும் மதிப்புக்குரிய வானொலி மூத்த அறிவிப்பாளர், கடமையாற்றி வரும் 50 ஆண்டுகள் பூர்த்தியாகியதை அறிந்து அவரின் தொண்டு இன்னும் பல ஆண்டுகள் வானொலிக் குயிலாகவே இருக்க எல்லாம் வல்ல ஸ்ரீ பால செல்வ விநாயகரைப் பிரார்த்தித்து எனது ஆசியை வழங்குகிறேன்.

*இங்ஙனம், தங்கள் அன்புள்ள குரு*
பா. சண்முகரத்தின சர்மா

---


**KARTHIGESU SIVATHAMBY**
M. A., (Sri L), Ph. D., (Birm), D. Litt (Hon. Causa) Jfn.

**Professor - Emeritus,** University of Jaffna

**Co-ordinator (Tamil)**
Revision of Glossary Terms
Offical Languages Commission,
Sri Lanka.

2/7, Ramsgate Apts.
58, 37th Lane, Wellawatte,
Colombo - 06, Sri Lanka.
Phone : 94-1-508958.

06.02.2001

கண்களை இறுக்கிக் கசக்கி மீண்டும் ஒரு முறை "என்ன" என்று கவனமாகக் கேட்க வேண்டும் போல இருக்கிறது.

இராஜேஸ்வரியின் வானொலி அனுபவம் ஐம்பது ஆண்டுகளைத் தொட்டு விட்டதா?

உண்மையில் இது பெருமைமிக்க ஒரு சாதனைதான். ஏனெனில் அவர் குரலின் வசீகரம், காலம் பற்றிய எண்ணத்தை வானொலி நேயர்களின் மனதில் ஏற்படுத்துவதே இல்லை. அதே கணீரென்ற, அழுத்தமான ஆனால் இனிமை குறையாத குரல்.

இலங்கை வானொலியின் வர்த்தக ஒலிபரப்பில், இராஜேஸ்வரியின் குரல் மூத்தது, முதிர்வினையுடையது. நிலையத்தின் அடையாளக் குரல்களில் ஒன்று ஆகியுள்ளது. வானொலிக் கலைச் சொல்லில் Singnature tune (அடையாள மெட்டு) என ஒன்று உண்டு. இராஜேஸ்வரியின் குரல் அத்தகையது.

இராஜேஸ்வரியின் வானொலிப் பயணம் நீண்டது, இனிமையானது.

ஐம்பது வருடங்கள் என்பது என்ன, ஒரு சிறு காலத்துகளா? இல்லை பல சீவியங்களைக் கண்டது. பல கலைஞர்களைக் கண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு இப்பொழுதும் நல்ல நினைவு இருக்கின்றது. அப்போதைய ஆறாம் இலக்கக் கலையகத்தில் ஒரு "குரல் பரீட்சை" (audition) நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சானா (சண்முகநாதன்) தொழில் நுட்ப அறைக்குள் நின்று ஒவ்வொருவராக ஒலிவாங்கி மூலம் கூப்பிடுகிறார். பெண்களிற் சிலர் (மிகச் சிலர்) அறிவிப்பாளர் அறைக்குள் (Cubicle) நிற்கிறோம்....

இராஜேஸ்வரி பிச்சாண்டி என்ற ஒரு சிறுமி, குழந்தைப் பருவத்தைத் தாண்டி விட்டாள். ஆனால் மெலிந்தவர். பார்த்தால் சிறுவர் பலருக்கு உரியவர் போன்ற தோற்றம்..... ஆனால் எழுத்துருவை (Script) வாசிக்கத் தொடங்கியதும்....

வழக்கத்தில் இப்படியான வேளைகளில் இறுக்கமாகவே இருக்கும் சானாவின் முகம் நெகிழத் தொடங்குகிறது. நிறைந்த புன்சிரிப்போடு, அடுத்த அறையிலிருந்த என்னைப் பார்த்துப் புருவத்தை உயர்த்துகிறார்......

இராஜேஸ்வரி என்ற ஒரு வானொலிக் கலைஞர் தோன்றி விட்டார் என்பது ஊர்ஜிதமாயிற்று.

வானொலி நடிகையாகவே இராஜேஸ்வரியின் வானொலிப் பிரவேசம் தொடங்கிற்று.

அதன் பின்னர் படிப்படியான பயிற்சிகள் – படிப்படியான முன்னேற்றம்.

அதுவரை ஒரேயொரு குணச்சித்திர நடிகையாக நடித்து வந்த பிலோமினா சொலமனுக்கு ஒரு தக்க தோழி கிடைத்துவிட்டார்.

இராஜேஸ்வரியிடம் கவர்ச்சி அழுத்தமுள்ள, இனிமையான அதேவேளை உணர்வாழங்களைக் காட்டக்கூடிய குரல்வளம் உண்டு.

அந்த ஏணி அவரை மேலே மேலே கொண்டு சென்றது.

சானாவுக்கு நாடகங்கள் எழுதிக் கொடுக்கும், அடிக்கடி வானொலி நிலையத்துக்கு வரும் சண்முகம், மேலும் அடிக்கடி வரத் தொடங்கினார். காட்சி காதலாகி, காதல் தாம்பத்தியமானது.

அற்புதமான ஒரு சிறிய, அழகான கலைக் குடும்பம் வளரத் தொடங்கிற்று.

எனது புலமைப் பயணங்கள் என்னை வேறு இடங்களுக்கும், வேற்று நாடுகளுக்கும் கொண்டு சென்று, பின்னர் நான் நாடு திரும்பிய பொழுது, இராஜேஸ்வரி சண்முகம் இலங்கை வானொலியின் முக்கிய அணிகலன்களில் ஒன்றாக மிளிர்ந்து கொண்டிருந்தார்.

குழந்தைப் பருவத்தைத் தாண்டிய சிறுமியாக வந்தவர், இப்பொழுது குடும்பத் தலைவியாக, குடும்ப வாழ்க்கையின் ஏற்ற இறக்கங்களைக் கண்டவராய், அவற்றுக்கு முகம் கொடுத்து, அவற்றை வென்றவராய் முதிர்ந்தெழுந்தார்.

குரலின் வசீகரமும் குணத்தின் செம்மையும், கடமை நேர்மையும் அவரை இன்று இலங்கை வானொலியின் மதிப்புமிக்க மூத்த கலைஞர்களுள் ஒருவராக்கியுள்ளது.

வானொலிக்கான குரல் வளம் என்பது குரலின் இனிமையில் மாத்திரம் காணப்படுவதில்லை. அது அந்தக் குரலின் அழுத்தத்தில், அதன் நிச்சயத்தன்மையில் (definitieness) தங்கியுள்ளது. குரலின் வசீகரம் மாத்திரம் போதாது, அந்தக் குரலின் வீச்சு ஆற்றல் (range) ஆழ விரிவு உடையதாக இருக்க வேண்டும். அதுவும் பெண் குரலெனில், அதில் ஒரு அந்நியோந்நியத் தன்மையும் இழையோட வேண்டும் (சிலர் சொன்னால் இன்னுமொரு முறை கேட்க வேண்டும் போல் இருக்குமே – அந்தக் குரல் நேர்த்தி வேண்டும்).

இவை இராஜேஸிடம் அழகுறப் பொலிந்துள்ளன. இன்று அவர் குரலில் முதிர்வின் இனிமையையும் இனிமையின் முதிர்வையும் "காண்" கிறோம்.

*தங்கையின் புகழ் மேலும் மேலும் சிறக்க அண்ணனின் வாழ்த்துக்கள்*

*ஐம்பதாண்டுக்கால நினைவுகளை அன்புடன் மீள நோக்கும்*
*கார்த்திகேசு சிவத்தம்பி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேர் பெற்ற பேராதனைப் பேராசான்கள் பேரபிமானத்துடன் வரைந்துள்ள வாழ்த்துரைகள்

# UNIVERSITY OF PERADENIYA
## PERADENIYA, SRI LANKA

**DEPARTMENT OF TAMIL**

Telephone : 08-88301-5
Ext. Office : 271
Residence : 341

*Professor* S. Thillainathan
Head of the Department

## நல்வாழ்த்து

தமிழ் வானொலி நேயர்களின் அபிமானத்துக்குரியவரான திருமதி இராஜேஸ்வரி சண்முகம் ஒலிபரப்புத் துறையில் ஐம்பதாண்டுப் பணியினைப் பூர்த்தி செய்யும் இவ்வேளையில், அவருக்கு எமது பாராட்டுக்களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

வானொலி வாயிலாகத் திருமதி இராஜேஸ்வரியுடன் உறவு கொண்டவர்கள், இனிமையாகவும் தெளிவாகவும் நாகரிகமாகவும் கேட்டாரைப் பிணிக்கும் வகையில் பேசுகின்ற அவரது ஆற்றலையும், இலக்கிய ஈடுபாட்டையும், எல்லாவற்றுக்கும் மேலாக, செய்வனவற்றைச் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்ற ஆர்வத்தையும் மெச்சுவர்.

அவ்வாறு பலர் அவரை மெச்சிப் பாராட்ட விழைந்தமையின் விளைவாக, 'வானொலிக் குயில்', 'வான்மகள்', 'தொடர்பியல் வித்தகர்' முதலான பட்டங்கள் அவருக்குச் சூட்டப்பட்டன. சிறந்த பெண் அறிவிப்பாளருக்கான ஜனாதிபதி விருதும் அவருக்கு வழங்கப்பட்டது.

சிறந்த நடிகராகவும் உரைச்சித்திரக் கலைஞராகவும் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் அறிவிப்பாளராகவும் தன் பெயரை நிலைநாட்டியுள்ள திருமதி இராஜேஸ்வரி எளிமையும் இனிய சுபாவமும் உடையவர்; ஏனையவர்களிடத்து ஆர்வமீதூரப் பெற்றவர்; கலையார்வம் மிகுந்தவர். அப்பண்புகளே மக்களுடனான அவரது தொடர்பாடல் சுமுகமானதாகவும் இதமானதாகவும் சிறக்க உதவின எனலாம்.

திருமதி இராஜேஸ்வரி சண்முகத்துக்கு நல்லாரோக்கியமும் நீண்ட ஆயுளும் கிடைக்கவும், அவரது கனிவான குரலைத் தொடர்ந்து கேட்கும் சந்தர்ப்பம் எமக்கெல்லாம் வாய்க்கவும் வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை
03. 01. 2001

*சி. தில்லைநாதன்*
*தமிழ்ப் பேராசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

இராஜேஸ்வரி சண்முகம் எனும் பெயர் தமிழ் கூறும் நல்லுலகுக்கு நன்கு பரிச்சயமான ஒரு பெயர். தமது அழகு தமிழாலும், இனிய குரல் வளத்தாலும் பல்லாயிரம் வானொலி நேயர்களின் மனங்களில் இடம் பிடித்துக் கொண்டவர். அவர் கடந்த ஐம்பதாண்டுகளாக வானொலி நாடக நடிகையாக, வானொலி அறிவிப்பாளராக, செய்தி வாசிப்பாளராக விளங்கி வந்துள்ளவர். இராஜேஸ்வரி சண்முகம் வானொலியின் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் ஆரம்பத்தில் பங்குபற்றி வானொலி பற்றிய நிகழ்ச்சி நுட்பங்களையெல்லாம் அக்குவேறு, ஆணி வேறாகத் தெரிந்து கொண்டமை அவரின் பிற்கால வெற்றிக்கு அருந்துணையாக இருந்தது எனலாம். வானொலி, அடிப்படையில் செவிப்புலனுக்குரிய ஓர் ஊடகம் என்பதை நன்கு தெரிந்து கொண்டு, அதற்கேற்ப தமது சிறந்த பங்களிப்பினை நல்கி வந்துள்ளார். இராஜேஸ்வரி பழந் தலைமுறை வானொலி அறிவிப்பாளர்களிடத்திற் காணத்தக்க செயலூக்கமும், அர்ப்பணிப்புணர்வும், அறிவார்ந்த ரீதியில் பணியாற்றும் பண்பும், உச்சரிப்பில் மிகுந்த அவதானமும், மொழியை இனிமையாக்கி ஆளுமையுடன் கையாளும் திறனும் அவரிடம் இயல்பாகவே காணப்படுகின்றன. புதிய தலைமுறை வானொலி அறிவிப்பாளர்கள் அவரிடமிருந்து கற்க வேண்டியவை நிறையவே உள்ளன.

இலங்கை வானொலி தமிழ்ச் சேவையின் வரலாற்றில் இராஜேஸ்வரி சண்முகத்தின் பெயர் நிரந்தர இடத்தைப் பெற்றுவிட்டது. அவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டாலும், இன்றும் அவரது குரலை வானொலியிற் கேட்க முடிவது மகிழ்ச்சிக்குரிய ஒன்றே. அவரை மனதார வாழ்த்துவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

- கலாநிதி துரை மனோகரன்
*தமிழ்த்துறை*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*

---

## *கவிஞர் வைரமுத்து தரும் பொன் விழா வாழ்த்து*

*தங்கமழை பெய்ய வேண்டும்*
*தமிழில் குயில் பாட வேண்டும்* என்று எழுதியிருந்தேன்.

தமிழில் குயில் பாடியிருந்தால் எப்படி இருந்திருக்குமோ என்று எனக்குத் தெரியாது. ஆனால் தமிழில் குயில் பேசினால் எப்படி இருக்கும் என எனக்குத் தெரியும்.அது வானொலித் தமிழ்க் குயில் திருமதி இராஜேஸ்வரி சண்முகம் பேசுவது மாதிரி இருக்கும். அந்தக் குரலுக்கு நான் ரசிகன். அந்தக் குயில் இலங்கை வானொலியில் அரை நூற்றாண்டுகளாகத் தமிழ் பாடுகிறது. இது யாருக்கும் கிட்டாத வரலாறு ஆகும். அந்த வரலாறை வாழ்த்துகிறேன் – வரலாற்றை வாழ்த்துகிறேன்.

*வீசும் காற்று*
*பாயும் அலைகள்*
*சுற்றும் பூமி*
*இராஜேஸ்வரி சண்முகம்;*
*நான்குக்கும் ஓய்வில்லை*
*தொடர்க தமிழ்ப் பணி*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ශ්‍රී ලංකාවේ විශාලතම ගුවන් විදුලි පද්ධතිය
*The Largest Audio Network in Sri Lanka*

**ශ්‍රී ලංකා ගුවන් විදුලි සංස්ථාව**
**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**
**SRI LANKA BROADCASTING CORPORATION**


Telex: 21408 SlabCor CE
Fax: 695488/697150
තැ.පෙ. අංකය / த.பெ. இல. / P.O. Box 574
දුරකථනය (මාර්ග 10) / தொலைபேசி (10 இணைப்புகள்) / Telephone (10 Lines) 697491
විදුලි පුවත්: ගුවන් විදුලි, කොළඹ / தந்தி: புரோட்காஸ்ட், கொழும்பு. / Cables: Broadcast, Colombo

මගේ අංකය/எனது இல./My No: ..............................
ඔබේ අංකය/உமது இல./Your No: ..............................
සෘජු දුරකථනය/தொலைபேசி/Direct Telephone
ෆැක්ස්/பக்ஸ்/Your Fax: ..............................


# வாழ்த்து

பவளவிழாக் கண்ட இலங்கை வானொலியில் அன்று சிறுவர் நிகழ்ச்சியொன்றின் மூலம் பிரவேசித்த திருமதி இராஜேஸ்வரி சண்முகம், பின்னர் வானொலி நடிப்புத் துறையிலும், ஒலிபரப்புத் துறையிலும் பங்கேற்றுத் தனது ஒலிபரப்பு வாழ்க்கையில் பொன்விழா கண்டிருப்பது அவருக்கு மட்டுமல்ல, இலங்கை வானொலிக்கும் பெருமை தருவதாக இருக்கிறது.

ஒலிபரப்புத் துறையில் அவருக்குள்ள அனுபவங்களின் ஊடாக வெளிப்படுத்திய அவரது திறமை காரணமாக "சிறந்த அறிவிப்பாளர்" என்ற விருது மட்டுமல்ல, அண்மையில் கூட இலங்கை வானொலியின் பவளவிழா தொடர்பான இரு விருதுகளுடன், கடந்த காலங்களில் வேறும் சில விருதுகள் பெற்றிருப்பது சிறப்பாக மதிப்பிடக்கூடிய விஷயமாகும்.

இலங்கையில் மட்டுமல்ல, அயல் நாடுகளிலும் பெருமளவு நேயர்களின் அபிமானத்தைப் பெற்றிருக்கும் இலங்கை வானொலி தமிழ்ச் சேவையின் வளர்ச்சிக்கு அவரது பங்களிப்பும் முக்கியமானதொரு இடத்தைப் பெற்றிருப்பதை சிறப்பாகக் குறிப்பிடலாம்.

திருமதி இராஜேவரி சண்முகத்தின் சேவை தொடர்ந்து இலங்கை வானொலிக்குக் கிடைக்க வேண்டும் என்பதுடன், ஒலிபரப்புத் துறையில் காலடி பதித்த நிகழ்வாக நடைபெறும் பெருவிழாவையொட்டி அவருக்கு இலங்கை வானொலி தமிழ்ச் சேவை சார்பாக இதயபூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அ. ஸ்ரீரங்கநாதன்
பணிப்பாளர்
தமிழ்ச் சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *வாழ்த்துச் செய்தி*

தமிழ் ஒலிபரப்புத் துறைக்கு நீண்டகாலமாகப் பங்களிப்புச் செய்துவரும் இராஜேஸ்வரிக்கு விழா எடுக்கப்படுவதையும் அதனையொட்டி மலர் ஒன்று வெளியிடப்படவிருப்பதையும் அறிந்து எவரும் மகிழ்ச்சி கொள்ளாமல் இருக்க முடியாது. "மலருக்கு நீங்கள் ஒரு வாழ்த்துச் செய்தி கொடுத்துதவாவிட்டால், அம்மலர் பூரணத்துவம் பெற முடியாது" என்று இராஜேஸ் சொன்னபோது, கடந்த காலத்தைச் சற்றுப் பின்னோக்கிப் பார்த்தேன்.

இராஜேஸை எனது 'வீரகேசரி' காலந்தொட்டு அறிவேன். அவர் ஓர் அபார திறமைசாலி. மேடை நாடகமா, வானொலி நாடகமா, அன்றி வானொலி அறிவிப்பா அல்லது வானொலி நிகழ்ச்சியா – எதையும் பூரண அர்ப்பண சிந்தையுடன் மிக நேர்த்தியாக நிறைவேற்றும் அவரது பக்குவமே தனி!

அவர் தமக்கிட்ட பணியைச் செய்த போதெல்லாம் ஏற்பட்ட சவால்கள், வீசப்பட்ட பொறாமைக் கணைகள், பட்ட கஷ்டங்கள் எவையுமே அவரைச் சோர்வடையச் செய்துவிடவில்லை. 'நிரந்தர அறிவிப்பாளர்' என்ற பதவியில் இருந்து ஓய்வுபெற்று, இப்பொழுது "பகுதிநேர அறிவிப்பாளர்" ஆக இருக்கிற போதும் "செய்வன திருந்தச் செய்" என்ற அவரது குறிக்கோள் நிறைந்த ஆற்றல்மிகு பணியும் அளவற்ற ஆர்வமும் சற்றேனும் குன்றிவிடவில்லை என்பதை அறிந்தவர் அறிவர்; அறிந்துகொள்ள மறுப்பவரும் உண்டு. கலைத்துறை என்பது 'போட்டி பொறாமை' நிறைந்த ஒரு துறை அல்லவா? அதுவும் 'சுயநலம்' என்று வந்து விட்டால்....!

இராஜேஸ்வரியின் துணைவர் – ஒரு கலைஞர் – காலஞ்சென்ற சி. சண்முகம் அவரது கலைவாழ்வு காரணமாக அவர் இன்றும் நிலைத்து நிற்கிறார். அதுபோலவே அவர்களது மகள் வஸந்தி. எனது ஒலிபரப்புத்துறை ஈடுபாட்டில் மறக்க முடியாத ஒருவர். அன்று கல்லூரி சென்று வந்த அவரை, 60/ 70 களில் என்று நினைக்கின்றேன், எனது நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளச் செய்வேன். அபாரமாக குரல் கொடுத்து நடித்து, நிகழ்ச்சிக்கு மெருகூட்டியவர். ஒருமுறை "கண்ணம்மா என் காதலி" என்ற கவிதை நடைச் சித்திரம் ஒன்றை எழுதித் தயாரித்து ஒலிபரப்பினேன். இச்சித்திரம் பாரதியாரின் கண்ணம்மாவைப் பற்றியதல்ல. அது "கண் (தான்) அம்மா என் காதலி"! இதன்பிறகு வசந்தி என்பதைவிட அவரைக் 'கண்ணம்மா' என்றே அழைப்போம். இராஜேஸ் உட்பட! இராஜேஸின் மூத்த மகன் சந்திரமோகன் ஒரு சிறந்த புகைப்படக் கலைஞர். இளையமகன் சந்திரகாந்தன் ஓர் அறிவிப்பாளன் – தனியார் வானொலியான "சுவர்ண ஒலி"யில் மேடை நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதில் அவருக்கு நிகர் அவரே! என்னுடன் சேர்ந்து தனியார் வானொலித் துறையில் பல புதுமைகளைச் செய்து வரும் மஹேன் பெரேரா கொடுக்கும் சான்றிதழ் இது. ஆக, இராஜேஸ் குடும்பம் பரம்பரையாக ஒரு கலைக் குடும்பம். அவருக்கு விழா எடுப்பது மிகவும் பொருத்தமே. இதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது. வாழ்த்துச் செய்தி கேட்டு "இலங்கை வானொலி"யின் பசுமை நினைவுகளை இரைமீட்கச் செய்த இராஜேஸ் தனது குரல்வளத்தால் உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி பல்லாயிரக்கணக்கான நேயர்களைத் தொடர்ந்து மகிழ்வித்து வரவேண்டும். அதற்கு ஆண்டவன் அருள்புரிதல் வேண்டும். இது நேயர் விருப்பம்!

வீ. ஏ. திருஞானசுந்தரம்

*(முன்னைநாள் தமிழ்ச் சேவைப் பணிப்பாளர்/*

*பிரதிப் பணிப்பாளர் நாயகம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை வானொலியின்
## மூத்த ஒலிபரப்பாளர் சுந்தா வாழ்த்துகிறார்.

திருமதி இராஜேஸ்வரி சண்முகம் தனது கலைவானில் பதித்த சுவடுகளை நூல்வடிவில் கொண்டு வரும் செய்தியை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலம் வானொலித் துறையில் இராஜேஸ்வரி சிறந்து விளங்கியவர். இன்றும் அவரின் குரல் வானொலியில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இராஜேஸ்வரி சண்முகம் தனது சிறந்த குரல் வளத்தினாலும், சுத்தமான தமிழ் உச்சரிப்பினாலும் இலங்கையில் மட்டுமன்றி தமிழ் நாட்டிலும் பல ஆயிரக்கணக்கான ரசிகர்களைக் கவர்ந்திருக்கிறார்.

அவர் ஒரு சிறந்த நாடக நடிகை. இலங்கை வானொலியில் இராஜேஸ்வரியுடன் பல நாடகங்களிலும் உரைநடைச் சித்திரங்களிலும் பங்குபற்றியிருக்கிறேன். அப்பொழுதே அவருடைய திறமையையும், எதனையும் உடனே கிரகிக்கும் ஆற்றலையும் கண்டு வியந்திருக்கிறேன்.

இவரை வாழ்த்துவதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

*7, Paradise Place*
*St Clair*
*NSW 2759, Australia*
*E.Mail : sss@ tig.com.lk*

வீ. சுந்தரலிங்கம்
(சுந்தா)

---

## *வாழ்த்து*

***அரிது அரிது மானிடர் ஆதல் அரிது.***
***மானிடராயினும் கலைஞராய்ப் பிறப்பது அரிது.***
***கவிஞராய்ப் பிறப்பினும் உலகறிய உணர்த்துவது அரிது.***
***உலகறிய உணர்த்திய போதும் புகழ் மாலை கிடைப்பது அரிது.***
***புகழ் மாலைகள் குவிந்த போதும் அகம் கர்வம் கொள்ளாமை அரிது.***
***அகம் கர்வம் கொள்ளாத போதே கலை தெய்வீகமாகிறது.***

அரிதான அத்தனையும் தன் வாழ்க்கையில் அடையப்பெற்ற என் தோழி. 50 வருடங்கள் தொடர்ந்து அவற்றைத் தக்கவைத்துக் கொண்டது அரிதிலும் அரிது. மேலும் தொடர்ந்து அவரது இளமை மாறாத இனிய குரல் மூலம் கலைத்துறைச் சேவையாற்ற வேண்டுமென்று வாழ்த்துகிறேன். எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். திரைவானில் ஒரு இளமைக் குயில் இராஜேஸ்வரி என்றால் அலைவானிலும் ஒரு இளமைக் குயில் அவரும் ராஜேஸ்வரி.

*விசாலாட்சி ஹமிட்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

அன்புச் சகோதரி இராஜேஸ்வரி சண்முகம் முதலில் வானொலி நாடக நடிகையாக, கொடுத்த பாத்திரமாக மாறி குரல் வளத்தால் என்னைத் தன் ரசிகையாக்கிக் கொண்டவர். நான் இலங்கை வானொலி தேசிய சேவையில் பெண் அறிவிப்பாளராகக் கடமை புரியத் தொடங்கிய காலத்தில் என்னைப் போல் பெண்கள் பலர் இத்துறையில் சேர்ந்து சாதனை படைக்க வேண்டும் என்று விரும்பினேன். என் எண்ணம், நான் கடமையாற்றத் தொடங்கிய சில ஆண்டுகளில் பலிதமாகி விட்டதென்றால் அது இராஜேஸ்வரி போன்ற திறமையான அறிவிப்பாளர்கள், இத்துறைக்கு வந்ததுதான்.

குரல் வளத்துடன் இனிய தமிழ் மொழியின் வளமும் சேர்ந்து ஒலிக்கச் செய்ததால், வர்த்தக விளம்பரங்களையும் கேட்பதற்கு இனிய இராகமாக்கிய பெருமை இவரைச் சார்ந்தது. அறிவிப்பாளர் என்றால், கொடுத்த பிரதியை வாசித்து விட்டு செல்பவர் என்ற நிலையை மாற்றி, அறிவுபூர்வமாக நிகழ்ச்சிகளைத் தயாரித்து எம்மால் வழங்க முடியும் என்று நானும் இராஜேஸ்வரியும் கங்கணம் கட்டிச் செயற்பட்டு வெற்றி கண்டவர்கள்.

நான் தயாரித்து ஒலிபரப்பிய "பெண் உலகம்" மாதர் நிகழ்ச்சி மற்றும் உரைச் சித்திரங்களில் பங்கேற்று அவர் உயிர்த்துடிப்பு ஏற்படுத்தியதை இன்று நினைவு கூர்கிறேன். தமது முன்னோடிகளை, வழிகாட்டியவர்களை நன்றியுடன் நினைவு கூரும் பண்பு அருகி வரும் இக்காலத்தில், இராஜேஸ்வரியோ தனக்கு ஆலோசனை கூறி வழி நடத்திய சிரேஷ்ட ஒலிபரப்பாளர்களில் ஒருவராக இன்றும் என்னை மதித்து அது பற்றி பகிரங்கமாக வானொலியிலும் மேடையிலும் அறிவித்த பாங்கினை மதிக்கின்றேன்.

ஒரு தடவை நாம் இருவரும் அட்டாளைச்சேனை ரசிகர்களை ஒருங்கு சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கு நேயர்கள் மத்தியில் பெண் அறிவிப்பாளர் களாகிய எங்களுக்கு எவ்வளவு மதிப்பு உண்டு என்பதை நேரில் அறியும் வாய்ப்புக் கிடைத்தது. இராஜேஸ்வரி பல நேயர்களின் இதய ராகமாக ஒலித்துக் கொண்டிருப்பவர் என்பதையும், அன்று கண்டு மகிழ்ந்தேன். அவர் சூழலை மறந்து கடமையில் திளைக்கும் பாங்கு கண்டு பல தடைவைகள் வியப்புற்றுள்ளேன்.

திறமை மட்டும் இருந்தால் போதாது. ஒரு அறிவிப்பாளருக்கு அர்ப்பணிப்பும் ஆர்வமும் அவசியம் என்று அறிவிப்பாளர் பயிற்சி நெறிகளில் நிபுணர்கள் வலியுறுத்திக் கூறுவார்கள். இந்த அறிவுரையை ஏற்று அர்ப்பணிப்புடன் தன் கடமையைச் செய்த காரணத்தினால் நேயர்களின் அபிமானத்தைப் பெற்றவர் இராஜேஸ்வரி. இளம் ஒலிபரப்பாளர்கள் இதனை கருத்தில் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் பல இராஜேஸ்வரிகள் ஒலிபரப்புத்துறையில் குயில்களாகி இனிமையாகக் கூவ முடியும்.

வானொலிக் குயிலாம் இராஜேஸ்வரி கலைஞராக, பின் ஒலிபரப்பாளராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்து விட்டார். தொடர்ந்தும் பற்பல ஆண்டுகள், அவர் குரல் கணீர் என்று ஒலித்து தமிழ் அன்னைக்கு அணி சேர்க்க வேண்டும் என்று மனதாரப் பிரார்த்திக்கின்றேன்.

சற்சொரூபவதி நாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பணிப்பாளரின் வாழ்த்து

வானொலி என்பது மிக ஆற்றல் மிக்க சாதனமாகும். எண்ணற்ற மக்களைத் தன்பால் ஈர்த்துள்ள ஒரு காந்தமாகும். இந்த வானொலியை சரிவரக் கையாளுவதன் மூலம் பேரும் புகழும் பெற்றவர்கள் பலர். அந்த வகையில் தன் அழகுத் தமிழாலும், கணீர் என்ற குரலாலும் இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலும் இன்னும் பல வெளிநாடுகளிலும் பல்லாயிரக்கணக்கான வானொலி ரசிகர்களின் அபிமானத்திற்கு உரிய பிரபல அறிவிப்பாளராகத் திகழ்கின்றார் திருமதி இராஜேஸ்வரி சண்முகம்.

வானொலியில் நாடகக் கலைஞராக அறிமுகமான இவர், பல சவால்களுக்கு முகம் கொடுத்துத் தன் திறமையாலும் ஆர்வத்தாலும் அறிவிப்பாளராக உருவாகிச் சிறந்த பெண் அறிவிப்பாளர் என்று முத்திரை பதித்துத் திகழ்வதற்கு இன்னுமொரு காரணம் – நேரம் காலம் பார்க்காமல் வேறு விஷயங்களில் நாட்டம் கொள்ளாமல் – வானொலிக்குத் தன்னை பூரணமாக அர்ப்பணிப்புச் செய்தமையே.

இராஜேஸ்வரியின் இன்னுமொரு சிறந்த பண்பை இத்தருணத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் நிகழ்ச்சிப் பணிப்பாளராக நான் இருந்த காலத்தில் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப திடீரென்று ஏதாவது புதிய நிகழ்ச்சி செய்ய வேண்டும் அல்லது நிகழ்ச்சியில் மாற்றம் செய்யவேண்டும் என்று அவரைக் கேட்டுக் கொண்டால் முகம் சுளிக்காமல் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டு அதைத் திறம்பட முடித்துக்காட்டும் வல்லமையும் அனைவரையும் அனுசரித்துப் போகும் நல்ல குணமும் உள்ளவர்.

வானொலியோடு தன்னை முற்று முழுதாகப் பின்னிப் பிணைத்துக் கொண்ட திருமதி இராஜேஸ்வரி சண்முகம் வானொலிக் கலைத்துறையில் ஐம்பதாவது ஆண்டை நிறைவு செய்யும் இத்தருணத்திலே அவரை மேலும் பல சிறப்புக்கள் பெற்று இன்று போல் என்றும் இளமையும் இனிமையும் புதுமையும் கொண்டு மிளிர்க என மனமார வாழ்த்துவதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

என். சிவராஜா
*முன்னாள் தமிழ்ச்சேவைப் பணிப்பாளர்*



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன 6ஆம் இலக்கக் கலையகத்தில் ரசிகர்கள் முன்னிலையில் நடைபெற்ற "மத்தாப்பு" என்ற வானொலி நிகழ்ச்சியின் நேரடி ஒலிபரப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த அறிவிப்பாளரின் வாழ்த்து

இன்றைக்கு 20, 25 வருடங்களுக்கு முந்திய காலத்தில் வானொலி நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி பாராட்டைப் பெற்று விடுவது என்பது இலகுவான விடயமல்ல, அதுவும் திரைப்படப் பாடல்களைக் கொண்டே ஒலிபரப்பப்படும் வர்த்தக சேவையில், பல நிகழ்ச்சிகளை நடத்தி இலங்கையிலும் இந்தியாவிலும் பட்டங்களையும் பாராட்டுக்களையும் திருமதி இராஜேஸ்வரி சண்முகம் பெற்றுக் கொண்டார் என்பதற்கு அவரது கலைத் திறன், ஒலிபரப்புத் திறன், நேயர்களின் இரசனைக்கு ஏற்றவாறு நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் திறமை என்பனவற்றையே காரணமாகக் கூறலாம். தேசிய சேவையிலும் அவரது பங்களிப்பு சகலரது பாராட்டையும் பெற்றிருந்தது.

அவரது குடும்பம் – வானொலிக் கலைக் குடும்பம். கணவன், மனைவி, பிள்ளைகள் என்று எல்லோருமே வானொலியுடன் ஈடுபாடு கொண்டவர்கள்.

போட்டி நிறைந்த இந்தக் காலகட்டத்தில், நேயர்கள் விரும்பும் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்தும் தயாரித்து ஒலிபரப்புவதில் திருமதி இராஜேஸ்வரி சண்முகத்தின் அறிவும், திறனும், அனுபவமும் ஈடுகொடுக்கும் என்று நம்புவோம்.

அவரது கலைச் சேவை நீடிக்க இறைவன் அருள் புரிவாராக,

எஸ். நடராஜன்
01. 02. 2001 *மூத்த அறிவிப்பாளர், இலங்கை வானொலி.*

---

*56 – ஏ, டாக்டர் லெட்சுமணசாமி,*
*முதலியார் சாலை,*
*சென்னை– 78,*

காற்றைக் களிப்பாக்கும் சேவையில் 50 ஆண்டுகள் களிப்போடும் நிறைவோடும் பூர்த்தி செய்து பூரிப்போடு திகழும் இலங்கை வானொலி, திருமதி இராஜேஸ்வரி சண்முகமே! இன்று உனக்கு பிறந்தநாள் விழா! ஒலிபரப்பின் செல்வியான உனக்கு பொன் விழா. உன் ஜனன தினத்தில் தமிழ் சேவையின் பொன் விழா நிகழ்வு நடக்கப்போவதை எண்ணும் தோறும் மனம் மகிழ்கிறது. கடல் கடந்தும் உன் பணி சிறந்து விளங்குவது கண்டும் கேட்டும் தமிழக உவமைக் கவிஞன் சுரதா உன்னை வாழ்த்தி நிற்கிறேன். ஒலிபரப்பு எனும் உன் பணி, விண்வெளிப் பயணத்துக்குத் துணைவர வேண்டும் என உன்னை மனமார வாழ்த்துகிறேன். தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறிந்த கவிதைத்துறையிலும், இலக்கியத் துறையிலும், ஒலிபரப்புத் துறையிலும் உன் பங்களிப்பு, என்னையும் பெருமிதம் கொள்ளச் செய்கிறது. வாழ்க வளமுடன்.

*அன்புடன்,*
*உவமைக் கவிஞன்,*
சுரதா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குயிலின் குரலுக்கு வயது..... (என்றுமே) 16

கடல் கடந்த தமிழகத்திலே....... பத்து வானொலி நிலையங்கள் இருந்தும் கூட, அங்கு வாழும் ஆறு கோடித் தமிழ் மக்களின் அபிமானம் பெற்ற வானொலியாக, எமது இலங்கை வானொலி திகழ்வதன் காரணம் எமது முன்னோடி அறிவிப்பாளர்களின் காலந்தொட்டு நாம் பேணி வரும் தமிழின் தரம்.....

அந்தத் தரமான தமிழோடு இசைந்த, இனிய குரல்வளம் கொண்ட அறிவிப்பாளர்கள் மீது, தமிழக மக்கள் கொண்டிருக்கும் மரியாதை கலந்த அபிமானத்தை நேருக்கு நேர் தரிசிக்கும் பாக்கியம் மிகச் சிலருக்கே கிடைத்துள்ளது.

அந்த மிகச் சிலருள் "வானொலிக் குயிலாக"த் தமிழகத்திலேயே அவரது அபிமானிகளால் பட்டமளித்து கௌரவிக்கப்படும் பெரும்பேறு பெற்ற, நமது வானொலிக் குடும்பத்தின் மூத்த சகோதரி திருமதி இராஜேஸ்வரி சண்முகம் அவர்கள் பொன் விழாக் காணும் இவ்வேளையில்.......
அவரது கலைப் பாதையும் மூன்றாம் கட்டத்திலே உடன் பயணித்தவர்கள் வரிசையில் நானும் ஒருவன் என்ற வகையில் மனமகிழ்ச்சி அடைகிறேன்.

நமது ஒலிபரப்பாளர்களில், தமது வாழ்வின் பெரும் பகுதியை வானொலி நிலையத்திற்கே அர்ப்பணித்து வாழ்ந்தவர்கள் மிகச் சிலரே. அந்த வரிசையில், சகோதரி இராஜேஸ்வரி சண்முகம் அவர்கள் தன் குடும்பத்திற்காக செலவிட்ட நேரத்தை விட நமது வானொலிக்காக, அர்ப்பண சிந்தையுடன் செலவிட்ட காலமே அதிகம். 1952ம் ஆண்டிலே ஒரு இளங் கலைஞராக வானொலி நிலையத்தில் அடியெடுத்து வைத்த காலம் தொட்டு, இன்றுவரை முன்னோடிகளாய் விளங்கியவர் பலரின் வழிகாட்டலிலே தான் பயின்ற வித்துவத்தையெல்லாம் செருக்கின்றிப் பக்குவத்தோடு காட்டிவந்ததால்தான் இன்று அவர் ஒரு சரித்திரமாக விளங்க முடிகிறது.
பன்முகத்திறமை வாய்ந்த வானொலிக் கலைஞராக அவர் பங்கெடுத்துச் சிறப்பித்த நாடகங்களோ பல நூறு.
மேடை நாடங்களில் பெண்களது பங்களிப்பு அரிதாக இருந்த காலத்திலேயே இவரது பங்களிப்பு பெரும் அறிஞரது பாராட்டுக்குரியதாக விளங்கியது. இவரது அன்புத் துணைவர் சி. ஷண்முகம் அவர்கள் சிறுவர் மலருக்காக எழுதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நாடகங்களில் நானும் ஒரு சிறுவனாக நடித்த காலந் தொட்டு, மேடைக்காக அவர் எழுதிய நாடகங்களில் யாழ் நகர் வரை மேடையேறிய "சட்டத்தின் கரங்கள்" நாடகத்தில் நடித்த காலம் வரை, இவரது முழுக்குடும்பமுமே கலைக்காகத் தங்களை அர்ப்பணித்து வாழ்ந்து வந்த பாங்கு கண்டு வியந்திருக்கிறேன்.

பின்னாளில், 1967ம் ஆண்டு பகுதிநேர அறிவிப்பாளர் தேர்விலே நானும் திருமதி இராஜேஸ்வரி ஷண்முகமும், இன்னும் மூவரும் தெரிவாகி 6 மாத கால பயிற்சியும் ஒன்றாகவே பெற்றோம். 1969ன் இறுதியில்தான் சகோதரி இராஜேஸ்வரி அறிவிப்பாளராக இணைய முடிந்தது. அன்றுமுதல் எமது சேவைக்கு ஒரு புதுத் தெம்பு கிடைத்தது என்றால் அது வெறும் புகழ்ச்சியில்லை. காரணம் பெண் அறிவிப்பாளர்களில் நாடகத் துறையில் நல்ல தேர்ச்சியுடன் விளங்கிய அவரால் எமது விளம்பரங்கள் புது மெருகு பெற்றன. நேயர் ஆக்கங்களில் பாத்திரப் படைப்புகளுக்கு உணர்ச்சி பொங்க அவரால் உயிர்கொடுக்க முடிந்தது. ஆண் அறிவிப்பாளர்கள் திறமைக்குக் களமாயிருந்த "இசையும் கதையும்" இவரது வருகைக்குப் பிறகு பெண்ணின் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் அற்புதமான கதைகளுக்குக் களமாக அமைந்தது. "பூவும் பொட்டும்" பெருமைபெறவைத்த இவரது உழைப்பும் காலத்தால் மறக்க முடியாதது.

அறிவிப்பாளரான பிறகும்கூட நாடகத்துறை மீதிருந்த இவரது பற்று "நெஞ்சில் நிறைந்தவளாக" வெளிப்பட்டபோது இராஜேஸ்வரி சண்முகத்தை எல்லோருமே மறந்து, "லக்ஷ்மி" எனும் கதாபாத்திரத்தின்மீது பாசம் கொண்டு, அவள் சிரித்தபோதெல்லாம் சிரித்து அழுதபோதெல்லாம் அழுது நெஞ்சு நெகிழ்ந்து ரசித்த காலமெலாம்...... காற்றிலே வரைந்த கவிதைகளாய் மறைந்து மறந்து போய்விட்டது. கவிதைகள் மேல் காதல்கொண்ட இவர் பாடல்களை அறிமுகப்படுத்துவதே வசனகவிதைச் சாயலில் அமைந்திருக்கும். இந்த ஈடுபாட்டின் காரணமாகவே தென்னிந்தியாவுக்கான ஒலிபரப்பிலே நீண்டகாலம் இவர் நடத்திய பொதிகைத் தென்றல் நிகழ்ச்சி, பல இளங் கவிஞர்களை ஊக்குவித்து வந்துள்ளது.

தொலைக்காட்சி வந்தபின்னரும்கூட, நேயர்களது அன்றாட அலுவல்களுக்கு இடையூறு செய்யாமல் அவர்களைச் சென்றடையக்கூடிய சக்தியுள்ள சாதனம் வானொலி ஒன்றே என்ற உண்மையை பரிபூரணமாக உணர்ந்ததால் முழுக்க முழுக்க வானொலியோடு தன்னைப் பின்னிப்பிணைத்துக் கொண்டு வாழ்ந்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலி நிலையமே தனது முதல் வீடு என்பதை நிரூபிக்கும் வகையில் இளைப்பாறிய பின்னரும் ஒரு பகுதி நேர அறிவிப்பாளராகவேனும் என் பணி தொடரும் என வித்துவச் செருக்கின்றிப் பக்குவத்தோடு பணியாற்றும் சகோதரி இராஜேஸ்வரியின் குரலுக்கோ.... இளைப்பாறும் காலம் இறுதிவரை இல்லை. இந்த வானொலிக் குயிலின் குரல் மேலும் பன்னெடுங்காலம் நலமுடன் ஒலித்துத் தமிழ்த் தொண்டாற்றிட எல்லோருக்கும் பொதுவான இறையின் திருவருளை வேண்டி வாழ்த்துகிறேன்.

குயிலுக்கொரு நிறமிருக்கு
அதன் குரலுக்கொரு நிறமிருக்கா......?
இராஜேஸ்வரி சண்முகத்தின் குரலுக்கொரு வயதிருக்கா?
அது என்றும் பதினாறு..

*அன்புச் சகோதரன்*
**B. H.** அப்துல் ஹமீத்

---

# *வாழ்க வளமுடன்*

உலகளாவிய புகழ் பெற்ற மங்கை கலிங்கச் செல்வம் பல உற்ற நங்கை,
பலராலும் போற்றப்படும் எம் அங்கவை
சிலநிமிடமும் சோம்பலுறாத சங்கவை
சிறுவர் மலர் முதல் செய்திகள் வாசிப்பதிலும்

பொங்கும் புன லாலும் போற்றப் பெற்றவள்
சுகமான சொல்லால் சொக்க வைப்பவள்
அமுதமாகப் பேசும் இங்கிதம் தெரிந்தவள்
நாவில் சரஸ்வதி நடமாடும் செல்வி

பூவாய் மலராய் மணந்தரும் பூவை
தேவியின் பெயர் கொண்ட இராஜேஸ்வரி
காவியங்கள் படைக்கும் கவிவாணி அம்சம்
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து
நல்லதெல்லாம் செய்து நலமுடன் வாழ்ந்திடவே
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழ
பல்லாண்டு வாழ வாழ்த்திடும் அம்மா!

*நாகலெக்ஷ்மி சத்தியவாகீஸ்வரன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைர வரிகளால் வையகத்தை வசீகரித்துவிட்ட வைரமுத்துவையே வசீகரித்தது அந்தக் குரல்

அவ்வப்போது மனசுக்குள் மழை பொழியும் உங்கள் மணிக்குரலைக் கேட்டுக் கொண்டேயிருக்கிறேன்.

சில்லென்ற தமிழோடு ஒரு சிநேகபாவத்தோடு நீங்கள் என் முன்னால் நாற்காலி போட்டு அமர்ந்து பேசுவதான அனுபவத்தை ஒவ்வொரு முறையும் உங்கள் குரல் எனக்கு வழங்குகிறது.

அவ்வப்போது கவித்துவம் தெறிக்கும் உங்கள் மேற்கோள்களையும் தமிழை ஆராதிக்கும் உங்கள் அந்தரங்க நேசத்தையும் கேட்கும்போதெல்லாம் கிறுங்கிப் போய்விடுகிறேன்.

இன்று பொதிகைத் தென்றலில் 'ஆண்டாள்' கேட்டேன் 'மத்தளம் கொட்ட' என்ற பாடல் உங்கள் மந்திரக் குரலில் கேட்டபோது தமிழை ஆண்டாள் அவளென்றால் ஆள்பவர் நீங்கள் என்று தெரிந்து கொண்டேன்,

சுகம்; அவ்வளவு சுகம்.
இளைய தலைமுறை தமிழ் உணர்வைவிட்டு மெல்ல மெல்லத் தள்ளிப் போய்க் கொண்டிருக்கிற ஒரு காலகட்டத்தில் ஈராயிரம் ஆண்டுகளாய் வேரோடிக் கிடக்கிற தமிழ் இலக்கியத்தின் பெரும் பரப்பினை, பரபரப்புக்கு மத்தியில் அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கும் உங்களை நான் வணங்கி மகிழ்கிறேன்.

ஒரு தமிழ்க் கவிஞன் என்ற முறையில் கண்ணீர் கசிய நன்றி சொல்கிறேன்.

பாடல்களுக்கு மத்தியில் கவிஞர்களின் தேர்ந்த சொற்றொடர்கள் மேற்கோள் காட்டுவது உங்களின் ஆழ்ந்த கல்வியையும், புலமையையும், ரசனையையும் புலப்படுத்துகிறது.

என் வரிகளையும் மேற்கோள் காட்டியதைக் கேட்டபோது சிலிர்த்துப் போனேன். அந் நிகழ்ச்சியைக் கேட்டபோது என் இதயத்திற்கு இறகு முளைத்தது. பாடல்களை உங்கள் அறிவிப்பு மிஞ்சிவிடுகிறது.

★★★★★

போன வாரம் பொதிகைத் தென்றல் கேட்டேன் (வான்போலே வண்ணம்) உங்கள் குரலில் ஏதோ ஒரு காந்தம்;
கண்ணுக்குத் தெரியாமல் நெஞ்சுக்கள் விழும் அமுதம்

திரைப்படப் பாடலில் திருக்குறள் இலக்கியத்தை மிக அழகாகச் சொல்லியிருந்தீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல இலக்கியரசனை உடையவர்களால் மட்டுமே
இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைத் தர முடியும்.

உங்கள் தொகுப்புரையும் பாடல் தேர்வும் அற்புதம்.
தொடர்ந்து செய்யுங்கள்.

நீங்கள் செய்வது தொழிலல்ல; தொண்டு.
ஒரு லட்சம் மக்களுக்காக ஒரே குரலில்
நின்று கூவுகிற குயில் நீங்கள்.



இலங்கை வானொலியின் தமிழ்க்குயில்
அன்புச் சகோதரி இராஜேஸ்வரி சண்முகம்
அவர்களே!

வைரமுத்து பேசுகிறேன்; வணக்கம்.
'பொதிகைத் தென்றல்' என்ற வளமான
தமிழ் நிகழ்ச்சியைத் தொண்ணூற்றொன்பது
வாரங்கள் தொடர்ந்து செய்த உங்கள்
வரலாற்றுச் சாதனையை வணங்குகிறேன்.

பெரும்பாலும் காதுகளைத் தொடும் நிகழ்ச்சிகளையே
கேட்டுக் கேட்டுக் களைத்துவிட்ட
நேயர்களின் மனசைத் தொடும் தென்றல்
உங்கள் பொதிகைத் தென்றல்.
மல்லிகைத் தோட்டத்துக்கு மத்தியில் முளைத்த
மூலிகைச்செடி உங்கள் நிகழ்ச்சி.

தொடர்ந்து கேட்கும் வாய்ப்பில்லை என்றபோதிலும்
அவ்வப்போது நானும் பொதிகைத் தென்றலில்
கற்பூரமாய்க் கரைந்து போயிருக்கிறேன்.
தமிழ் நேயர்களும் படைப்பாளிகளும் பொதிகைத்
தென்றலுக்காகத் தமிழைத் தோண்டித் தோண்டிக்
கொடுக்க நீங்கள் அதைத் துடைத்துத் துடைத்துப்
படைக்க சுகம் – சுகம் – சுகமோ சுகம்!

ஈராயிரமாண்டு இலக்கிய வரலாறு கொண்ட
நம் தமிழ் இந்த இருபத்தோராம் நூற்றாண்டின்
தொடக்கத்திலும் எப்படியெல்லாம் புதிய நரம்புகளுக்கு
ரத்தம் பாய்ச்சுகிறதென்பதைத் திளைத்துத் திளைத்து
சுவைத்துச் சுவைத்து – மகிழ்ந்து மகிழ்ந்து – நெகிழ்ந்து
நெகிழ்ந்து புல்லரிக்கும் உச்சரிப்பில் நீங்கள்
சொல்லெடுத்துச் சொன்னபோது நான் மீண்டும்
ஒரு கல்லூரி மாணவனாய்க் கற்கத் தொடங்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்திர உலகத்திற்குத் தமிழைக் கொண்டு சேர்த்த
மந்திர நிகழ்ச்சி உங்கள் பொதிகைத் தென்றல்
காலங் காலமாய்த் தமிழ் காத்த கவிஞர் பரம்பரையின்
கடைக்குட்டி என்ற முறையில் உங்களுக்கு நான்
நாத்தழுதழுக்க நன்றி சொல்கிறேன்.

வீசும் திசைகளை வைத்தே காற்றுக்குப்
பெயரிட்டான் தமிழன்.
வடக்கே இருந்த வருவது வாடைக்காற்று
மேற்கே இருந்து வருவது கோடைக்காற்று
கிழக்கே இருந்து வருவது கொண்டல்காற்று
தெற்கே இருந்து வருவதுதான் தென்றல்காற்று.

எங்களுக்குத் தெற்கேயிருந்து வீசுகிற நீங்கள்
தென்றலாகத்தானே இருக்க முடியும்!
இது அர்த்தமுள்ள தென்றல்; ஆனந்தத் தென்றல்
பருவம் கடந்துவீசும் பைந்தமிழ்த் தென்றல்.

ஒரு மழைத்துளி நதியில் விழுகிறது என்பது சந்தர்ப்பம்.
ஆனால் அந்தத் துளி பிறகு நதியாகவே மாறி விடுகிறது.
அதைப் போலத்தான் வானொலி அறிவிப்பாளர் பணி,
திருமதி இராஜேஸ்வரி சண்முகம் அவர்களுக்குக் கிட்டிய சந்தர்ப்பம்.

ஆனால் – அவர் தமிழ் அறிவிப்பில் தொடங்கித்
தமிழாகவே கரைந்து போயிருக்கிறார் என்பதே
அவரது சாதனை

பழந்தமிழுக்கும் புதுத் தமிழுக்கும் பாலம் கட்டும்
ஓர் அரிய பணியைப் 'பொதிகைத் தென்றல்'
மூலமாய் அவர் ஆற்றி வருகிறார்.

உலகத் தமிழ் வானொலிகளின் மிகச் சிறந்த
நிகழ்ச்சிகளுள் ஒன்றாகப் 'பொதிகைத் தென்றல்'
திகழுகிறது என்று என்னால் போற்றிச் சொல்ல முடியும்.

தமிழுக்குள் விழுந்து விழுந்து உச்சரிக்கும்
அவரது வாசகம் – சொற்களுக்குள் கரைந்து
போகும் அவரது ரசனை – செவியோடு வந்து
மனதோடு பேசுவதான பாவம் –

இவையெல்லாம் இராஜேஸ்வரி சண்முகம் அவர்களின்
தனிச் சிறப்புகள்.
வசந்தத்தில்தான் குயில் கூவுமாம்!
இந்தக் குயிலுக்கு வருடமெல்லாம் வசந்தமாகவே
திகழ வாழ்த்துகிறேன்.
வாழ்த்துக்களோடு.......






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மலரை மலர வைக்கும் மலர்வனம்!

*இனிமையான குரல் படைத்த இராஜேஸ்வரி சண்முகம்*
*இலங்கை நாட்டு வானொலியால் உலகமெல்லாம் அறிமுகம்*
*கனிவும் பணிவும் கலந்தமுகம் இவருடைய திருமுகம்*
*கருணைமிக்க இவர் இதயம் கவிதைகளின் துறைமுகம்!*

*வானொலியில் பணி தொடங்கி ஐம்பதாண்டு முடிந்தது*
*வளர்பொதிகைத் தென்றல் இவர் குரலைக்கேட்டு நடந்தது*
*தேனொலியா யாழொலியா என்னவென்று சொல்வது*
*தேசத்திலே இவர்குரலை எவரின்குரல் வெல்வது!*

*அன்பினுக்கும் பண்பினுக்கும் அன்னை இவர் உறைவிடம்*
*ஆற்றல்மிக்க அறிவினிலே ததும்பிடாத நிறைகுடம்*
*என்னைப் போன்ற கவிஞர்க்கெல்லாம் இவர் தருவார் அடைக்கலம்*
*இலங்கையிலே தமிழ் மலரை மலர வைக்கும் மலர்வனம்!*

*தென்னிலங்கைத் தீவினிலே அமைதிவந்து சேரவே*
*சீர் விளங்கப்பேர் விளங்க இராஜேஸ்வரி வாழ்கவே*
*இன்றுபோல் இன்றுபோல என்றும் இவர் வாழ்கவே*
*இரண்டு நூறு வயதுகண்டு வாழ்க வாழ்க வாழ்கவே!*

கவிஞர் முத்துலிங்கம்

---

இராஜேஸ்வரி சண்முகம் இலங்கை வானொலி வர்த்தக சேவையினால் ஒலிபரப்பப்பட்ட நாடகங்களில் பல பாத்திரங்களை ஏற்று அந்தப் பாத்திரங்களாகவே மாறி முத்திரை பதித்தவர். இவரின் கணவர் அமரர் சி. சண்முகம் எழுதிய 'நெஞ்சில் நிறைந்தவள்' நாடகம் இவரைப் புகழின் உச்சிக்கே கொண்டு சென்றது.

இலங்கை வானொலியிலும் ஏனைய ஒலிபரப்புச் சேவைகளிலும் பணியாற்றும் பெண் அறிவிப்பாளர்கள் எவராலும் எட்ட முடியாத உயரத்தில் தனிச் சிறப்புடன் விளங்குபவர் இராஜேஸ்வரி. அவருக்கு நிகர் அவர்தான் என்றால் மிகையாகாது.

நிகழ்ச்சிகளுக்கு ஏற்றாற்போல் தனக்கென ஒரு பாணியை வகுத்து அந்தப் பாணியில் நிகழ்ச்சிகளைத் தொகுத்தளித்தவர். இத்தகைய ஒருவரை ஒலிபரப்பாளராகப் பெற்றதற்காக நாம் பெருமைப்பட வேண்டும்.

*தினகரன் – 07.01.2001*

சி. ப. சீலன்,
அவிசாவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கேற்ற அரங்கேற்றம் ... (2001

**திறனாய்வுத் திறமைகாட்டும் நாடறிந்த கலை இலக்கிய விமர்சகர் திரு. கே. எஸ். சிவகுமாரன் பார்வையில்பட்ட "வானொலிக்குயில்"**

# இலங்கைக்குப் பெருமைதரும் ஒலிபரப்பாளர்

ஒலிபரப்புத் துறையில் 50 வருடங்களாக ஈடுபட்டுவரும் திருமதி இராஜேஸ்வரி சண்முகம் அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவிப்பதில் நானும் பங்கு கொள்வது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

தனிநபர் என்ற முறையில் அவர் அன்று முதல் இன்றுவரை மிக எளிமையான தோற்றமும், பிறரை மதிக்கும் பண்பும், கண்டிப்புக்களை ஏற்றுத் திருத்திக் கொள்ளும் பணிவும் கொண்டவர். இவருடன் சம்பந்தப்படும் பொழுது நான் அவதானித்த கூறுகள் இவை.

1950 களின் முற்பகுதியில் இளைஞனாக நானும் வானொலி ஊடகத்துள் பிரவேசித்த பொழுது இவரை முதலிற் கண்டேன். அப்பொழுதே அவர் பிரசித்தி பெற்ற வானொலிப் பங்களிப்பாளராக இருந்தவர். பின்னர் மறந்தே போய்விட்ட மறைந்த மற்றொரு திறமைசால் எழுத்தாளராகிய சி. சண்முகத்தின் துணைவியானார். வானொலி ஒலிபரப்பாளராக இருந்த கொண்டே (வானொலி நாடகங்கள் விசேஷமானவை) மேடை நாடகங்களிலும் நடித்து வந்தார். (1960களில் கொழும்பு மேடைகளில் மேடை நாடக ஆர்வம் உற்சாகப்படுத்தக் கூடிய விதத்தில் அமைந்து வந்தன.)

1970களில் கொழும்பு மேடை நாடகங்கள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக அமைந்தன. இராஜேஸ்வரி சண்முகம் அவர்கள் "கர்ணன்" என்ற நாடகத்தில் திரௌபதியாக மேடையில் தோன்றி, நல்ல தமிழைச் சரியான உச்சரிப்புடன், ஏற்ற இறக்கங்களுடன் உரிய அளவில் பேசி, தத்ரூப முக உடல் வழியான வெளிப்பாடுகளைப் பிரயோகித்துத் தான் ஒரு சிறந்த நடிகை என நிரூபித்தார்.

பின்னர் இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வர்த்தக சேவையில் அறிவிப்பாளராகச் சேர்ந்தார். அக்காலத்தில் 1960களின் பிற்பகுதியில் அறிமுகமாகிய பெண் அறிவிப்பாளர் புவனலோஜனி வேலுப்பிள்ளை (பின்னர் புவனலோஜனி நடராஜசிவம்). இவருடைய குரல் வளம் வேறு. இராஜேஸ்வரியினுடையது வேறு. ஆயினும், வானொலியில் இவர்களுடைய குரல்களைக் கேட்கும் பொழுது நான் குழப்பமடைந்து விடுவது உண்டு.

வர்த்தக சேவையில் இராஜேஸ்வரி சண்முகம் அவர்கள் தொகுத்து ஒலிபரப்பிய நிகழ்ச்சிகள் பல. அவற்றை அண்மைக்கால வானொலி நேயர்கள் விரிவாக அறிவர். இராஜேஸ்வரி சண்முகம் ஓர் எழுத்தாளரின் மனைவியாக இருந்ததனாலும், இலக்கியப் பின்னணிகளிற் பரிச்சயம் கொண்ட வராயிருந்ததனாலும் இயல்பாகவே கவிதை வளமுடைய சொற்கள் இவருக்கு வாலாயமாயின. எனவேதான், இவர் பாடல்களை அறிமுகப்படுத்தும் பொழுது இத்தகைய வியாக்கியானங்களை இடைவிடாது வானொலியில் தந்து வந்தார். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வேளைகளில் என் போன்ற நேயர்களுக்குச் சிறிது பொறுமையிழக்கச் செய்தது. எதனையும் அளவோடு, பொருத்தமுடையதாகச் செய்யும் பொழுது, எடுத்துக் கொண்ட பொருளும் செயலும் செயற்பாடுடையதாக அமைகிறது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சல்லவா?

இராஜேஸ்வரி சண்முகம், நமது மதிப்பிற்குரிய பி. எச். அப்துல் ஹமீட் போலல்லாது விட்டாலும், பிறநாடுகளில் ஓரளவு நன்கறியப்பட்டவர்.

அனுபவம் வாய்ந்த இந்த ஒலிபரப்பாளர் செய்தி வாசிப்பாளராகவும் பலருடைய கவனத்தைப் பெற்றவர். தெளிவான, சரியான உச்சரிப்பு, பிறமொழிச் சொற்களை உரிய சப்த நலனுடன் உச்சரித்தல், செய்தியின் பின்னணித் தகவல்களைப் பவ்வியமாகச் செய்தி ஆசிரியர்களிடமிருந்து கற்றுக் கொள்ளல் போன்ற பல அத்தியாவசிய உறுதிப் பொருள்களைத் தம்வசமாக்கியதனால், இவர் செய்தி வாசிப்பு கச்சிதமாகப் பெரும்பாலும் அமைவதுண்டு.

இவ்வாறான பல நல்லியல்புகளைத் தனதாகக் கொண்ட இராஜேஸ்வரி சண்முகம் அவர்கள் நமது நாட்டுப் பெருமைகளுக்குச் சான்று. வாழ்த்துக்கள்.

கே. எஸ். *சிவகுமாரன்*

---

## பேசும் குயில் இராஜேஸ்வரி

தசாப்தங்கள் ஐந்துவானின் அலைகள் மீது
தவழ்ந்து வந்தெம் செவிப்பறையை மெல்லத் தட்டி
இசைத்ததென்ன செந்தமிழோ அமுதோ பாகோ
இறையளித்த வரமாமோ குரல்செந் தேனோ
திசையெட்டும் தேர்ந்தகுரல் என்னும் பாங்காய்த்
தித்திக்கத் தித்திக்கத் தமிழைத் தந்தாய்
வசியமென்ன செய்தாய் நீ யம்மா ராஜேஸ்
வரி யுனக்கு ஈடில்லை வாழி வாழி

❋ ❋

பேசுகின்றார் கவிஞருன்றன் குரல்ம யங்கிப்
பேசுங்குயில் என்றேதான் என்னைக் கேட்டால்
வீசுகின்ற தென்றலிலே குழைந்து மேவும்
வற்றாத ஜீவகான நாத மென்பேன்
ஓசைதான் தமிழுக்கு உயிரா மென்று
உணர்ந்தனையோ அன்றியுன்றன் பிறப்பின் பேறோ
மாசில்லா மொழிக்கின்னும் மெருகு கூட்டும்
மர்மத்தை எங்குகற்றாய் வாழி வாழி

❋ ❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைக்கு உரம்சேர்ப்பாய் வழங்கும் வாகால்
வரிவரியாய் நெஞ்சத்துள் பதிய வைப்பாய்
கோத்தெடுத்த சரம்போல சொற்கள் கூட்டிக்
கேட்பவரின் செவிகளிற்றேன் பாயச் செய்வாய்
காந்தத்தின் ஈர்ப்பு உன்றன் குரல்த னுக்குக்
கொடுத்ததுயார் சொல்*குரலின் செல்வி* எங்கள்
தீந்தமிழும் மணக்குதுல கெங்க ணும்நின்
தூயமொழி உச்சரிப்பால் வாழி வாழி

❊ ❊

வயதேற முதுமைவரும் குரலும் மங்கும்
வார்த்தைகளுந் தடுமாறும் ஓசை குன்றும்
நியதியிது தாமெவர்க்கும் பொதுவாம் நீயோ
நித்தியநற் குரல்வளத்தின் பேறு கொண்டாய்
வயதுநூறு வாழ்ந்திட நீ வேண்டுஞ் செஞ்சொல்
வளையாதுன் நாவினிலே தவழ வேண்டு ம்
ஜெயமேதான் வாழ்விலென்றுஞ் சேர்க வென்றே
இதயத்தால் வாழ்த்துகின்றேன் வாழி வாழி

❊ ❊

மங்கையர்க்காம் எனத்தனித்தே "பூவும் பொட்டும்"
மழலையர்க்கு வேறாக "மழலைச் செல்வம் "
"பொங்கும்பூம் புனல்" என்றோர் நிகழ்ச்சி மூலம்
பெயர் கேட்ட அனைவரையும் புதுநீ ராட்டி
எங்கணுமே"வீட்டுக்கு வீடு " தோறும்
இயல்புகளை அதேதலைப்பில் வெளிக்கொ ணர்ந்தாய்
சங்கத் தமிழ் தனைப் "பொதிகைத் தென்றல்" வாயால்
தந்தவள்நீ இன்னும்பல லாண்டு வாழி

❊ ❊

ஓடிவிளை யாடு(நீ) பாப்பா வென்றே
ஒருசிறுவர் நிகழ்ச்சிதந்தாய் ஒன்றோ டொன்று
கூட "இசை யுங்கதையும் " தந்தாய் "பேசும்
சித்திரமும் " உன்படைப்பே நெஞ்சில் நின்றாய்
பாடலிலே வல்லவனாம் பார திக்கும்
பட்டுக் கோட் டைப்புலவன் தனக்கும் பாட்டால்
கோட்டைகட்டி வாழ்ந்தகண்ண தாச னுக்கும்
காற்றலையில் புகழ்சொரிந்தாய் நீடு வாழி.

❊ ❊

- ஜின்னாஹ்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செய்தியை, செய்தியாய் சொல்பவர் சொல்லுகிறார் ஒரு செய்தி.*

# "சொல்" ஆட்சி புரியும் "ராஜேஸ்"

வானொலியில் குரல் கொடுப்பது என்பது இப்போது சர்வ சாதாரணமான நிகழ்ச்சி. இலங்கை வானொலியும் தனியார் வானொலி நிலையங்களும் இன்று கலைஞர்களுக்குக் கூடுதல் இடமளித்து வருகின்றன. ஆனால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் இத்தகைய நிலைமை இல்லை. வானொலியில் குரல் கொடுப்பது என்பது இறைவன் கொடுத்தவரம் என்று கருதப்பட்ட காலம். ஒரேயொரு இலங்கை வானொலியில் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்தில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகிய காலம் அது. பெரும் எண்ணிக்கையான கலைஞர்கள் போட்டியிட்டுக் கொண்டிருந்த காலம் அது. இன்றுபோல் தொடர்புச் சாதன வசதிகள் அதிகம் இல்லாத காலம் அது. நேயர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிகழ்ச்சிகளை நடத்த முடியாத காலம். அந்த அளவுக்கு நாம் பின்தங்கியிருந்த காலம். இப்போது நிலைமை மாறிவிட்டது. நினைத்த மாத்திரத்தில் தொடர்பு கொள்ளவும் கருத்துக்களைத் தெரிவிக்கவும் வாய்ப்புகள் அதிகமாகிவிட்ட காலம் இது. இராஜேஸ் இந்த இரண்டு காலப் பகுதிகளுக்கும் ஒரு பாலமாக விளங்குபவர். வானொலியில் குரல் கொடுத்துப் பொன் விழா காணும் பொன்னான சந்தர்ப்பத்தைப் பெற்றிருப்பவர் இராஜேஸ்.

இராஜேஸ்வரி குரல் கொடுத்த காலத்தில் நான் குழந்தை. என்னுடைய வீட்டில் வானொலிப் பெட்டி இருக்கவில்லை. அவர் செய்தி வாசித்தபோது, நாடகங்களில் நடித்த போது, நான் மாணவன்.

எனவே அவரைப் பற்றி ஆய்வு பழைய நினைவுகள் மீட்டுப் பார்ப்பதில் இருந்தே ஆரம்பமாக வேண்டும். எந்தவொரு துறைக்கும் இலக்கணம் உண்டு. இந்த வகையில் வானொலிக்கும் சில இலக்கண வரம்புகள் இருக்கின்றன. குறிப்பாக, செய்தித் துறையைப் பொறுத்த வரையில் இது முக்கியமானது. "செய்தி வாசிப்பவர்" என்ற அடிப்படையில் இராஜேஸ் எந்த அளவுக்கு வெற்றி பெற்றிருக்கின்றார் என்பது இங்கு ஆராயத்தக்கது.

வானொலியில் "பேசு" கின்றவர்கள் இரண்டு வகைப்பட்டவர்கள். ஒருவர் "அறிவிப்பாளர்" மற்றவர் "செய்தி வாசிப்பவர்". ஆங்கிலத்தில் ANNOUNCER என்றும் READER என்றும் முறையே இவர்களை அழைக்கின்றோம். இந்த அறிவிப்பாளரை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு "வாசிப்பவரை" பற்றிச் சற்றே பார்ப்போம். செய்திகளை " வாசிக்கின்றவர்கள்" எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும்? பெரும்பாலும் செய்தி வாசிப்பவர்கள் வழமையாகப் பேசுவதைவிட சற்றே விரைவாகச் செய்திகளை வாசிக்கின்றார்கள். அந்தச் செய்தி உயிரோட்டமுள்ளதாக இருக்கும் என்று அவர்கள் நம்புகின்றனர். செய்திகளைக் கேட்பவர்கள் சலிப்படைந்து விடக்கூடாது என்று அவர்கள் கருதுகின்றனர். உண்மைதான்.

ஆனால், இந்தச் செய்திகளை வாசிப்பதில் அறிவுபூர்வமான, அதாவது விஞ்ஞானபூர்வமான சில முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு செய்தி வாசிப்பவரின் வாசிப்பு வேகம் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி 1940ம் ஆண்டுகளில் சோதனைகள் நடத்தப்பட்டன. ஒரு நிமிடத்துக்கு 140 சொற்கள் வேகம் குறைந்தது என்று முடிவு செய்யப்பட்டது. அதாவது நேயர்களின் ஆர்வத்தைப் பேணுவதற்கு இது போதுமானதல்ல என்பது அந்தக் கருத்து. ஆனால், 200 சொற்கள் ஒருவருக்குச் செவிமடுக்க அதிகம் வேகமானது என்று முடிவாகியது. எனவே, நிமிடத்திற்கு 175 சொற்களே உகந்தது என்று அப்போது தீர்மானமாகியது. இது ஆங்கில மொழியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்த விஷயம் என்பதை நாம் மறந்துவிட முடியாது. இப்போது 60 ஆண்டுகள் ஆகிவிட்டாலும், நிமிடத்துக்கு 150 சொற்களே போதும் என்பதுதான் பொருத்தம். இதைவிட முக்கியமானது, இயல்பாகவே ஒரு செய்தி வாசிப்பவரிடம் இருக்கும் வேகம்தான் சரியானது என்பதை யாரும் மறுக்க முடியாது. தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் இத்தகைய இலக்கு இருந்தாலும், 10 நிமிடச் செய்திக்குத் தாராளமாக 110 – முதல் 115 வரிகள்தான் பொதுவான கணக்கில் இருக்கின்றன.

செய்திகளை "வாசிக்கும்" வேகம் இருக்கின்றதே அது, நிலையத்துக்கு நிலையம், செய்தியாளருக்குச் செய்தியாளர், மொழிக்கு மொழி வேறுபடுகின்ற ஒன்று. இருந்தாலும், புதிய "வாசிப்பாளர்கள்" எப்படியாவது இந்த 110 வரிகளுக்குள் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்வது தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் செய்யும் பெரும் பணியாக இருக்கும். ஆனால், பெரும்பாலானவர்கள் ஆரம்ப கட்டத்தில் இருக்கின்றவர்கள், புதுமை காரணமாக, அவசரம் அவசரமாக வாசித்து விடுகிறார்கள். இதற்குக் காரணங்கள் உண்டு.

இன்று நாம் கூறும் இந்த "வாசிப்பவர்கள்" பலர். தேவாலயத்தில் விவிலியம் வாசிக்கின்றவர் இருக்கின்றார். பல்கலைக்கழகத்தில் இந்த "ரீடர்" இருக்கின்றார். வகுப்பிலே புத்தகத்தை உரத்து வாசிக்கின்ற மாணவன் இருக்கின்றார். விளக்கிச் சொல்வதற்காக வாசிக்கின்ற ஆசிரியர் இருக்கின்றார். இவர்கள் எல்லோரையும் விட மௌனமாக வாசிக்கின்றவர் இருக்கின்றார். ஆனால் இங்கே எல்லோருமே வாசிக்கின்றார்கள். இவர்களின் பெயர்கள் வெளியே தெரிவதில்லை. ஆனால் செய்திகளை வாசிக்கின்றவர்களின் பெயர்களே பிரபல்யமாகின்றன.

சொற்களுக்கு அர்த்தங்கள் உண்டு. உச்சரிப்பு மாறும் போது சொற்களின் அர்த்தங்கள் மாறி விடுகின்றன. "எரி" என்ற சொல்லுக்குப் பதிலாக "எறி" என்று சொல்லிவிட்டால் மக்கள் நம்மைத் தூக்கியெறிந்து விடுவார்கள். இதுதான் எதார்த்தம். இது எந்த மொழிக்கும் பொருந்தும். ஆனால், இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் ஒரே சொல்லில் கொண்டுவர முடியும் அல்லவா. எனவேதான், இங்கு சொல்லாட்சி முக்கியத்துவம் பெறுகின்றது. உச்சரிப்பு முக்கியத்தும் பெறுகின்றது.

அது மாத்திரம் அல்ல ஒரு செய்தியை வாசிக்கும் போது, அந்த செய்தி யாரோ ஒருவர், யாரோ ஒருவருக்குச் சொல்வதாக அமைந்துவிடக்கூடாது. கேட்கின்றவர், அந்தச் செய்தி தனக்கே கூறப்பட்டதாக எண்ண வேண்டும். அப்போதுதான் செய்தி, செய்தியாகின்றது. என்ன சேதி? என்ற கேள்விக்கு இதோ செய்தி என்று கூறுகின்ற தன்மை ஒரு செய்தி வாசிப்பவருக்கு அவசியமாகின்றது. அது மாத்திரமல்ல. ஒரு செய்திக்கு எந்த இடத்தில் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பது முக்கியமானது என்கின்றார் டக்ளஸ் எட்வர்ட்ஸ். ஒருவரிடம் நாம் பேசும் போது வெறுமனே பேசிக் கொண்டு செல்வதில்லை. சில இடங்களில் அழுத்தம் கொடுக்கின்றோம். சில இடங்களில் நீரோட்டம் போல் சொல்கின்றோம். இந்த நீரோட்டம் எல்லா இடங்களுக்கும் பொருந்துவதில்லை. அழுத்தம் கொடுக்கின்ற இடத்தில் அழுத்தம் கொடுக்கும் போதுதான், சொல்லின் அர்த்தம் உறுதிப்படுகின்றது. செய்தியைக் கேட்கின்ற ஒருவர், இந்தச் செய்தி தனக்கே சொல்லப்படுகின்றது என்ற உணர்வைப் பெறுகின்றார், தனக்கே சொல்லப்படுகின்றது என்பதை ஏற்றுக் கொள்கின்றார்.

இதற்காக சொற்களை நாடகப் பாணியாக்க வேண்டிய அவசியம் கிடையாது. நாடக பாணியாக்கும் போது செய்தி அதன் உண்மைத் தன்மையை இழந்து விடுகின்றது. செய்தி என்ற தன்மையை இழந்து விடுகின்றது. இந்தப் பின்னணியில்தான் செய்தி வாசிப்பவர் என்ற வகையில் இராஜேசை நாம் ஆராய வேண்டி இருக்கின்றது. இராஜேஸ் சாதாரண பிரதிகளுக்குக் குரல் கொடுத்தவர், உரைச் சித்திரங்களுக்குக் குரல் கொடுத்தவர், நாடகங்களில் நடித்தவர். இதன் மூலம் அவர் ஒரு உண்மையைப் புரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர். வானொலி நேயர்கள் உண்மையைத் தேடுகின்றவர்கள்; எனவே, வானொலிக்கும் நேயர்களுக்கும் இடையிலான தொடர்பு, பரஸ்பரத் தன்மை கொண்டது என்பதைப் புரிந்து கொண்டவர். நாடகத்தில் நடித்தவர் என்ற காரணத்தினால், ஒரு வீரனைப் புகழ்வதற்கும் ஒரு கொள்ளையனைப் புகழ்வதற்கும் வித்தியாசம் இருக்கின்றது என்பதைப் புரிந்து கொண்டு அதற்கு ஏற்ற வகையில் அழுத்தம் கொடுத்து இராஜேஸ் வாசிப்பது வழக்கம். இதனால் அவர் செய்தியைக் கேட்பவருடன் நெருக்கத்தை ஏற்படுத்துவதில் வெற்றி பெற்றுள்ளார். ஒரு சொல்லடுக்கின் முடிவில் குரல் உச்சஸ்தாயியில் இருந்தால், அது வசனம் முடிவடையவில்லை என்பதுதான் பொருள். ஆனால், இராஜேஸ்வரியில் நாம் இந்தத் தன்மையை ஒருபோதும் காணமுடிவதில்லை.

செய்திகளை வாசிக்கும்போது அந்தச் செய்திகளில் என்ன இருக்கின்றது என்பதை அல்லது அந்தச் செய்தி என்ன என்பதை ஒரு வாசிப்பாளர் புரிந்து கொண்டால்தான் அது நீரோட்டமாக அமையும். இல்லாவிட்டால் திக்கித் திணற வேண்டிய நிலையும் ஏற்படும். இராஜேஸ் பிரதிகளை முன்கூட்டியே வாசித்து, புரிந்து கொண்டு வாசிப்பதற்கு அவருக்குப் பயிற்சி அளித்தவர்கள்தான் காரணம். தொட்டில் பழக்கம் என்று இதனைக் கூற முடியும். இலங்கையைப் பொறுத்த வரையில் தமிழ் மொழி பல பகுதிகளிலும் பல விதமாகப் பேசப்படுவதைக் காண முடியும். வடபகுதியில் ஒரு தமிழ், வன்னியில் ஒரு தமிழ், மலையகத்தில் ஒரு தமிழ், மட்டக்களப்பில் ஒரு தமிழ். ஆனால், இந்தத் தமிழ்கள் அனைத்தையும் இணைத்தவாறு, ஒரே தமிழில், எல்லோருக்கும் ஏற்றபடி, எல்லோருமே தமக்கே செய்தியைக் கூறுவதாகக் கருதும் வகையில் செய்திகளை வாசிப்பது அவ்வளவு சுலபமான கடமையாக இருக்க முடியாது. இந்த வகையில் இராஜேஸ் நல்ல வெற்றியைப் பெற்றவர் என்றுதான் கூற வேண்டும்.

இராஜேஸ், செய்தி வாசிப்பதில் வெற்றி பெற்றதற்குக் காரணம் அவர் ஒருபோதும் செய்தியை வாசித்தது கிடையாது. அவர் செய்தியைச் சொல்லியிருக்கின்றார். மற்றவர்கள் கேட்க, இவர் செய்தியைச் சொல்லி வருகின்றார். இதனால்தான் அவர் செய்தித்துறையில் "சொல்லாட்சி" புரிகின்றார்.

அவர் இன்னும் பல வெற்றிகளைப் பெற வாழ்த்துக்கள்.

பி. முத்தையா
*உதவிப் பணிப்பாளர் (செய்தி)*
*ஆசிரியர், (வானொலி மஞ்சரி)*

---

இலங்கை வானொலியின் இராஜேஸ்வரி சண்முகம், BBCயின் சங்கர் அண்ணா, நம்மூரின் தென்கச்சி கோ. சுவாமிநாதன் - இவர்களுள் செய்திகளைப் புரியவைப்பதில் சிறந்தவர் யார்? *(ஜி. வெங்கடேஷ், ஆரப்பள்ளம்)*

கலைஞரின் உதாரணத்தைக் கடன் வாங்கிச் சொல்கிறேன். சங்கருடையது பலா. இனிக்கும். ஆனால் பிரித்து, பிய்த்து, விதை நீக்கி, நஞ்சு நீக்கி உண்பதற்குப் பொறுமை வேண்டும். பக்கத்து தேசத்துப் பெண்மணியோ மா. அறுத்துத் தின்னும் நாகரிகம் அப்படியே கடிக்கும் அவசரம் இரண்டுக்கும் ஈடுகொடுக்கும். சமயங்களில் சாறும் இனிக்கும். சமயங்களில் நார் உறுத்தும். நம்மவருடையது வாழை. என்னைப் போன்ற சோம்பேறிகள் உரிப்பதற்குக்கூட அலுத்துக் கொள்வதால், உரித்து மட்டுமல்ல, ஊட்டியும் விடுகிறார் தென்கச்சி.

*தினமணி இதழின் "தமிழன் பதில்கள்" பகுதியில்*
*வாசகர் ஒருவரின் கேள்விக்கு அளித்த பதில்*
*(11.09.1994.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழாக் காணும் பெண் கலைஞர்

ஒலிபரப்புத் துறையில் பொன் விழாக் காணும் திருமதி இராஜேஸ்வரி அவர்களையும், அவரது துணைவர், எழுத்தாளர் திரு. சண்முகம் அவர்களையும் இருவரும் திருமணம் செய்து கொள்ளு முன்னரே எனக்குத் தெரியும். இன்னும் ஒருபடி மேலே சென்று சொல்ல வேண்டுமானால் கொட்டாஞ்சேனை மத்திய மகாவித்தியாலயத்தில் ஒரு மாணவியாகக் கல்விகற்கும் காலத்திலிருந்தே திருமதி இராஜேஸ்வரி அவர்களை நான் நன்கு அறிவேன்.

1950 களில் என்று ஞாபகம் – ஆண்டு சரியாக நினைவில் இல்லை. அப்போது, ஆண்டு தவறாமல் கொழும்பு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலே இசை, நடனம், நாடகப் போட்டிகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்தி, பரிசில்கள் வழங்கி மாணவர்களைக் கௌரவித்து ஊக்குவித்து வந்தது. அன்று பம்பலப்பிட்டி புனித பீட்டர்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற நாடகப் போட்டியிலே 'வழக்குரைகாதை' நாடகத்தில் கையில் சிலம்புடன், தலைவிரி கோலமாகக் கனல்கக்கும் வசனங்களைப் பேசி கண்ணகியாக நடித்து, அந்தக் காலத்தில் கல்வி அமைச்சராக விளங்கிய மாண்புமிகு திரு. விஜயாநந்த தஹநாயக்க அவர்களின் கைகளால் பரிசும் பெற்ற மாணவி செல்வி இராஜேஸ்வரியின் உருவம் இன்னும் என் கண்களில் நிழலாடிக் கொண்டிருக்கிறது.

பின்னர் இலங்கை வானொலியின் தலைசிறந்த நாடகத் தயாரிப்பாளரான திரு. எஸ். சண்முகநாதன் (சானா) அவர்களது நாடக அரங்கினது சிறந்த நடிகையருள் ஒருவராக அவரைச் சந்தித்தேன். அப்பொழுதெல்லாம் எனது சரித்திர, இலக்கிய நாடகங்களிலே இவர் நடிக்க மாட்டாரா? என நான் எண்ணியதுண்டு. பிற்பாடு, அவர் எனது, சரித்திர இலக்கிய நாடகங்களில் நடித்து அவற்றிற்கு உயிர் ஊட்டியதனால் எனது நாடகங்கள் சிறப்படைந்தன.

தனது குன்றாத குரல் வளத்துடன், ஒரு சிறந்த அறிவிப்பாளராக, ஒரு சிறந்த குணச்சித்திர நடிகையாக, ஒரு தயாரிப்பாளராக, வர்த்தக விளம்பர ஒலிபரப்பாளராகப் புகழுடன் விளங்கி 50 ஆண்டுகள் நிறைவு கண்டு பொன்விழாக் கொண்டாடுகிற இச்சந்தர்ப்பத்திலே திருமதி இராஜேஸ்வரி சண்முகம் அவர்களுக்கு நல்வாழ்த்து வழங்குவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தமைக்காக முதலில் எல்லாம் வல்ல இறைவனுக்கும், அடுத்து திருமதி இராஜேஸ்வரி சண்முகம் அவர்களுக்கும் நன்றி நவில்கின்றேன்.

வாழ்க அவர் பல்லாண்டு! வளர்க அவரது கலைச் சேவைகள்!

எஸ். வேதவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிபரப்புத்துறையில் பொன்விழாக் காணும் வானொலிக் குயில்

*"தமிழைக் குழைந்து குழைந்து உச்சரிக்கும் அவரது லாவகம்*
*சொற்களுக்குள் கரைந்து போகும் அவரது ரஸனை*
*செவியோடு வந்து மனதோடு பேசுவதான பாவம்....*
*வசந்தத்தில் தான் குயில் கூவுமாம்!*
*இந்தக் குயிலுக்கு வருடமெல்லாம் வசந்தமாகவே திகழ*
*வாழ்த்துகிறேன்"*

ஆமாம், வைரமுத்துவின் இந்த வைர வாழ்த்துக்கள் வேறு யாருக்கும் அல்ல. காலமெல்லாம் கூவிக் கொண்டேயிருக்க வேண்டுமெனத் துடிக்கும் வானொலிக் குயில் திருமதி ராஜேஸ்வரி சண்முகம் அவர்களுக்கே உரியது. பவள விழாவைக் கொண்டாடிய பேரானந்தத்தில் மூழ்கியிருக்கும் இலங்கை வானொலியின் கலைஞர் ஒருவர் பொன் விழாவைக் கொண்டாடவுள்ளார் என்ற செய்தி கலை உள்ளங்களை பூரிக்கச் செய்யும் என்பதில் ஐயம் இல்லை. ஒலிபரப்புத் துறையின் சாதனையாளராகவே திருமதி ராஜேஸ்வரி சண்முகத்தைக் குறிப்பிட வேண்டும். "ராஜேஸ் அக்கா" என ரசிக உள்ளங்களால் அன்புடன் அழைக்கப்படும் திருமதி ராஜேஸ்வரி சண்முகம் அவர்களின் ஒலிபரப்பு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதில் நாமும் பெருமையடைகிறோம்.

குடும்பத்தில் இவருடன் பிறந்தவர்கள் நால்வர். சகோதரியர் இருவர். சகோதரர் இருவர். சகோதரர் இருவரும் காலமாகிவிட்டனர். பிறந்து, வளர்ந்து, கல்வி கற்று வாழ்ந்து கொண்டிருப்பது எல்லாமே கொழும்பு மாநகரில் தான். இவரது கல்வி, கலையார்வம், இலக்கிய தாகம் எல்லாவற்றுக்கும் தீனிபோட்டு ஆளாக்கிய பெருமை கொழும்பு–13 இலுள்ள அரசினர் மத்திய மகா வித்தியாலயத்திற்கே உரியது. 1958 இல் பிரபல வானொலி நாடகாசிரியர் சி. சண்முகம் அவர்களைத் திருமணம் செய்து கொண்டார். தமது திருமண வாழ்க்கை பற்றிக் குறிப்பிடும் போது "கலை இணைத்ததால் காதல் கொண்டோம். காதல் கொண்டதால் கல்யாணம் செய்தோம்" என்றார். சி. சண்முகம், இலங்கை வானொலியில் தட்டெழுத்தாளராகவும், பகுதி நேர அறிவிப்பாளராகவும் கடமையாற்றியவர். இவர் எழுதிய வானொலி நாடகங்களோ ஏராளம்.

துணி விடு தூது, லண்டன் கந்தையா, நெஞ்சில் நிறைந்தவள் என்று இன்று வரை நாடக உலகில் நிலைத்து நிற்கின்ற தரமான சிறந்த நாடகங்கள் பலவற்றை எழுதியுள்ளார். இக்கலைத் தம்பதியினரின் பேர் சொல்லும் பிள்ளைகளாக மூவர் உள்ளனர். மகள் ஒருவர், மகன்மார் இருவர். மூவரும் பெற்றோரைப் போன்று கலைத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்களாக இசை, நாடகம், ஒலிபரப்பு என்று பல்வேறு துறைகளிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றனர்.

தமிழ் பேசும் மக்கள் எல்லோராலும் புகழ்ந்து பேசப்படுகின்ற ஒரு அறிவிப் பாளராக திருமதி ராஜேஸ்வரி சண்முகம் விளங்குவதற்கு வழியமைத்துக் கொடுத்தது அவருடைய நடிப்புத்திறன் என்று தான் கூறவேண்டும். பாடசாலை நாடக அரங்குகள் பலவும் இவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் குடி கொண்டிருந்த நடிப்பாற்றலை வெளிக் கொணர்வதற்கு கைகொடுத்துதவின. பாடசாலை நாடகப் போட்டிகளில் பங்கேற்று நடித்து முதற் பரிசுகளைப் பெற்று பாடசாலைக்குப் பெருமையை ஈட்டிக் கொடுத்தவர் இவர். பாடசாலை நாடக விழாவில் தான் ஏற்று நடித்த "கண்ணகி" பாத்திரமே தன்னை இத்தகைய ஓர் உன்னத நிலைக்குக் கொண்டு வந்தது என்கிறார். அந் நாடகத்தைப் பார்த்த கலாஜோதி சானா அவர்கள் அவரது நடிப்பின் சிறப்பைக் கண்டு வானொலி நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பை வழங்கினார். 1952 இலிருந்து குருநாதர் சானா அவர்களது ஆக்கமும், ஊக்கமும், ஆசியும் தனக்குக் கிடைத்தமையைப் பெரும் புண்ணியமாகக் கருதுகிறார். பிரபல எழுத்தாளரான காலஞ்சென்ற என். எஸ். எம். இராமையா எழுதிய "விடிவெள்ளி" என்ற நாடகமே இவர் வானொலியில் நடித்த முதல் நாடகமாகும்.

நடிப்பாற்றல், தொனி வேறுபாடுகளை அனுசரித்துப் பேசுகின்ற பேச்சு வன்மை, அட்சரப் பிழையின்றி உச்சரிப்புத் தெளிவுடன் பேசும் ஆற்றல், கனிவான குரல் வளம் என்பன இவரைச் சிறந்த நடிகையாகக் கலையுலகில் காலூன்ற வைத்தன. இவர் நடித்த வானொலி நாடகங்களோ கணக்கிட்டுக் கூற முடியாதவை. பெண் பாத்திரங்கள் – அவை இலக்கியப் பாத்திரங்களாகட்டும், வரலாற்றில் இடம் பெறும் பாத்திரங்களாகட்டும், சமூகக் கதைகளில் வரும் பாத்திரங்களாகட்டும், குழந்தைப் பாத்திரங்களாகட்டும் அப் பாத்திரங்களாகவே மாறி தத்ரூபமாக, அற்புதமாக நடிப்பதில் இவருக்கு இருந்த ஆர்வத்தையும், ஈடுபாட்டையும் கண்டு குடும்பத்தினரிடமிருந்து பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. அந்த எதிர்ப்பிலிருந்தும் அவரை விடுவித்து அவரது விருப்பத்துக்கும், திறமைகளுக்கும் வழிகாட்டியாய் விளங்குபவர்கள் பாடசாலை ஆசிரியர்களும், காலஞ்சென்ற அவரது சிறிய தந்தையாரான எஸ். ஆர். நடராஜாவும் ஆவர். தனது உயர்ச்சிக்கு வழிகாட்டியவர்களை இன்று வரை போற்றி வருகிறார் திருமதி ராஜேஸ்வரி சண்முகம். நடிப்பின் மூலம் வானொலியில் காலடி வைத்தவர் 1969 ஆம் ஆண்டு வர்த்தக சேவையின் பகுதி நேர அறிவிப்பாளராகக் காலூன்றினார். அன்று முதல் இன்று வரை, இலங்கை வானொலிதான் அவரது சுவாசக் காற்று என்று சொல்லும் வண்ணம் அர்ப்பண சிந்தையோடு அல்லும் பகலும் வானொலியுடன் கட்டுண்டு பணியாற்றி வருகிறார் திருமதி ராஜேஸ்வரி சண்முகம். 1971 ஆம் ஆண்டு தயாரிப்பாளராகவும் 1974 ஆம் ஆண்டு நிரந்தர அறிவிப்பாளராகவும், 1982 இல் முதல்தர அறிவிப்பாளராகவும், 1995 இல் அதி உயர் அறிவிப்பாளராகவும் கடமையாற்றியவர்.

வானொலியில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சி எதுவாயினும் அதைச் சுவைபட தயாரித்து வழங்கும் ஆற்றல் மிக்கவர். இலக்கிய நிகழ்ச்சியாகட்டும், சஞ்சிகை நிகழ்ச்சி யாகட்டும், பாடல்களை மட்டுமே கொண்ட நிகழ்ச்சியாகட்டும் அவற்றிலெல்லாம் தான் கற்றவை கேட்டவை, ரசித்தவற்றை எல்லாம் பொருத்தமான இடங்களில் பொருத்தமாகப் புகுத்தி கவிதை நயம் செறியும் வண்ணம், நயம்பட நவில்வது இவரது பிளஸ் பொயின்ட். ஏனைய அறிவிப்பாளர்களைவிட தான் சற்று வித்தியாசமாகவே நிகழ்ச்சிகளை வழங்க வேண்டும் என்ற தவிப்பும், உத்வேகமும் கொண்ட இவர் அவ்வாறே தனது நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதுண்டு. வர்த்தக சேவையில் "பேர் கேட்ட அனைவரையும் நீராட்ட வருகிறது பொங்கும் பூம்புனல்" என்ற அறிவிப்போடு ஒலிக்கும் பொங்கும் பூம்புனலில், ஒவ்வொரு பாடலும் ஒலிபரப்பப் படுவதற்கு முன்னர் அப்பாடலில் பிரதான கருத்தை ஈரடிக் கவிதையால் குறிப்பிடுவது அவருக்கு உரிய தனிப்பாணி. இவர் கூறும் கவி வரிகளை ரசிப்பதற்காகவே இந் நிகழ்ச்சியைக் கேட்போர் பலருளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று எழுத்துத் துறையில், கலைத் துறையில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பெண் எழுத்தாளர்கள் பலரையும் வளர்த்தெடுத்த பெருமைக்குரியவர் திருமதி ராஜேஸ்வரி சண்முகம் என்று துணிந்து கூறலாம். "பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரி" என்ற மாதர் சஞ்சிகை நிகழ்ச்சியை பல வருடங்களாக தயாரித்தளித்து பலரது பாராட்டையும் பெற்றவர். தரம் குறைந்த பிரதிகளைக்கூட மாற்றியும், திருத்தியும் செப்பஞ் செய்து உணர்ச்சி கொப்பளிக்க வாசித்து, கேட்போர் உள்ளங்களை நெகிழ வைக்கும் வண்ணம் இவரது "இசையும் கதையும்" அமைந்திருக்கும். இவரது இலக்கிய ஈடுபாட்டை எடுத்துக் காட்டும் ஒரு நிகழ்ச்சி தான் பொதிகைத் தென்றல்! பழந்தமிழ் இலக்கியங்களை நன்கு கருத்தூன்றிக் கற்று அவற்றிலுள்ள கருத்துகள், திரையிசைப் பாடல்களில் எங்கெங்கு, எவ்வாறெல்லாம் கையாளப்பட்டிருக்கின்றன என்பதை அக்குவேறு ஆணி வேறாகப் பிரித்தறிந்து, இலக்கிய நயம் ததும்ப தயாரித்து வழங்கிய அந்நிகழ்ச்சியை அறிஞர்களும் வியந்து பாராட்டியுள்ளனர். இந்நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய இவரின் இலக்கிய ஆர்வத்தைக்கண்டு எட்டயபுரம் தென்பொதிகைத் தமிழ்ச் சங்கம் 1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ம் திகதி விழா வெடுத்து 'வானொலிக் குயில்' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. மகாகவி சுப்ரமணிய பாரதியார், பாரதிதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கவியரசு கண்ணதாசன் போன்றோரது நினைவு தினங்களின்போது இவர் தயாரித்து வழங்கும் ஒலிச் சித்திரங்கள், இசைச் சித்திரங்கள் என்பனவும் குறிப்பிட்டுக் கூறக்கூடியன.

"ஒலிவாங்கியின் முன்னால் அமர்ந்ததும் உலகையே மறந்து விடுவேன். என்னுள் ஒரு மனப்பக்குவம் தானாகவே வந்துவிடும். அது இறைவன் எனக்குத் தந்த வரப்பிரசாதம்" என்று கூறிக்கொள்கிறார் திருமதி ராஜேஸ்வரி சண்முகம்.

இலங்கை நேயர்கள் மட்டுமன்றி, தென்னிந்திய மற்றும் எங்கெங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்களோ அவர்கள் அனைவராலும் பாராட்டப்படுகின்ற ஒரு அறிவிப்பாளராக அறிவிப்புத் துறையில் மிளிர்கிறார். செய்தி வாசிப்பிலும் தனக்கென ஒரு தனித்துவத்தைப் பேணி வருபவர் இவர். தினமணி பத்திரிகையின் 60வது ஆண்டு மலரில் இவரது செய்தி வாசிப்புப் பற்றிக் கேட்டபோது, "திருமதி ராஜேஸ்வரி சண்முகம் மாங்கனி" எனக் கூறப்பட்டது. இவர் அறிவிப்புத்துறையில் கண்ட வளர்ச்சியின் உயர்ச்சிக்குச் சான்று பகர்வன அவருக்கு வழங்கப்பட்ட பல்வேறு பட்டங்களும் விருதுகளுமாகும்.

முன்னாள் அமைச்சர் செ. இராசதுரை வழங்கிய 'மொழி வளர்செல்வி', ஸ்ரீசாஷ்டாபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாசன் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையில் வழங்கிய 'வாகீச கலாபமணி', வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அரசு சார்பில் வழங்கிய 'தொடர்பியல் வித்தகர்', சம்மாந்துறைக் கலை உள்ளங்களால் கொடுக்கப்பட்ட 'வான்மகள்', எட்டயபுரம் தென்பொதிகைத் தமிழ்ச் சங்கம் வழங்கிய 'வானொலிக் குயில்', சிறந்த அறிவிப்பாளருக்கான ஜனாதிபதி விருது, ஐரோப்பிய நாடுகள் இவருக்கு வழங்கிய சிறந்த அறிவிப்பாளர் என்ற விருது இப்படியாகப் பற்பல விருதுகளையும் பட்டங்களையும் பெற்றாலும் தன்னடக்கத்தோடு வாழ்ந்துவரும் அறிவிப்பாளர் இவர். இவருக்குக் கிடைத்த 'வானொலிக் குயில்' என்ற பட்டமே மிகப் பொருத்தமானதாக உள்ளது. அதுவே அவருக்கு உரிய சிறப்புப் பெயராக இன்று அமைந்துவிட்டது.

பாரிஸ், சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், டென்மார்க், புளோரா, லண்டன் ஆகிய ஐரோப்பிய நாடுகள் இவரை அழைத்து கௌரவித்தமை ஒலிபரப்புத்துறையில் இவருக்குக் கிடைத்த பெரு வெற்றியென்றே கூற வேண்டும். அத்துடன் மேற் குறிப்பிட்ட நாடுகளைச் சேர்ந்த ஒலிபரப்பு நிலையங்கள் பலவற்றுக்கும் இவர் பேட்டியும், நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் ஒலிபரப்புத்துறையில் – கலைத்துறையில் சுடர்விட்டு ஒளிர்வதற்கு, வழிகாட்டி ஒளியூட்டியவர்களாக பின்வருவோர் போற்றப்படுகின்றனர். கலை உலகிற்கு அறிமுகஞ் செய்துவைத்த குருநாதர் 'சானா', கணவர் சி. சண்முகம், கௌரவத்திற்கும் நன்றிக்கும் உரியவரான கலாநிதி க. செ. நடராசா, விவியன் நமசிவாயம், திருமதி பொன்மணி குலசிங்கம், சி. வி. ராஜசுந்தரம், வி. ஏ. திருஞானசுந்தரம், ஞானம் இரத்தினம் ஆகியோர்.

"இன்று நேயர்கள் மத்தியில் என் பெயரைச் சொன்னவுடன் புரிந்துகொள்ளும் வண்ணம் இருக்கக் காரணம் நேயர்கள் தான். 1952 முதல் இன்றுவரை ஒலிபரப்புத் துறையில் நிலைத்து நிற்கக் காரணம் என் இனிய நேயர்களும் ரசிகப் பெருமக்களும் தான். சிறந்த அறிவிப்பாளருக்கான ஜனாதிபதி விருது கிடைக்கத் தமது வாக்களிப்பு மூலம் என்னை தெரிவு செய்த இலட்சக் கணக்கான நேயர்களுக்கு என் இதயம் நிறைந்த நன்றி மலர்களைச் சமர்பித்து கரம் கூப்பி நிற்கிறேன். என் குரலின் இளமைக்கு என் இனிய நேயர்களின் அன்பு இதயந்தான் காரணம். கடலைவிட ஆழமான அன்பையும், அபிமானத்தையும் வென்றெடுக்க வைத்த எல்லாம்வல்ல இறைவனுக்கு என்றென்றும் என் அர்ச்சனைகள்" என அவர் மனம்விட்டு கூறுகிறார்.

*"பொதிகைத் தென்றலுக்கு என்ன வயசா உண்டு – உன்*
*பூங்குரலுக்குக் கதுபோல இளமை உண்டு*
*குயிலே வானொலிக் குயிலே வசந்தத்தில் மட்டுமல்ல*
*வாழப்போகும் காலம் பூராவும் கூவிக் கொண்டே இருப்பாய்*
*நாமும் இரசித்துக்கொண்டே இருப்போம்"*

விக்னா செல்வநாயகம்

*(தினகரன் – வாரமஞ்சரி 31.12.2000)*

---

# என்னின் அன்பு வாழ்த்துக்கள்

**வா**னொலிக் குயில், வாகீச கலாபமணி, தொடர்பியல் வித்தகர், வான்மகள் என்றெல்லாம் புகழப்படும் சிறந்த, என் மதிப்புக்குரிய அறிவிப்பாளர் திருமதி இராஜேஸ்வரி சண்முகத்தைப் பாராட்டுவதில் பெருமிதமடைகிறேன்; மகிழ்ச்சி கொள்கிறேன். காரணம் ஒரு மேடையில் பேசும்பொழுது அவர் மக்களுக்குச் சொன்னார் –

"என்னை நல்ல தமிழ்ப் பேச்சாளராக ஆக்கக் காரணகர்த்தாவாக இருந்தவர் திரு. கோமஸ் என்று கூறலாம்" என்றார்.

உண்மை – கொட்டாஞ்சேனை மத்திய கல்லூரியில் கல்விகற்ற பொழுது, தமிழ் மாணவ மன்ற செயலாளராக இருந்த நான், தவறாது 'இராஜேஸ்வரி'யை அநேகமாக ஒவ்வொரு கூட்டத்திலும் குறித்து விடுவேன். ஆக –

'விளையும் பயிருக்கு நீர் ஊற்றி வளர்த்துள்ளேன்' என்று, அத்திவாரமிட்டேன் என்று கொள்ளலாமா?

ஆங்கிலம் மூலம் தமிழ் கற்றாலும் ஒரு 'தமிழ்க் குயிலாக' பாடி தமிழ் மழை பொழிகிறது என்பதில் கிஞ்சித்தேனும் சந்தேகம் இல்லை.

தங்கச் சகோதரியின் புகழ் மேலும் வளர வேண்டும், நின்று நிலவ வேண்டும் என்றும் மனமார வாழ்த்துகிறேன். இறைவனை இறைஞ்சுகிறேன்.

இறைவனின் நல்லருள் என்றென்றும் தங்கை இராஜேஸ்வரிமேல் பொழிவதாக. வாழ்த்துக்கள்!

ஏ. பி. வி. கோமஸ்

J/ 36, எம். சி. வீதி
மாத்தளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானொலிக் குயிலுக்கொரு வாழ்த்து!

கிழக்கில் கதிரவன்
எழுமுன் எழுந்து
பாதி உறக்கத்துடனே
வானொலியின் செவியே
திருகும் போது
குயிலொன்று தன்
இனிய குரலோசையை
அகிலத்தாருக்கு
அளித்துக் கொண்டிருக்கும்.

துயில் முழுதாய்
கலைந்த போதுதான்
புரிந்து கொள்வேன் அது
குயிலின் குரலல்லவென்று,
குயிலுக்கே கூவுவதற்கு
கற்றுக் கொடுத்த
இன்னிசைக் குரல் அது.

வர்த்தக சேவை
கேட்பதென்றால்
எனக்கோ கொள்ளை அவா.
அதிலும், இராஜேஸ்வரி அக்காவின்
குரல் ஒலித்தால்
துள்ளி எழுந்திடுவேன்.

தினமும் என் காதில்
விழுகின்ற முதல் குரல்
வானொலிக் குயிலின்
வளமான வார்த்தைதான்.

சோர்வுடனே நான்
வந்தபோதிலும்
சொக்கத் தமிழில்
உங்கள் குரல் கேட்டு
உற்சாகமடைகின்றேன்.

திக்கெட்டும் திசையெங்கும்
தேன் மழை பரப்பி வரும்
வானொலி வர்த்தக
சேவைக்கென தனி
புகழ் வந்தது
உங்கள் தேனான
குரலோசையாலும்
அமுதத் தமிழில் நீங்கள்
அள்ளி வழங்கும்
அறிவிப்புக்களாலுமே.

வர்த்தக நிறுவனங்கள்
வெற்றிப் பாதையில்
உயர்ந்து நிற்பதற்கு
உங்களின் உயர்வான
விளம்பரங்களே
தூண்டு கோல்கள்.

விசேட தினம் வந்தால்
விவேகத்துடன் பல
விந்தைச் செய்திகளை
தொகுத்தெடுத்து அன்றே
காற்றில் தவழ விடும்
உங்கள் பணி
போற்றுதற்குரியது!

நீங்கள் அறிமுகம் செய்யும்
புதிய பாடல்கள்
உங்களது விளக்கத்தால்
மேலும் புதுத்தெம்பு
பெற்றொலிக்கின்றது.

புவனத்தின் எந்த மூலையில்
எது நடந்தாலும்
உடனே திரட்டித் தரும்
உன்னத பணி உங்களை
புகழின் உச்சிக்கே
ஏற்றிச் சென்றுள்ளது.

எத்தனையோ பேர்
அறிவிப்பாளர்களாய்
அறிமுகமானார்கள்,
சேவையில் இன்று
அவர்களின் முகவரியை
காணக் கிடைப்பதில்லை.

நீங்களோ...... நீண்ட காலத்திற்கு
நீங்காத சேவையை
நெஞ்சங்களில்
விதைத்து விட்டீர்கள்.

நேயர்களுடன் தொலைபேசியில்
நேரடியாகவே உறவாடி,
நினைவுகளிலும் நீங்கள்
நிலையாகவே என்றும்
நிலைத்து விட்டீர்கள்.

இன்னும் பல காலம்
பண்பான உங்கள் சேவை
பாரினில் உள்ளோருக்கு
தொடராய்க் கிடைத்திட
அவாக் கொண்டு
நானும் இறைஞ்சுகின்றேன்.

**M. MUHAJIREEN**
YAZEEN BAWA ROAD,
MAVADICHENAI,
VALAICHENAI.
04.11.1998.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுரை

**முனைவர் சக்கர இலக்குமிகாந்தன்**
*எம். ஏ. எம். ஃபில், பிஎச். டி.*
*தமிழ் விரிவுரையாளர் (தேர்வுநிலை)*

திருமதி இராஜேஸ்வரி சண்முகம் அவர்கள் இலங்கை வானொலியின் வழியாகப் பல்லாயிரக்கணக்கான நேயர்களுக்கு அறிமுகமானவர்கள். இவரது தமிழறிவும், பாடல் தொகுப்புத் திறனும், இனிய குரலும் பன்னாட்டு ரசிகர்களும் நன்கு அறிந்தவை.

படைப்பாளர்களையும் ரசிகர்களையும் ஊக்குவிக்கும் இயல்பும், நல்ல உள்ளமும் கொண்ட இவரின் இலங்கை வானொலிப்பணி மிகவும் பாராட்டிற்குரியதாகும்.

இவரது இனிய குரலை கேட்கும் போதெல்லாம் கீட்ஸின் நைட்கேலின் குரலும், ஷெல்லியின் லைலார்க் குரலும், வேர்ஸ் வொர்த்தின் குக்கூ பறவைக் குரலும், இராபர்ட் பிராஸ்டின் உட்டன் பேர்ட் குரலும், பாரதியின் குயிலின் குரலும் இப்படித்தான் இருந்திருக்குமோ......? என எனக்குஎண்ணத் தோன்றும். அது ஒருவேளை தற்சார்புடையதாக இருக்குமோ....? எனவும் நினைக்கவும் தோன்றும்.

ஆனால் தற்சார்புடையதல்ல..... எனத் தென்பொதிகைத் தமிழ்ச் சங்கம் "இலங்கை வானொலிக் குயில்" என்னும் பட்டத்தை இவருக்கு நல்கியபோது நான் அறிந்தேன்.

விளம்பர நிகழ்ச்சிகளைக் கூட சுவையாகவும், தொய்வு இல்லாமலும் படைக்கும் கலை இவருக்கே கைவந்த கலை என்றால் மிகையில்லை.

ரசிகர்களின் உள்ள உணர்வுகளை மதித்து, அவர்களின் கடிதங்களை வானொலியில் படித்து, அவர்களையும் "இலங்கை வானொலி நம் குடும்ப வானொலி" என எண்ணச் செய்யும் அவர்களை உற்சாகமூட்டும் அன்பு நெஞ்சம் கொண்டவர் இவர்.

இவர் படைத்து நேயர்களுக்கு அளித்த பல "பொதிகைத் தென்றல்" இலக்கிய நிகழ்ச்சிகள் இன்றும் என்றும் இலக்கிய நெஞ்சங்களில் நின்று நிலைப்பவை. அந்நிகழ்ச்சிகள் இவரது பரந்துபட்ட தமிழறிவை நேயர்களுக்கு அறிவித்தவை.

இவரது "என் விருப்ப" நிகழ்ச்சிகள் நேயர்களுக்கு புத்துணர்வையும், புதிய சிந்தனைகளையும் வழங்கி ஒரு புதிய கற்பனை உலகிற்கு இழுத்துச் செல்லும் வலிமை பெற்றவை.

எல்லாத் திறனும் ஒருங்கே அமையப் பெற்ற இவரின் உள்ளமும் உடலும் நலமுடன் விளங்கி என்றென்றும் புத்துணர்வு பெற்று புதிய பல ஆக்கங்களைத் தர வேண்டும் என எல்லாம் வல்ல இறைமையிடம் வேண்டி வாழ்த்துகிறேன்.

*அரசு கலைக் கல்லூரி*
*நந்தனம் – சென்னை – 600035*
*தமிழ் நாடு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *சிற்பிக்கு சிலையின் வாழ்த்து*

இதய தேசத்தின் எழில் நிலவே
இலங்கை வானொலியின் கரிமுகிலை
உதயஞாயிற்றின் ஒளிக்கீற்றை
உள்ளத்தில் சூடி நிற்கும் பிரளயமே

பதியமிட்டு நெஞ்சில் அன்பை
பக்குவமாய் சொலிட்டு நாளும்
மூச்சுக் காற்றாய் முகிழ்ந்த தமிழை
முன்னிறுத்தி சொல்லாபரணம் சூட்டி

வானொலி நிலையத்தின் வாசல் எங்கும்
வண்ணக் கோலங்கள் செதுக்கும் தூரிகையே
எந்தன் உயர்வின் பாத்திரங்களாய் – நான்
ஏற்றுக் கொண்டது மூவர் என்பேன்

உருவாக உயர்த்தி என்னை
உலகுக்குக் காட்டிய பெற்றோர்
பள்ளிப் பருவத்தில் செப்பனிட்டு
பாவலனாக்கிப் பார்த்த தமிழ் ஆசான்

எங்கேயும் உண்மையில்லை
என்றேங்கி நின்ற வேளை
வங்கக்கடல் தாண்டி என
வார்ப்புத் தமிழ் வாசித்து

மங்காப் பணி செய்தீர் – நம்
மங்கலத் தமிழுக்கு அணி செய்தீர்
தாங்கள் தங்கா மனமொன்று
தரணியெங்கும் நானறியேன்.

குறைவில்லா தன்னடக்கம்
நிறைகுடமான போதும்
குன்றின் விளக்காய் தமிழ்க்காத்து
வானொலிக் குயிலாய் வலம் வரும்
வண்டமிழ் தாயே வணங்குகின்றேன்

உங்களின் உள்ளம் வாழ்த்தயின்று
உயர்ந்து வயதில் நின்று நானும்
எல்லையற்ற இனிமை தூவி
எழுத்துப்பூக்களால் வாழ்த்துகின்றேன்

*இங்கே....................*
*வாழ்த்துக்களும் வணக்கங்களே*

*அன்பிலே என்றும்*
வித்யபாரதி

*(சிற்பி : வானொலிக் குயில்*
*இராஜேஸ்வரி சண்முகம்)*

---

***என் இனிய சகோதரிக்கு,***

தங்களுக்கு இந்தியாவில் பாராட்டும் வானொலிக் குயில் பட்டமும் கௌரவமும் கிடைத்ததாக வானொலி மூலம் அறிந்து, மிக்க – மிக்க – மிக்க மகிழ்ச்சியடைந்தேன். ஒலிபரப்புத் தொழிலை, ஊதியத்துக்கான மார்க்கமாக மட்டுமன்றி, இதயபூர்வமான அர்ப்பணிப்போடும் ஆசையோடும் உழைத்த, உழைக்கும் உங்களைப் பாராட்டுதல் சாலவும் பொருத்தமானதே.

அயரா முயற்சியாலும், அசரா தைரியத்தோடும் அல்லும் பகலும் அனவரதமும், பைந்தமிழைப் பாசத்தோடு பழகி, பாட்டோடு கவிதையும் சேர்த்து ஒன்றி உறவாடி, பல்லாயிரம் வானொலி நேயர்களுக்கு நாளாந்தம் செவியின்பத்தோடு சிந்தனைக்கும் உரமளிக்கும் பணியில், ராஜேஸ் வெற்றிதான். இவை என் நெஞ்சார்ந்த பாராட்டுதல்கள். புகழ்மாலைகள், கௌரவங்கள் மென்மேலும் தங்கள் மென்தோள்களை தழுவுவதாக!

சமகால சமூகத்தில் கோணங்கள் கோடி கோடி மானுடர்க்கு வழிகாட்டும் ஒலித்தீபங்கள் தேவை நிறைய, நிறைய! வானொலி மூலம், சினிமாப்பாடல் மூலம் இத்துறையில் சாதிக்க நிறைய வாய்ப்புண்டு. இனியும் வானமே உங்கள் எல்லையாக மீண்டும் அன்பின் ஆசிகளோடும், ஆத்மார்த்தமான வாழ்த்துகளோடும் இவள் நிறைவுறுகிறது இம்மடல்.

உண்மையுள்ள சகோதரி
யோகா பாலச்சந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாராலும் வெற்றி கொள்ள முடியாதவர்!

இலங்கை வானொலியைக் கேட்கும்போது
இனிக்கும் உங்கள்குரல் தேன் இனிமை!
நிகழ்ச்சி அமைப்பதிலும் தனிச்சிறப்பு! - நல்ல
நடிப்பைக் காட்டுவதில் வெகுசிறப்பு!

பாராட்டி எழுதவல்ல இது உண்மை! - நான்
பார்க்காத உறவினிலே ஒருபெருமை!
திருமகள் உங்கள் பெயர்தான் (திருமதி) ராஜேஸ்வரியோ - உங்கள்
திருப்பாதம் வணங்கி நான் வாழ்த்துகின்றேன்!

காற்றி மிதந்துவரும் கலைமகள்(உங்கள்) முழக்கமதில் - நான்
கவிதையெனும் பூத்தொடுத்து பாமாலை சூட்டுகிறேன்!
ஓராயிரம் சிந்தனையில் ஓடவைக்கும் இதய மகள்! - என்னை
பல்லாயிரம் கீதங்களில் பாடவைக்கும் புதுமைமகள்!

ஆண்டவன் அவன்கூட பூமியில் பிறந்துவந்து - உங்கள்
அன்றாட நிகழ்ச்சிகளை ஒருநாளில் தெரிந்துவிட்டால்
மயக்கம் தனையடைவான் மகிழ்ச்சியினால் நிலைமறப்பான்! - தினம்
மயக்கத்தில் வாடுகின்ற என்னோடு தஞ்சமடைவான்!

அடங்காத நெஞ்சமதில் ஆர்ப்பரிக்கும் கவிதைகளை - நான்
அடக்கித்தான் பார்க்கின்றேன் அடக்கவே முடியவில்லை!
நாடுபோற்றும் நல்லமகள் ஈடில்லா கலையுணர்வை - நான்
நினைக்காத நேரமில்லை நெஞ்சுயர்த்தி வாழ்த்துகின்றேன்!

எப்படித்தான் பாடவென்று பொருள்தேடி தவிக்கின்றேன்!
அங்கிருக்கும் உங்களுடை அன்பையெண்ணி வியக்கின்றேன்!
வெற்றியின் மறுபெயர் திருமதி ராஜேஸ்வரி என்கின்றேன்! - உங்களை
வானொலியில் வெற்றிகொள்ள யாராலும் முடியாதென்பேன்!

அன்பினிலே நான்கண்ட தென்மகளே! நீவிர் வாழி!
ஆலயத்து மணிவிளக்காம் நன்மகளே! நீவிர் வாழி! - என்
இதயத்தில் வீற்றிருக்கும் இதயமலர்! நீவிர் வாழி!
ஈழத்து வானொலியின் மென்குரலே! நீவிர் வாழி!
உள்ளதைச் சொல்லுவதில் துணிந்தமகள் நீவிர் வாழி!
ஊராருக்குப் பயப்படாமல் வெற்றிசூடும் நீவிர் வாழி! - உங்களுக்கு
எண்ணாயிரம் கவிதைமலர் சூடிடுவேன் நீவிர் வாழி!
ஏழுவகை ஸ்வரங்களிலும் இனியஸ்வரம் நீவிர் வாழி!
ஐயமின்றி எடுத்துரைக்கும் வீரமகள் நீவிர் வாழி! - நம்
ஒருவழிப் பாதையிலே நல்லவழியே! நீவிர் வாழி!
ஓயாத என்மனதில் ஒலியெழுப்பும் நீவிர் வாழி!
ஔடதமாய் நிகழ்ச்சிதரும் அன்னைகுலம் நீவிர் வாழி!
அஃதே நன்றாகும் என்றுரைப்பேன் நீவிர் வாழி!
கோவில்மணி ஓசையாக குரல்படைத்த நீவிர் வாழி! - நல்ல
கோவில்கொண்ட தெய்வமகள் (திருமதி) ராஜேஸ்வரி! நீவிர் வாழி!

விருதை ஜி. அல்பர்ட், 30.07.1978



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் குரலாக இருக்க வேண்டும்!

எங்கள் இலங்கை வானொலியின் இசைக்குயில்
இன்ப தமிழ்க் குயில்
அன்புச் சகோதரி திருமதி இராஜேஸ்வரி சண்முகம் அவர்களுக்கு,
உங்கள்
அன்பின் இனிய ஆனந்தம் கந்தசாமியின் அன்பு வணக்கங்கள்
வெள்ளியன்று காலை
மனதிற்கினிய இசைவேளை நல்ல தமிழ் மாலை
ஞாயிறு மாலை
நல்ல தமிழ்ப் பூக்களின் தொகுப்பு இசை வாசம் வீசும்
அது இனிய இசைப் பூக்களின் அணிவகுப்பு
புதன் காலை 9 மணிக்கு உலாவந்த
கல்யாணியின் கானாமிர்தம்
காதல் பூக்களால் தொகுக்கப்பட்ட இசைமாலை
கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்
மனதைத் தொட்ட இன்றைய பாடல்
மனது மறக்காத அன்றைய பாடல் மொத்தத்தில்
கானாமிர்தம் அது தேனாமிர்தம்.

ஆயிரம் பூக்கள் மலரட்டும்
என வாழ்த்திவிட்டுச் சென்ற உங்களை
முத்துவிதானத்தில் தான் மீண்டும் சந்திக்க முடிந்தது.
தமிழ்ப் பெரியார்கள் மறைமலை அடிகள், திரு. வி. க.
இவர்களது நினைவுகளோடு
பாரதியின் பைந்தமிழையும்
சிவப்பிரகாச சுவாமிகளின் செந்தமிழையும்
முத்துவிதானம்
தந்தது மனதுக்கு நிறைவைத் தந்தது.
சிலப்பதிகார விருந்து
முதலாம், இரண்டாம் அங்கங்கள் அருமை.
நிறைவில் கவிஞர் வாலி அவர்களின் பேட்டி சிறப்பு.
தாங்கள் அமைக்கும்
முத்துவிதானம் தனிச் சிறப்புப் பெறுவது
இலக்கியம் இடம்பெறுவது
அன்னைத் தமிழுக்கு முதன்மை தருவது.

ஒவ்வோர் நாள் காலையிலும்
கேட்கும் முதல் குரல்
உங்கள் குரலாக இருக்க வேண்டும்
முதல் பாடல் முருகன் பாடலாக இருக்க வேண்டும்
ஒவ்வொரு நாளும் வசந்தம்தான்

ஆனந்தம் கந்தசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் கவர்ந்த பேசும் குயில்

தனது சொந்த வாழ்க்கையில் மணிவிழாக் கண்ட சகோதரி இராஜேஸ்வரி சண்முகம் அவர்கள், அண்மையில் ஒலிபரப்பு வாழ்க்கையில் பொன்விழாக் கண்ட பெருமையில் மார்ச் 16ம் திகதியன்று வாழ்க்கைப் பயணத்தில் மற்றுமொரு வருட நிறைவின் நிகழ்வையொட்டி எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

எனது அபிமானத்துக்குரிய ஒருசில மூத்த ஒலிபரப்பாளர்களுள் சகோதரி இராஜேஸ்வரி அவர்களும் ஒருவர். அழுத்தம் திருத்தமாக பேசக்கூடியவர் மட்டுமல்ல, நவரசமும் ததும்பும் வகையில் அவரது அறிவிப்புகள் அமைந்திருக்கும். இதுவே பல்லாயிரக்கணக்கான நேயர்களின் அபிமானத்தைப் பெறுவதற்குக் காரணமாகவிருந்ததை மறுக்க முடியாது. இவரது நடிப்பில் குறைகண்டவர்கள் எவருமே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

வர்த்தக சேவையின் பூவும் பொட்டும் – மங்கையர் மஞ்சரி (திங்கள் மலர்) நிகழ்ச்சி சகோதரி இராஜேஸ்வரி அவர்களின் கைவண்ணத்தில் நீண்ட காலமாகப் பெருவிருந்து படைத்து வந்திருப்பது வரலாற்றுப் பதிவாகியிருப்பதுடன்,இந்நிகழ்ச்சியை மங்கையர்கள் மட்டுமல்ல, என் போன்ற ஏராளமான ஆடவர்களும் விரும்பிக் கேட்டு வந்திருக்கிறார்கள் என்பதுவும் சிறப்பான விஷயமாகும். 1975ம் ஆண்டில் பூவும் பொட்டும் – மங்கையர் மஞ்சரி ஊடாக "நெஞ்சில் நிறைந்தவள்" என்ற தொடர் நாடகமொன்றை வழங்கியதன் மூலம் புதுமைப் புரட்சி செய்தவர். அவரது கணவரும், பிரபல நாடக எழுத்தாளருமான சகோதரர் சி. சண்முகம் அவர்களால் எழுதப்பட்ட இந்தத் தொடர் நாடகத்தில் லக்ஷ்மி என்ற பாத்திரத்தை ஏற்று நடித்த சகோதரி இராஜேஸ்வரி அவர்களின் சிறப்பான நடிப்பையும், நாடகத்தின் கதையமைப்பையும் பாராட்டி ஏராளமான பெண் நேயர்கள் மட்டுமல்ல, ஆண் நேயர்களும் கடிதங்கள் எழுதிக் குவித்தமை அன்றைய காலப் பகுதியில் நடந்தேறிய சிறப்பான நிகழ்வாகும்.

வர்த்தக சேவையில் ஒலிபரப்பாகி வந்த "பொதிகைத் தென்றல்" என்ற இலக்கியச் சுவை ததும்பும் நிகழ்ச்சியைப் பல மாதங்கள் தொகுத்து வழங்கியிருப்பதுடன், இதுபோன்ற நிகழ்ச்சியைக் கொழும்பு சர்வதேச வானொலியிலும் நீண்ட காலம் நடத்தி வந்திருக்கிறார்.

திரைப்படப் பாடல்களிலுள்ள இலக்கிய ரசனையை வெளிக்கொணரும் "நெஞ்சில் ஆடும் இசைச் செண்டு" என்ற மற்றுமொரு நிகழ்ச்சியை தமிழ்த் தேசிய சேவையில் 1995ம் ஆண்டுக் காலப் பகுதியில் பல வாரங்கள் சகோதரி இராஜேஸ்வரி அவர்கள் தொகுத்து வழங்கி வந்திருப்பதும் நேயர்களால் மறக்க முடியாத பதிவுகளாகும்.

1980ஆம் ஆண்டு ஜனவரி 16ம் திகதி வர்த்தக சேவையில் அறிமுகம் செய்யப்பட்டு, ஒவ்வொரு புதன்கிழமை தோறும் ஒலிபரப்பாகி வந்த "வீட்டுக்கு வீடு" என்ற மங்கையர்களின் சந்திப்பு நிகழ்ச்சியை மாதத்தில் ஒரு தடவை சகோதரி இராஜேஸ்வரி அவர்களும் தொகுத்து வழங்கியிருக்கிறார்.

1975ஆம் ஆண்டு இலங்கை வானொலியின் பொன் விழாவையொட்டி வர்த்தக சேவை ஒரு வார காலம் தினம் ஒரு சிறப்பு நிகழ்ச்சியை ஒலிபரப்பியிருந்தது. இந்தச் சிறப்பு நிகழ்ச்சித் தொடரில் 1975 டிசெம்பர் 12ம் திகதியன்று மாலை 5.15 முதல் 5.30 வரை "நாடக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம்" என்ற பெயரில் சகோதரி இராஜேஸ்வரி அவர்கள் நிகழ்ச்சியொன்றைத் தயாரித்துத் தொகுத்து வழங்கியிருந்தார் என்பது வரலாற்றுச் செய்தியாகும்.

வர்த்தக சேவையில் ஒலிபரப்பாகிய பல விளம்பர நிகழ்ச்சிகளை சகோதரி இராஜேஸ்வரி இதுவரையில் தொகுத்து வழங்கி வந்திருக்கிறார். பட்டியல் நீண்டு கொண்டே போகும். இரு தசாப்த காலத்திற்கு முந்திய ஒரு நிகழ்வை நோக்கினால் ஜே. எல். மொறிசன் சன் அன்ட் ஜோன்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் "தாயும் சேயும்" என்ற நிகழ்ச்சியை 1977ஆம் ஆண்டிலிருந்து 3 1/2 வருடங்களுக்கும் மேலாக நடத்தி வந்ததன் மூலம் சிறப்பானதொரு சாதனையைப் புரிந்துள்ளார் என்று சொல்லலாம்.

வர்த்தக சேவையின் நீண்ட கால நிகழ்ச்சியான "ஒலி மஞ்சரி"யும் சகோதரி இராஜேஸ்வரி அவர்களின் கைவண்ணத்தில் சில காலம் ஒலிபரப்பாகியிருப்பதும் வரலாற்றுப் பதிவாகியிருக்கிறது.!

வர்த்தக சேவையின் அறிவிப்பாளராகக் கடமையாற்றிய போதிலும், தேசிய சேவையிலும் இவரது பங்களிப்பு அதிகமாக இருந்ததைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். "மழலைச் செல்வம்" என்ற சிறுபிள்ளைகளுக்கான நிகழ்ச்சியைத் தேசிய சேவையில் நீண்ட காலமாகத் தொகுத்து வழங்கியிருக்கிறார். இது தவிர, வர்த்தக சேவையில் மணிமலர், பேசும் சித்திரம் போன்ற சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகளையும் நடத்தி வந்திருப்பதன் மூலம், இன்று பெரியவர்களாகியிருக்கும் அன்றைய சிறுவர்கள் பலரின் அபிமானத்தைப் பெற்றுக் கொண்டார்.

நிர்வாக ரீதியாக மும்மொழிச் சேவைகளையும் உள்ளடக்கியதாக தனித்தனியாக இயங்கி வந்த தேசிய சேவையும் வர்த்தக சேவையும் 1971ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மொழி வாரியாக ஒன்றிணைக்கப்பட்டு, ஒவ்வொரு மொழிச் சேவைக்கும் தனியான நிர்வாகப் பிரிவு அமைக்கப்பட்டதன் காரணமாகத் தமிழ் வர்த்தக சேவையினதும் தமிழ் தேசிய சேவையினதும் அறிவிப்பாளர்கள் இரு சேவைகளிலும் மாறி மாறிக் கடமையாற்றத் தொடங்கினார்கள். இந்த வகையில் தமிழ் வர்த்தக சேவையின் அறிவிப்பாளரான சகோதரி இராஜேஸ்வரி முதற் தடவையாக 1971 ஒக்டோபர் 11ம் திகதி மாலை 6.00 மணிமுதல் இரவு 10.30 மணி வரை தமிழ்த் தேசிய சேவையின் அறிவிப்பாளராகக் கடமையாற்றியிருப்பது வரலாற்றுப் பதிவேடு தரும் தகவலாகும்.

ஈரடிக் கவிதை மூலம், நேயர்களது இதயத்தை ஈர்ந்து கொண்டவர் சகோதரி இராஜேஸ். முதலில் "மகளிர் கேட்டவை" பாடல்கள் மூலமாகவே ஈரடிக் கவிதை சொல்லும் தனிப் பாணியை ஆரம்பித்துப் பின்னர் நீங்கள் கேட்டவை, விடுமுறை விருப்பம் என்று விஸ்தரித்து, இறுதியாக "பொங்கும் பூம்புனல்"லுடன் நிரந்தரமாகவே கலந்த ஒலிக்கத் தொடங்கி விட்டது.

தன்மீது அபிமானம் வைத்திருக்கும் நேயர்களைப் பெரிதும் மதித்து வருபவர் சகோதரி இராஜேஸ். "நேயர்களுக்குத்தான் என்முதல் மரியாதை. நேயர்களது மாறாத அன்பே, எனக்குக் கிடைத்துள்ள மகத்தான பரிசு" என்று அவர் தெரிவித்திருப்பதன் மூலம் உண்மை நிலை தெளிவாகிறது.

பாடும் குயிலோசை வேறு. இது பேசும் குயிலோசை. வானோசையாக வந்து இனிமை தரும் தேனோசை அது.

*ஊரெழு* அ. கனகசூரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் "நெஞ்சில் நிறைந்தவளை........"

கலை ஆர்வத்தால் கலை உலகில் கால் பதித்தவள். கால் பதித்த இடம் கல்மேல் பதிந்துவிட்டது. அந்தப் பதிவை அழிக்க முடியவில்லை. அந்தக்கல்லை அகற்ற முடியவில்லை. காரணம் என்ன?

தமிழைத் தமிழாக உச்சரிக்கும் அந்தத் திறமை. வெறும் வசனநடையாக அல்லாமல், அதற்கு உயிரூட்டி, கேட்போர் காதுகளில் புகுந்து இதயத்தைத் தொட்டுவிடும். அந்த உணர்வு பூர்வமான பேச்சுவன்மை, ன, ண, ல, ழ, ர, ற போன்ற தொனி வேறுபாடுகளை உணர்ந்து கூறும் அந்த லாவகம், இத்தனைக்கும் மேலாக மாஞ்சோலைக்குயிலின் மணிக்குரல் – அன்றும் இன்றும் அதே குரல் வன்மை – எப்படி அழிக்க முடியும்? எப்படி அகற்ற முடியும்? அந்தக் குரலில் மயங்கியோர் ஒன்றா இரண்டா – ஆயிரமா – லட்சமா – சொல்லத்தான் முடியுமா?

இலங்கை வானொலியில் மழலைகளை மகிழ்வித்த ஓடி விளையாடு பாப்பா, 1973 காலப்பகுதியில் மழலைச் செல்வம் – வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த மங்கையரைத் தட்டி எழுப்பி, அவர்களின் திறமைகளை வெளிக் கொணர்ந்த பூவும் பொட்டும் திங்கள் மலர், (எழுதும் நடையில் தவறு இருந்தாலும், அதை ஒதுக்கிவிடாமல் திருத்தி ஒலிபரப்பித் திறமைகளை வளர்த்த உயர்ந்த பெருமைக்குரிய ஒரு பெருந்தன்மை வாய்ந்த ஒலிபரப்பாளர் அவர்) இன்றைய வீட்டார் வீடு போல் அன்று மாறுபட்டு அமைந்த வீட்டுக்கு வீடு, பெயர் கேட்ட அனைவரையும் ஈரடிக் கவிதையால் நீராட்டிவரும் பொங்கும் பூம்புனல், இலக்கியப் படைப்பான பொதிகைத் தென்றல், வானொலியில் ஒலிபரப்பான அத்தகைய நிகழ்ச்சிகளிலும் – கேட்டு, கலந்து கொண்ட என்னை வானொலி மூலம் வளர்த்தவள் – கற்றதை, கேட்டதையெல்லாம் தேவையான சந்தர்ப்பங்களில் புகுத்தி எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற உத்வேகம் கொண்டவளை – குரல்வளத்தாலும் – அறிவாற்றலாலும் என் இதயம் கொள்ளை கொண்டவளை ஒருநாள் – விமல் அண்ணா மூலமாக வானொலி நிலையத்தில் சந்தித்தபோது –

என் நெஞ்சில் நிறைந்தவளைச் சந்திக்கும் ஆவல் பொங்கும் பூம்புனலாகப் பொங்கி வழிந்தது. கண்டதும் பூரித்துப் போய்விட்டேன். இன்னார் என விமல் அண்ணா அறிமுகப்படுத்தியபோது ....." ஓ! என் மகளல்லாவா" என்றார். ஒரு தாயைக் கண்ட உணர்ச்சி உடன் எழுந்தது அந்த ஒரு வாக்கியத்தில். 'என் மகளின் பெயரும் உங்கள் பெயரும் ஒன்று என்பதால் என் உயிருள்ளவரை உங்களை என்னால் மறக்க முடியாது, என்றவர், தன் கைப்பட எழுதியும் தந்து விட்டார். என் கண்கள் பனிக்க – நன்றியுடன் பெற்றுக் கொண்டேன்.

தனக்கென ஒரு பாணியை வகுத்து – எப்படியெல்லாம் தரமாக நிகழ்ச்சிகளை அமைக்க முடியுமோ – அப்படி மாற்றி – விசேடமாக நேயர்களை – மதித்து, அவர்களின் ஆக்கங்களுக்கு, கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுத்து, அவர்களின் மனம் புண்படாமல் லாவகமாக அவற்றைப்புரிந்து, புரியவைத்து, பல்லாயிரக்கணக்கான நெஞ்சங்களை மலரவைத்துக் கொண்டிருக்கும் என் "நெஞ்சில் நிறைந்தவளை" என்னால் மறக்கத்தான் முடியுமா?

*திருமதி வசந்தகௌரி விமலேந்திரன்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானொலிக் குயிலின் வரலாற்றில் சில ஏடுகள் படங்களாக உங்கள் பார்வைக்கு



'கேட்காமல் கிடைத்தது' – பி. நல்லுசாமி எழுதிய தொடர் நாடகத்தின் ஒத்திகை. படத்திலிருப்பவர் (இடமிருந்து) இராஜேஸ்வரி சண்முகம், தயாரிப்பாளர் 'சானா', தாசன் பெர்ணான்டோ, ரி. ராஜேஸ்வரன்



ஆறு கோடி ஓர் அற்பம் – 'நடமாடி' எழுதிய நாடகம் 19.08.69 இரவு 9.30க்கு ஒலிபரப்பாகும். (இடமிருந்து) தாசன் பெர்னாண்டோ, ரி. இராஜேஸ்வரன், ராஜேஸ்வரி சண்முகம், தயாரிப்பாளர் 'சானா', எஸ். விஸ்வரத்தினம், கே. வி. ராஜரத்தினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நீ தானா அந்தக் குயில்!'

இனிமையான குரலால் நேயர்களைக் கவர்ந்த இலங்கை வானொலிப் பெண் அறிவிப்பாளரை வரவேற்கத் திருநெல்வேலி ஹோட்டல் ஆரியாஸ் அபிநயா அரங்கு அண்மையில் விழாக்கோலம் பூண்டிருந்தது.

அரங்கில் நிறைந்திருந்த நேயர்கள் இதற்கு முன் அவரை பார்த்ததே இல்லை. அவரது குரலை மட்டும் தினம் தினம் கேட்டு ரசித்திருந்தார்கள். அந்த அபிமான குரலுக்குச் சொந்தக்காரரைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வத்தில் நேயர்கள் காணப்பட்டனர். குறிப்பிட்ட நேரத்தில் அரங்குக்கு வந்த 'அந்த' அறிவிப்பாளரை வரவேற்ற நேயர்கள் சிலரது முகங்களில் சிறிது ஏமாற்ற ரேகையைக் காணமுடிந்தது.

நேயர்களில் பலர் கற்பனை செய்து வைத்திருந்த உருவத்திற்கும் நியமான இராஜேஸ்வரி சண்முகத்தின் தோற்றத்திற்கும் தான் எத்தனை எத்தனை இடைவெளி!

அவரது குரலின் இனிமை, உச்சரிக்கும் தன்மை, இவற்றை வைத்து, 'இவருக்கு வயது குறைவாக இருக்கும்!' என்று கற்பனை செய்து வைத்திருந்த நேயர்களில் பலர் நேரில் இராஜேஸ்வரியைப் பார்த்தபோது, தங்கள் கண்களைத் தங்களால் நம்ப முடியாமல் தவித்தனர்.

தூத்துக்குடி ரேடியோ நிலைய இயக்குனர் இளசைசுந்தரம் நகைச்சுவை ததும்பப் பேசுகையில்: 'இராஜேஸ்வரி சண்முகம் எப்படி இருப்பார் என்பது பற்றிய தமது கற்பனையும் தப்பாகப் போய்விட்டது' என்பதை ஒப்புக்கொண்டார். அப்போது இராஜேஸ்வரி சண்முகம் புன்முறுவல் பூத்தார்.

'தென்பொதிகைத் தமிழ்ச் சங்கம்' என்ற அமைப்பின் சார்பில், 'வானொலிக் குயில்' என்ற பட்டத்தைப் பெற இராஜேஸ்வரி சண்முகம் வந்திருந்தார்!.

இலங்கை வானொலியின் மூத்த அறிவிப்பாளர் இராஜேஸ்வரி சண்முகம் கடந்த 42 ஆண்டுகளாக இலங்கை வானொலியில் சாதனை படைத்து வருகிறார். இராஜேஸ்வரி சண்முகம் பேசும்போது, 'நான் வானொலியில் ஒலிவாங்கியின் முன்பு அமர்ந்து பேசும்போது எனக்கு வார்த்தைகள் தாராளமாக வரும். இங்கு நீங்கள் அளித்த பாராட்டின் காரணமாக அதற்கு நன்றி சொல்ல வார்த்தை கிடைக்காமல் என்ன சொல்வது என்று புரியாமல் தவிக்கிறேன். கடந்த 42 ஆண்டு காலமாக ஒலிபரப்புத் துறையில் நான் ஆற்றிய தமிழ்ப் பணியில் சிலவற்றை நானே கூட மறந்திருக்கிறேன். ஆனால் நீங்கள் நினைவில் வைத்து பாராட்டியிருக்கிறீர்கள். கடல் கடந்து வந்துள்ள ஒரு வானொலி அறிவிப்பாளருக்குப் பாராட்டு விழா என்று ஆச்சரியப்பட்டுப் போனேன்.

'நான் 1952ல் நாடகக் கலைஞராகத்தான் மக்களிடம் முதலில் அறிமுகம் ஆனேன். நான் எதிர்பாராத, அறிவிப்பாளர் பணி எனக்குக் கிடைத்தது. நேயர்களின் உயர்ந்த அன்பைப் பெற்றது நான் செய்த பாக்கியம்.

'நேயர்கள் என்மீது காட்டும் அன்பு அளவிட முடியாது. நேயர்கள் எழுதும் கடிதங்கள் என் உள்ளத்தைத் தொடுகின்றன. அவைகளைப் பாதுகாத்து வைத் திருக்கிறேன்.

'தஞ்சை மாவட்டத்தில் இருந்து ஒரு பெண்மணி எனக்கு எழுதியுள்ள கடிதத்தில், உங்கள் குரலை வானொலியில் கேட்டால்தான் என் குழந்தை சாப்பிடுகிறான்', என்று எழுதியிருக்கிறார். இதைப் படித்து நான் உள்ளம் பூரித்துப் போனேன். ஒரு நாள் வானொலியில் பணிக்குச் செல்ல இயலாமல் போனால் கூட உடம்புக்கு என்ன என்று நேயர்கள் தொலைபேசியில் கேட்கின்றனர்.

'அண்மையில் இலங்கைத் தேர்தல் திருவிழா முடிவு அறிவிக்க நானும் விடிய விடிய கடமை செய்தேன். தமிழகத்தில் இருந்து ஒரு பெண் நேயர் எனக்கு எழுதியுள்ள கடிதத்தில், 'அன்று நீங்கள் இரவில் உறங்காததால் நானும் உறங்கவில்லை,' என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

'கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு நான் பணியிலிருந்து ஓய்வு எடுத்து விடலாமா என்று எண்ணியபோது, 'உங்கள் குரலைத் தொடர்ந்து கேட்கும் வாய்ப்பைக் கொடுங்கள்,' என்று வந்த கடிதங்கள் ஏராளம்! நேயர்களின் இந்த அன்பைப் பெறுவதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது' என்றார்!

*(தினகரன் – தமிழ்நாடு)*

*மா. தர்மலிங்கம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வானொலிக்குப் பெருமை சேர்க்கும்

## "இனிய தமிழ்க் குயிலே"

நாள்: 1995 ஜனவரி 29 ஞாயிற்றுக்கிழமை
இடம்: திருநெல்வேலி அபிநயா அரங்கம்

எங்களுக்காகப் பணிசெய்யும்
ஏராளமான வானொலிகளிலே
ஏக்கமுடன் கேட்கும் வானொலி
எங்கள் கொழும்பு சர்வதேச வானொலி! ஆம்
சிறப்பான கருத்துக்களை சிந்திக்க தூண்டும்
எண்ணத்தோடு "பச்சைக்கிளி" எனும்
குரலோடு பணி செய்யும்
இராஜேஸ்வரி எனும் "ராகக்குயிலே"
உங்களைத்தான் கூறுகின்றேன்!
தென்றலாக வருகின்றீர்!
தென்றலையும் அனுப்புகின்றீர்!
"பொதிகை தென்றலையும்" தருகின்றீர்!
வாரம் தோறும் வெள்ளி மாலை வந்து
அந்நிகழ்ச்சி படைக்கின்றீர்! எங்கள்
இல்லங்களுக்கு அனுப்பி இனிமை மழை பொழிகின்றீர்!
"வசந்தம்" என்பதைக் கேட்டதுண்டு
வானொலியில் நீங்கள் நிகழ்ச்சியை வழங்கியபோது
அனுபவிக்கும் பேறு பெற்றோம் இன்று!
எண்ணற்ற நிகழ்ச்சியை வழங்கிய
உங்களைத்தான் பாராட்ட உள்ளம் மகிழ்ந்து
தமிழ் இலக்கியத்தைப் புரட்டினேன்
புதிய வரிகள் கிடைக்கவில்லை!
தமிழால் இனிக்கின்ற "*ராகக்குயிலே*"
இராஜேஸ்வரி சண்முகமே!
என் மனதில் தோன்றிட்ட வார்த்தைகளின்
துணைகொண்டு வாழ்த்துகிறோம் உங்களைத்தான்!
வாழுங்கள் பல்லாண்டு
படைத்திடுங்கள் இன்னும் பல சாதனைகள்!
இலங்கை வானொலியில் உங்கள் பணி
தினந்தோறும் தேவை என்று வாழ்த்துகிறோம்!

*ஆக்கம்:* சி. சிவசுப்பிரமணியன்
*தலைவர், வானொலி இளைஞர் மன்றம், நரசிங்கன் பேட்டை – 609802. தஞ்சை*

*வாழ்த்துவதில் இணைவோர்:*
S. கோவிந்தராஜு, திருமங்கலக்குடி.
முல்லை. அண்ணாதுரை, ஆடுதுறை
G. R. வரதராஜன், திருமங்கலக்குடி.
மற்றும் தஞ்சை மாவட்ட இலங்கை வானொலி நேயர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் குரலைத் தினமும் கேட்பேன்

"தேர்ந்த இசை நல்ல நிகழ்ச்சி என்று பலர்
தெவிட்டாமல் எழுதி வந்தார் திறமை கொண்டு
தேன் குரலால் தீந்தமிழை நாவிற் கொண்டு – அதை
சிறப்பித்தார் இராஜேஸ்வரி சண்முகம் அன்று

இளைஞர் உலகம் என்ற நிகழ்ச்சி ஒன்று – அந்த
எழுபத்து மூன்றில் வந்தது எழுச்சி கொண்டு
இளைஞியாய் நின்று அதை ஏற்றுக் கொண்டு – மிக
எழிலாக நடத்திவந்தாய் ஏற்றம் கொண்டு

வானொலி மலர் என்னும் நிகழ்ச்சி ஒன்று – பல
வருடங்கள் முன்னாலே வந்தது உண்டு
வாலிப மிடுக்கோடு அதையும் கண்டு – நீ
வானலை வழியாக வடித்தாய் நன்று

இசையும் கதையும் நல்ல நிகழ்ச்சி என்று – நேயர்
எல்லாரும் விரும்பிக் கேட்ட காலம் உண்டு
இசைவோடு நீ நடித்த திறமை கண்டு – எங்கள்
இமையோரம் நீர்வழிந்த நிலையும் உண்டு

வனிதா மண்டலம் என்ற நிகழ்ச்சி ஒன்று – வாரா
வாரம் நீ நடத்திய மலர்ச்சி கண்டு
வனிதையர் நெஞ்சில் உனை
வாழ்த்திய காலங்கள் வளர உண்டு

பாட்டும் பதமும் அறிவை ஊட்டும் என்று – அதில்
பல்லாயிரம் பேர் மனம் லயிக்கக் கண்டு
பாட்டும் பதத்தை புதுபித்தாய் நன்று – நீ
பட்ட பாட்டிற்கு நல்ல பலனும் உண்டு

விமர்சன விருப்பத்தில் விருப்பம் கொண்டு – அதை
விலக்கிப் படித்தாய் நல்ல சிரத்தை கொண்டு
விமர்சித்த வித்தகத்தை வியந்து கொண்டு – நாம்
விழி மலர்ந்தோம் உன் விவேகம் கண்டு

இவ்வார நேயர் என்ற நிகழ்ச்சி ஒன்று – அதை
எல்லோரும் செவி மடுப்பார் மகிழ்ச்சி கொண்டு
எவ்வாறு நடத்தினாய் நீ நெகிழ்ச்சி கொண்டு – அதில்
எங்கள் நெஞ்சு உருகுமே இளக்கம் கொண்டு

பொதிகைத் தென்றல் நிகழ்ச்சி கொண்டு – நீ
பூரிக்கச் செய்தாய்; அது பெரிய தொண்டு
பொதிகைத் தென்றலுக்கென்ன வயதா உண்டு! உன்
பூங்குரலுக்குக் கதுபோல இளமை உண்டு

இசைமாலை என்றதொரு நிகழ்ச்சி உண்டு – நல்ல
இசைப்பிரியர் ரசிக்கின்ற நிகழ்ச்சி என்று
இசைமாலை தொகுத்தெடுத்தாய் மிகவும் நன்று – நீ
இசை மேதை ஆவதற்கும் தகுதி உண்டு"

கவிதை வ. சி. துரைராஜ்

---

அன்புமிக்க சகோதரி இராஜேஸ்வரி சண்முகம் அவர்களுக்கு,

வணக்கம். இவ்வளவு தூரத்திலிருந்து எழுதி அனுப்பும் என் பிரதிகளை காலந்தாழ்த்தினாலும் தவறாமல் ஒலிபரப்பி வருவதற்காக முதற்கண் என் இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வனிதாவுக்கு எழுதும் எல்லா சகோதரிகளுக்கும் வாய்ப்பளிக்கும் உங்களுடைய உயர்ந்த பண்பை நாங்கள் பெரிதும் போற்றுகின்றோம். அத்துடன் உயர்ந்த பெண்ணுக்கு உவமையாக விளங்கும் உங்களுடைய சிறந்த அறிவையும் உன்னத குணங்களையும் கண்டு நாங்கள் பெரிதும் வியக்கின்றோம். உங்களுடைய இனிய குரலும் அது நேயர்களை கவரும் விதமும் தனித்தன்மை வாய்ந்ததுதான்.

*18.11.76*

P. பஞ்சவர்ணம், *பர்மா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பாளரின் பாராட்டுக்களையும் பெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளையும் படைத்தவர் நம் வானொலிக்குயில்

# LETTER OF COMMENDATION

To: Mrs. R. Shanmugam - Announcer, Channel II

I listented to the Vesak Programme written and produced by you on 5th May, 1974 at 8.30 a.m. The programme was presented very well.

I am pleased to commend you on this programme.

**K. S. Nadarajah,**
Director,
Tamil Services.

7th May, 1974.

---

**Mrs. Rajeswari Shanmugam,**
Announcer,
Sri Lanka Broadcasting Corparation,
Colombo 7.

Dear Mrs. Shanmugam,

I wish to thank you sincerely on behalf of the Ministry for the assistance and co-operation that you gave us in the preparation of the film regarding Hon. Minister's official activities, since he was appointed as Minister for Rural Industrial Development. Without such assistance, it would not have been possible to produce this film in such a short time. The excellent manner in which the film had been produced was much appreciated.

**K. N. Weerackody**
Secretary
Ministry of Rural Industrial Development.

---

**Mrs. R. Shanmugam,**

The success of the Navarathri Show Programme held on 30.09.78 at Ramakrishna Hall was in a great measure enhanced by your co-operation. This would prove that a combined effort of this nature would always bring success to the Tamil Service.

I would like to personally place on record my great appreciation of the commendable success of this show.

05.10.78.

**Ponmani Kulasingam,** D. T. S.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Mrs. Rajeswary Shanmugam - Announcer**

Hon. Minister **Mr. S. Thondaman,** Minister of Rural Imdustrial Development has intimated his sincere appreciation for the co-operation extended by you in the production of the film purtaining to his official activities.

You are highly commended for bringing honour to the Corporation.

**P. KULASINGAM**
*Director Tamil Service*
*f/ Mr. Eamon Kariyakaravana.*
*(Chairman)*

29th March, 1979.

---

**Mrs. Rajeswary Shanmugam / Announcer**

The high standard of the Drama Festival held on 7th April, 1979 at New Kathiresan Hall was in a great measure enhanced by the part played by you.

Your contributions are appreciated and commended.

**P. Kulasingam**
Director, Tamil Service.

---

## தெய்வத் தமிழ் வாணி
## வாழ்க! வளமுடன்!

அண்ணல் முருகனின் அருந்தமிழ் பணிகொள,
முன்னைத் தவங்கள் முயன்று கொண்டீரோ!
கன்னித் தமிழை கவினுற வழங்கி
காலமெலாம் நிலை பேறு பெறுகிறீர்!
பொதிகைத் தென்றலில் தமிழ்மணம் கமழ,
புதிய பொலிவுடன் இலக்கியம் திகழ,
புதிய ஆக்கங்கள் ஊக்கம் பெறவே,
புத்துணர்ச்சி தந்த அன்புடை சோதரி!
பாரில் சிறந்த தமிழ் வானொலியில்
பணியைத் தொடர்ந்து பவழ விழாவில்
பேறு கொண்டிடும் பெண்கள் திலகமே!
'தெய்வத் தமிழ் வாணி'யே, வாழ்க!
அவனருள் ஒன்றே வாழ்வில் வழித்துணை,
ஆழ்கடல் கடக்க அரிய பெரும்புணை!
அவனருளாலே அனைத்தும் பெறுவீர்!
அன்புடை தெய்வத் தமிழ் வாணியே வாழி!

புதூர்,
திருநெல்லிக்காவலி, 610205
திருவாரூர் மாவட்டம்.

அன்பன்
ச. பக்தவத்சலம் M. A.,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானொலிக் குயிலே வாழ்க !

ஈழத் தமிழ் அலைதனிலே
இனிய மாலைப் பொழுதினிலே
ஏழு நாட்களுக் கொரு முறை
882 KHZ அலை வரிசையில்
இனிதே உலா வருகின்ற
இனிமை பொங்கும்
நிகழ்ச்சியான
இனிக்கின்ற தென்றல் தனை
இனிய நல் வாய் மொழியில்
தூது விட்டு மனங்களைத்
துள்ள வைத்து மகிழ்வித்து
ஏது நிகர் இதற்கென்று
எண்ணி நாம் வியந்திடவும்
வான் புகழ் தமிழ் பெறவே
வகை செய்த முன்னோரைச்
சான்றோரை, பெரியோரை
சங்க காலப் புலவர்களை
சிந்தையில் நாம் நிறுத்த
சீர்மிகு வழிகாட்டும்.

★ ★ ★

விந்தைகள் புரியும் எம்
வானொலிக் குயிலே!
பூவுலகில் அனைவரும்
பரவசம் அடையத் தினம்
கூவுகின்ற கோகிலமே
கோடி வளம் பெருக வாழ்க!

★ ★ ★

எங்களது......
இல்லத்திலிருந்து
இதயங்களைச் சுமந்து
இந்தியப் பெருங்கடல்
கடந்து வரும்
இனிய வாழ்த்து இது!

ஒலிபரப்பு பணிமூலம்
உலகளாவி புகழ்சூடி
பிரபஞ்சத்தையே வசப்படுத்தும்
பிரியமுள்ள சகோதரியே!

உங்கள்
கவிதைக் குரல் சுமக்கும்
காற்று வெளிகளுக்கும்
கர்வம் பிறக்கும்!

வசீகர குரல் கேட்டு
வானம் கூட வசப்படும்!

கோவி. ஐயப்பன்,
*தமிழ் நாடு,*
*இந்தியா.*

---

## வளரட்டும் தமிழ்த்தொண்டு

காடு மடு மலைதனில் நின் குரல்எதி ரொளித்து – சூழ்
கடல் நதி அலைதனில் உடல் குளித்து

வான் முகிலினதாய் வளி யிடைமிதந்து – தவழ்
வளர் வெண்மதியாய் குளிரினைப் பொழிந்து
கருத்துடை கவிபல புனைந்து – உயர்
கன்னிச் செந்தமிழ்தனை ஆக்கமாய் வனைந்து
தமிழ் நெடுஞ் சுவைப் பாலினை கலந்து – நேயர்
தமிழ் நெஞ்சந்தனில் தூரலாய் விழுந்து
உட் செவிகளை நனைக்கும் இன்பத் தமிழ்ச் சாரலே!

அக மகிழ் நல் அன்பினை நிறைத்து – வரும்
அனு தினம் மன நினைவினில் நிலைத்து
உள்ளச் சுவர்களுள் ஒலிக்கும் தமிழ் குயிலே! நீ
வாழ்க வையகம்தனில் வளமுடன் பல்லாண்டு! – வானுயர்
வளரட்டும் புகழுடன் உன் திரு தமிழ்த் தொண்டு!

வேதை. ச. அண்ணாமலையான்
*பஞ்சநதிக்குளம் கிழக்கு,*
*வேதாரண்யம் தாலுக்கா,*
*நாகை காயிதே மில்லத் மாவட்டம், அ. கு. எண். 614 714*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிப்பாற்றல் மிக்க அந்த வானொலிக் குயில், மேடை நாடகத்துறையில் நுழைந்து அரங்கேறிய அந்தநாள்

# நெஞ்சில் நிறைந்தவள்!

கொழும்பில் மேடையேறும் தமிழ் நாடகங்களுக்கும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

வானொலிக் கலைஞர்கள் பங்குபற்றும் நாடகம் என்றால் மண்டபம் நிறைவது சர்வ சாதாரணமாகி விட்டது.

இலங்கை வானொலியோடு தொடர்புடையவர்களாகி, எல்லோர் மத்தியிலும் நன்கு அறிமுகமாகிய சி. சண்முகம், இராஜேஸ்வரி சண்முகம், பிள்ளைகள் என்ற இக்குடும்பம் பல வருடகாலம் தமிழ் நாடகத்துறை வளர்ச்சிக்குப் பணிபுரிந்து வருவது யாவரும் அறிந்ததே.

"நெஞ்சில் நிறைந்தவள்" நாடகத்தில் சி. சண்முகம், இராஜேஸ்வரி சண்முகம், சந்திரமோகன் சண்முகம் ஆகியோரோடு வானொலி அறிவிப்பாளர்களான ஜோர்ஜ் சந்திரசேகரம், கே. சிவசோதி ஆகியோரும் திரைப்பட நாடக நடிகரான, கே. ஏ. ஜவாஹரும், நெயிரஹீன் சஹிட்டும் பங்கு கொண்டுள்ளார்கள். கதை வசனம், நெறியாள்கை முதலிய பொறுப்புக்களை சி. சண்முகமும், ஜோர்ஜ் சந்திரசேகரனும் ஏற்றிருப்பது – இவ்விருவரினதும் முதிர்ந்த நாடக அனுபவத்தை பறை சாற்றியிருக்கிறது.

மலையகக் கள்ளம் கபடமற்ற அசட்டுத்தனமுடைய (இராஜேஸ்வரி சண்முகம்) லெட்சுமியை மணம் முடித்த எழுதுவினைஞர் ஆடியபாதம் (ஜோர்ஜ் சந்திரசேகரன்) பொது முகாமையாளராகப் பதவி உயர்வு கிடைத்ததும் தனது அந்தஸ்த்துக்கு ஏற்ப மனவியிடமும் அறிவு, நாகரிக வளர்ச்சியை எதிர்பார்த்து மனைவி ஆங்கிலம் படிப்பதற்கு ஒரு ரீச்சரை (நெயிரஹீன் சஹீட்) ஒழுங்கு செய்கிறார். லெட்சுமியின் தந்தை (கே. ஏ. ஜவாஹர்) குடிபோதையில் மகள் வீட்டுக்கு வரவே ஆங்கில வகுப்பும் முற்றுப் பெறுகிறது. தந்தைக்கு உதவியாக ஓசிக் குடிக்குத் தவம் கிடக்கும் அடுத்த வீட்டுப் பரமசிவம் (கே. சிவசோதி) வருகிறார். குடிகார மாமன், அசட்டு மனைவி, பொது முகாமையாளர் என்ற அந்தஸ்து கெட்டவனான அடுத்த வீட்டுப் பரமசிவத்தின் நுழைவு எல்லாம் ஒன்றோடு ஒன்றாக மோதி ஆடியபாதத்தைத் திணறடிக்கச் செய்கிறது. ரீச்சரின் ஆலோசனைப்படி லெட்சுமியைப் பிரிந்து மறுமணம் புரிய அவன் மனம் எண்ணிய போதும் புதிய நாகரிக மனைவியின் போக்கும் அபாயமானது என்ற பயத்தாலும் லெட்சுமி தன் மீது கொண்ட களங்கமில்லாத அன்பாலும் ஆடியபாதத்தால் அவளைப் பிரிய முடியவில்லை. இறுதியில், லெட்சுமியைப் பிரிவதில்லை என்ற அவன் முடிவெடுக்கும்போது மாமனும் அயல்வீட்டுக்காரனும் தாங்களும் குடிப்பதில்லை என்று முடிவு எடுக்கிறார்கள்.

ஜோர்ஜ் சந்திரசேகரன், இராஜேஸ்வரி சண்முகம், கே. ஏ. ஜவர்ஹர் ஆகியோரின் பாத்திரச் சித்திரிப்பு அவர்களின் பண்பட்ட நடிப்பை வெளிக்காட்ட உதவியிருக்கிறது. நல்ல இள நடிகரான கே. சிவசோதியின் பாத்திரப் படைப்பு உயர்வானது மட்டும் அல்ல அவரும் அதை உணர்ந்து செய்தமை பாராட்டுக்குரியது. ரீச்சர், வேலைக்காரன் பாத்திரங்களின் சித்திரிப்பு வேறு பல நடிகர்கள் மூலம் பார்த்தனவற்றை ஞாபகமூட்டுகிறது.

இந்நாடகத்திற்கான சி. சண்முகத்தின் வசனங்கள் அப்பிளாஸ் பெறுபவை எனினும் பகிடிகள் பழையனதான். எல்லாவற்றிற்கும் மேலாக நெறியாள்கை பாராட்டுதற்குரியது. ஒரு நிகழ்வை நினைவுகளைக் காட்சியாக வெளிப்படுத்திப் பின் மீண்டும் நினைவுக்கு வருதல் தமிழ்த் திரைப்பட உத்தியெனினும் இந்நாடகத்தில் இக்காட்சி நாடக வரம்புக்குள் கட்டுப்பட்டுள்ளமையையும் நோக்கலாம்.

மேடை அமைப்பு, பின்னணி இசை, ஒளி, ஒலி அமைப்பு சிறப்பாக அமைந்த நாடகத்தை மேலும் மெருகூட்டியிருக்கின்றன.

நாகேசு தர்மலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞரின் வாரிசுகளை விட அதிகம் கவிஞருக்குச் செய்கின்ற தாங்களே உண்மையான வாரிசு என மனதார நினைக்கின்றேன்.

காந்தி கண்ணதாசன்
*கண்ணதாசன் பதிப்பகம், சென்னை*

---

உங்கள் கேள்வி – பதில்களை மகிழ்வுடன் வாசித்து வருகிறேன்.

குரலினிது என்பேன்
இன்றோ உங்கள் பதிலும் இனிதென்பேன்.

செழியன் பேரின்பநாயகம்
*மாநகரசபை முதல்வர், மட்டக்களப்பு*

---

உங்கள் குரலைக் கேட்கின்ற பொழுதெல்லாம் பூரண நிலாதான். குளிர் நிலவாய் உள்ளம் குளிரும். குரலைக் கேட்காவிடிலோ அன்றைய பொழுதே சோகத்துடன் கழியும். உண்மையிலேயே அன்றைய பொழுதில் காரணந் தெரியாத சோகம் நிறைந்து இருக்கும். உங்கள் குரல்தான் என்னை வாழ வைக்கும். ஆத்மராகம். உங்களை மானசீகக் குருவாகக் கொண்டு தமிழைக் கற்றேன். நாடகத்தையும், கவிதையையும் எழுதும் திறனைப் பெற்றேன். உங்களால் வளர்ந்தேன். இப்போது நீங்கள் இடையிடையே கூறும் நன்மொழிகளை வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ்கிறேன். அக்கா, உங்கள் மீது எனக்கிருக்கும் அன்பையும், பற்றையும், அபிமானத்தையும் வெளியிட வழியின்றித் தவிக்கிறேன், வார்த்தைக்குப் போராடுகிறேன்.

*வியாபாரிமூலை, பருத்தித்துறை* விக்னா செல்வநாயகம்

---

**Artakilam**

Phone : ~~823 49 06~~
~~822 90 82~~
Fax : 044 - ~~822 29 75~~

New Ph: No. 811 09 06
811 09 03
Fax: 811 29 75

*Approved by all India Radio, DoorDarshan, Satellite T.V., Radio Ceylon,*
*Producers of AD Films, T.V. Radio. Commercial.*
19, 1st Floor, Gangai Amman Koil Street, Royapettah, Chennai - 600 014.
Liaison Address : 61-A, Muslim North Street, Sivakasi, Ph. 23515
14/31, Avvai Shanmugam Salai, Nagercoil Ph : 27073

## அன்பு வாழ்த்துக்கள்

இலங்கை கொழும்பு சர்வதேச வானொலியில் அற்புதமான அறிவிப்பாளராகச் செயலாற்றி ஐம்பதாம் ஆண்டு பொன்விழா காணும் திருமதி. இராஜேஸ்வரி சண்முகம் அவர்கள் இன்று போல் என்றும் வளமான குரலில் வாழ.........

*இதயம் மலர்ந்த இனிய வாழ்த்துக்கள்* பாலசுந்தரம்

---

*தங்கள் குரலின் சாரலில்*
*நனைந்த*
*மகிழ்ச்சி............*
*கண்ணாடி சீசாவிற்குள்*
*சேமித்த*
*ஆலங்கட்டி மழையாய்*
*அப்படியே இருக்கிறது.*

அறிவுமதி,
சென்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழா வானில் வலம் வரும் வானொலிக் குயில்

எஸ் + எச் + ஏ + என்

*"பூவுக்குள் ஒளிந்திருக்கும் கனிக் கூட்டம் அதிசயம்!*
*வண்ணாத்தி பூச்சி உடம்பில் ஓவியங்கள் அதிசயம்!*
*துளை செல்லும் காற்று மெல்லிசையாதல் அதிசயம்!*
*குருநாதர் இல்லாத குயில் பாட்டு அதிசயம்!*

இப்படி ஒரு அருமையான அர்த்தமுள்ள பாடல் வரிகளுக்குச் சொந்தக்காரர்தான் கவிஞர் வைரமுத்து.

"குயில்" என்றால் கூவும் பறவை என்று மட்டும் அர்த்தமல்ல. சொல், கோகிலம், துளை, மேகம் என்றும், "குயிலுதல்" என்றால் சொல்லுதல், ஒலித்தல், அமைத்தல், பதித்தல், செறித்தல், இழைத்தல், நெய்தல், துளைத்தல் என்றும் அர்த்தங்களாகும்!

குயிலோசையைக் குரலினிமைக்கு உவமை கூறுவார்கள் கவிஞர்கள். அந்த இனிமை "சொல்" எனும் மொழி வளத்திலுமுண்டு; ஓசை நயத்திலுமுண்டு. ஆகவேதான் குரலினிமை குயிலாகிறது.

"கவிக்குயில்" என்றால் சரோஜினி, கானக்குயில் என்றால் சுப்புலட்சுமி, இசைக்குயில் என்றால் லதா மங்கேஷ்கர், சுசிலா, சின்னக் குயில் என்றால் சித்ரா.

இந்த வரிசையில் தமிழ் எனும் சொல் கொண்டு ஒலி வானில் வலம் வரும் "வானொலிக் குயில்" தான் திருமதி இராஜேஸ்வரி சண்முகம். இவர் இலங்கை வானொலி மூலம் இவ்வுலகமெல்லாம் அறிமுகமானவர்.

1995ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தமிழ் நாடு எட்டயபுரம், தென்பொதிகைத் தமிழ்ச் சங்கம் நடத்திய விழாவில்தான் "வானொலிக் குயில்" என்ற பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது.

கவிஞர் வைரமுத்துவோ இவரைத் "தமிழ்க்குயில்" என்றே அழைப்பார். மற்றும் வாகீச கலாபமணி, மொழி வளர்ச்செல்வி, தொடர்பியல் வித்தகர், வான் மகள் போன்ற பல பட்டங்களுக்கும் சொந்தக்காரிதான் இராஜேஸ்வரி சண்முகம்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இலங்கை வந்திருந்த சமயம், இராஜேஸ்வரி சண்முகத்தைப் பார்க்க வேண்டுமென்று விரும்பினாராம். ஏனென்றால் அவர்கூட இராஜேஸ்வரியின் ரசிகராம். சிவாஜிக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டபோது, 16 வயதுடையவராக இருப்பார் என்றல்லவா எண்ணியிருந்தேன் என்று சொல்லி ஆச்சரியப்பட்டாராம். அந்த இராஜேஸ்வரி சண்முகத்துக்குத்தான் கடந்த செவ்வாய்க்கிழமை (26.12.2000) பொன் விழா!

இலங்கை வானொலி வர்த்தக சேவையில் அறிவிப்பாளராகப் பணியாற்றி 25 வருட வெள்ளி விழாக் கண்டவர் இன்று ஒலிபரப்பாளராகப் பணியாற்றியதன் மூலம் 50 ஆவது வருட பொன்விழாவையும் கண்டுவிட்டார்.

"மெட்டுப்போடு..... மெட்டுப்போடு.... தாய் கொடுத்த தமிழக்கில்லை தட்டுப்பாடு" என்பதற்கேற்ப இவரது வானொலிப் பணி 75 ஆவது பவள விழாவையும் காணும் என்பதில் சந்தேகமே இல்லை!

(வீரகேசரி - வார வெளியீடு) *31.12.2000*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழாக் காணும்
# வானொலிக் குயில்

இலங்கை வானொலி அண்மையில் வைர விழாக் கண்டது. அதற்குத் தமிழ்ச் சேவை பெரிய விழாவையே எடுத்தது. மூத்த ஒலிபரப்பாளர்கள் பலர் அவ்விழாவில் கௌரவிக்கப்பட்டனர். அவர்களில் வானொலிக் குயில் ஒன்றுக்கும் கௌரவம் வழங்கப்பட்டது. அந்த வானொலிக் குயில் இந்த வருடம் தனது கலை வாழ்க்கையின் ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.

இலங்கை வானொலியின் இனிய பெண் அறிவிப்பாளர் திருமதி இராஜேஸ்வரி சண்முகம் தனது ஒலிபரப்புக் கலை வாழ்க்கையின் பொன் விழாவை இன்று கொண்டாடுகிறார்.

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் பிறந்தவர் இராஜேஸ்வரி சண்முகம். கொட்டாஞ்சேனை மத்திய மகா வித்தியாலயத்தில் ஆங்கில மொழிமூலம் கல்வி கற்றவர். 1950ஆம் ஆண்டு வானொலிக் கலைஞராகத் தனது கலை வாழ்க்கையை ஆரம்பித்தவர். நாடக நடிகையாக, வானொலி நடிகையாக, வானொலி அறிவிப்பாளராக, வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளராக இன்னும் எத்தனையோ கலைமுயற்சிகளில் ஈடுபட்டு இன்றும் தொடர்கிறார். வானொலி நிலைய நிரந்தர உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெற்று விட்டாலும் இப்பொழுதும் அவரது குரல் வானொலியில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

இலங்கையில் தமிழ்ப் படங்கள் தயாரிக்கப்படும் பொழுது நடிகர்களுக்கான குரல்களை இலங்கை வானொலியிலிருந்தே கடன் வாங்குவார்கள். அவ்வாறான திரைப்படங்களில் அதிகமான நடிகைகளுக்கு குரல் கொடுத்தவர் இராஜேஸ்வரி சண்முகமே.

வானொலி விளம்பரத்துறையில் கே. எஸ். ராஜாவும், பி. எச். அப்துல் ஹமீதும் கொடிகட்டிப் பறந்த காலத்தில் இவர்கள் இருவருக்கும் இணை கொடுக்கக்கூடிய பெண் அறிவிப்பாளராக இராஜேஸ்வரி சண்முகம் மிளிர்ந்தார். இலங்கை வானொலியில் இவர் வழங்கிய "பொங்கும் பூம்புனல்" நிகழ்ச்சியும், சர்வதேச ஒலிபரப்பில் வழங்கிய 'பொதிகைத் தென்றல்' என்ற நிகழ்ச்சியும் இவருக்கு மேலும் புகழை வாங்கித் தந்தன.

'மொழி வளர்ச் செல்வி', 'தொடர்பியல் வித்தகர்', 'வானொலிக் குயில்' என்று பல்வேறு பட்டங்களை வாங்கிய இவர், 'வசந்தத்தில் தான் குயில் கூவுமாம். இந்த வானொலிக் குயிலுக்கு வருடமெல்லாம் வசந்தமாகவே திகழ வாழ்த்துகிறேன்' என்று கவிஞர் வைரமுத்துவால் வாழ்த்துப் பெற்றவர்.

இன்று கலைத்துறையில் பொன் விழாவைக் கொண்டாடும் இராஜேஸ்வரி சண்முகத்தின் குடும்பம் ஒரு கலைக் குடும்பமாகும். இவரது கணவர் சி. சண்முகம் யாழ். புங்குடுதீவில் பிறந்தவர். அரசாங்க உத்தியோகத்தரான இவரும் ஒரு வானொலி அறிவிப்பாளர். பல வானொலி நாடகங்களை எழுதினார். பல சிங்களப் படங்களின் மூலக் கதை இவருடையதே. ஒரே மகள் வசந்தி இலங்கை வானொலியில் தயாரிப்பாளராக இருந்தவர். இப்பொழுது திருமணம் முடித்து திருச்சியில் வாழ்கிறார். மூத்தமகன் சந்திரமோகன் பிரபல பாடகர். இளைய மகன் சந்திரகாந்தன் சுவர்ண ஒலியில் அறிவிப்பாளராகக் கடமையாற்றுகிறார்.

*தம்பிஐயா தேவதாஸ்*
*(தினக்குரல் 26.12.2000)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய குரலால் உலகை ஈர்ப்பவர் இராஜேஸ்வரி

**த**னது இனிய குரலால் உலகெங்கும் வாழும் தமிழ் பேசும் மக்களை ஈர்த்து இழுப்பவர் வானொலிக் குயில் இராஜேஸ்வரி சண்முகம்.

இலங்கை வானொலியில் 1950ஆம் ஆண்டு முதல் குரல் எழுப்பிவரும் இராஜேஸ்வரி சண்முகம், நாட்டின் ஒரு சிரேஷ்ட ஒலிபரப்பாளர். இந்த வருடம் "இராஜேஸ் அக்கா" தனது வானொலிச் சேவையின் பொன் விழாவைக் கொண்டாடுகிறார்.

இலங்கை வானொலியின் புகழ் இந்தியாவில் பரவியிருந்த அந்தக் காலத்திலேயே இராஜேஸ்வரியின் குரல் ஒலிக்கத் தொடங்கி விட்டது.

பாடசாலைக் காலத்திலிருந்தே நடிப்புத்திறன் கைவரப் பெற்றவராக இருக்கிறார் இராஜேஸ்வரி.

1952 இல் வானொலி நடிகையாக அவரது பிரவேசம் அமைந்தது. 1969 இல் வர்த்தக சேவையில் பகுதி நேர அறிவிப்பாளரானார். 1971 ஆம் ஆண்டில் தயாரிப்பாளர், 1974 இல் நிரந்தர அறிவிப்பாளர், 1982 இல் முதல்தர அறிவிப்பாளர், 1995 இல் அதிஉயர் அறிவிப்பாளர் என்று தமது திறமையை விரிவுபடுத்திக் கொண்டார்.

"பேர் கேட்ட அனைவரையும் நீராட்ட வருகிறது பொங்கும் பூம்புனல்" என்ற அறிவிப்புடன் அவர் வழங்கிய நிகழ்ச்சி தசாப்தங்களைக் கண்டு வெற்றி நடைபோட்டது.

பாடல்களைப் பாடியவர் யார்? பாடல் இடம் பெற்ற படம் எது? இவை போன்ற விவரங்களுடன் அவர் நிறுத்தி விடுவதில்லை. பாடலை எழுதிய கவிஞர் யார்? இசை அமைத்தவர் யார்? என்றெல்லாம் மின்னல் வேகத்தில் அறிவித்து விட்டுப் பாடலை ஒலிபரப்பும் அவரது பாணியே அலாதியானது.

"பொதிகைத் தென்றல்" இலக்கிய நயம் ததும்ப இராஜேஸ்வரி வழங்கிய சிறப்பு நிகழ்ச்சி. இலங்கையில் மாத்திரமல்ல தமிழ் நாட்டிலும் அந்த நிகழ்ச்சிக்குத் தீவிர ரசிகர்கள் இருந்தனர்.

எட்டயபுரம் தென் பொதிகைத் தமிழ்ச் சங்கம் 1995 இல் விழா எடுத்து "வானொலிக் குயில்" பட்டத்தை இராஜேஸ்வரிக்கு வழங்கி அவரைக் கௌரவித்தது. ஐரோப்பிய நாடுகளுக்கும் இராஜேஸ்வரி அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டிருக்கிறார்.

வானொலியில் செய்தி வாசிக்கும் பணியிலும் தனக்கென முத்திரை பதித்திருக்கிறார். சில காலத்தின் முன் "பொப்இசைப் பாடல்" நிகழ்ச்சிகள் மேடைகள் தோறும் நடைபெற்றபோது இராஜேஸ்வரியின் குரல் வளம் மிளிர்ந்திருந்ததை மறக்க முடியாது.

சிவாஜி கணேசன், கவிஞர் வைரமுத்து போன்றோர் இராஜேஸ்வரியின் ரசிகர்கள் என்று கூறுவதில் பெருமை அடைகிறார்கள்.

இராஜேஸ் அக்காவின் கணவர் சி. சண்முகம் வானொலியில் தமக்கென ஒரு இடத்தைப் பிடித்திருந்தவர். அவர் அமரத்துவம் அடைந்து விட்டாலும் அவர் எழுதிய நாடகங்கள் இன்னும் வானொலியில் எழிற் கோலம் காட்டுகின்றன.

மகள் வசந்தி மணம் முடித்து தமிழகத்தில் வாழ்கிறார். மகன் சந்திரமோகன் பிரபல பாடகர். மற்றொரு மகன் சந்திரகாந்தனும் ஒரு வானொலி அறிவிப்பாளர்.

இராஜேஸ்வரியின் குரல் வளம் இப்போது மேலும் மெருகேறியிருக்கிறது. அவர் தமது ரசிகர்களை விட்டுப் பிரியப் போவதே இல்லை. இலங்கை வானொலி நிரந்தர சேவையிலிருந்து ஓய்வு பெற்றுவிட்ட போதும் இன்றும் கூட இலங்கை வானொலியில் இராஜேஸ்வரியின் குயிலோசை ஒலிக்கிறது. கேட்க என்ன சுகம்!

- சுடர் ஒளி - (07.01.2001)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"தேவி" சஞ்சிகையிலிருந்து*

## "ரசிகர் கடிதங்களை மலைபோல சேமித்து வைத்திருக்கிறேன்!"

"இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆசிய சேவை......" என்று துவங்கும் இனிய குரலைக் கேட்டிராத வானொலி நேயர்கள் இருக்க முடியாது. அந்தக் குரலுக்குரிய இலங்கை வானொலி அறிவிப்பாளர் திருமதி இராஜேஸ்வரி சண்முகம், அண்மையில் திருச்சி பொன்மலையிலுள்ள தன் மகள் வசந்தியின் இல்லத்திற்கு வந்திருந்தபோது அவரைச் சந்தித்தோம். 55 வயதாகிய போதும் குரல் வளம் மாறாதவராய்த் தனது வானொலி அனுபவங்களைச் சொன்னார்.

"என் தந்தையின் சொந்த ஊர் வ. உ. சி. மாவட்டம் சாத்தான்குளம் என்றாலும், நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் இலங்கையில் கொழும்பு நகரில்தான். வீட்டில் மூத்தவளான நான் S. S. C. வகுப்பு வரையில் படித்தேன்.

பள்ளி நாடகங்களிலெல்லாம் நிறைய நடித்திருக்கிறேன். அப்படி ஒரு நாடகத்தில் நான் கண்ணகியாக நடித்ததைப் பார்த்து விட்டு பிரமித்துப் போன இலங்கை வானொலியின் நாடகத் தயாரிப்பாளர் சண்முகநாதன் என்னை வானொலி நாடகங்களில் நடிக்கச் செய்தார். அதில் எனது குரல் வன்மையைப் பாராட்டி, 1952ல் இலங்கை வானொலிக் கலைஞராகத் தெரிவு செய்யப்பட்டேன். எனது 33வது வயதில் பகுதி நேர அறிவிப்பாளராகச் சேர்த்துக் கொண்டார்கள். 1971ல் முழு நேர அறிவிப்பாளரானேன். நடுவே வானொலியில் பகுதி நேர அறிவிப்பாளராகவும், நிலைய நாடகங்களை எழுதுபவருமான சண்முகம் அவர்களுடன் காதல் மலர்ந்து 1958ல் எங்களது திருமணம் நடைபெற்றது.

இலங்கை வானொலியில் இதுவரை நிறைய விளம்பர நிகழ்ச்சிகள் செய்திருக்கிறேன். இவற்றில் பூவும் பொட்டும், மங்கையர் மஞ்சரி, பொதிகைத் தென்றல், நினைவூட்டுகிறோம் (தினசரி நிகழ்ச்சி), விடுமுறை விருப்பம், நீங்கள் கேட்டவை ஆகிய நிகழ்ச்சிகளை நேயர்களின் சுவைக்குத் தகுந்தாற்போல் வழங்கி வருகிறேன்.

'இப்போதெல்லாம் பழைய திரைப்படப் பாடல்கள் இடம் பெறும் அளவுக்குப் புதிய பாடல்கள் ஏன் இடம் பெறுவதில்லை' என்று நேயர்கள் அதிகமாகக் குறைப்பட்டுக் கொள்கிறார்கள்.

எந்த ஒரு திரைப்படப் பாடலிலும் அரசியல் இயக்கங்களின் பெயர்கள், சாதி–மத–இன உணர்வுகளைத் தூண்டும் வரிகள், இரட்டை அர்த்தம் இடம் பெற்றால் அந்தப் பாடலையெல்லாம் முடிந்தவரை தவிர்த்து விடுகிறோம். அதனால்தான் சமீபத்திய புதிய திரைப்படப் பாடல்களை ஒலிபரப்ப முடிவதில்லை.

இலங்கை வானொலிக்காக இதுவரை "டி. எம். சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், எஸ். ஜானகி, உஷா உதூப், எல். ஆர். ஈஸ்வரி, ஜேசுதாஸ், பி. சுசீலா, வைரமுத்து, கமல்ஹாசன், வாணி ஜெயராம், சீர்காழி சிவசிதம்பரம், கவிஞர் வாலி, கல்யாணி மேனன், R. S. மனோகர், V. குமார், சூழமங்கலம் ராஜலக்ஷ்மி ஆகியோரைப் பேட்டி கண்டிருக்கிறேன்" என்றார் இராஜேஸ்வரி சண்முகம்.

இவரை முன்னாள் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே 'வாகீச வாகினி' என்றும், அமைச்சர் ராஜதுரை 'மொழிவளர்ச் செல்வி' என்றும் பட்டமளித்துப் பாராட்டியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆண்டாள், தமிழை ஆண்டாள் என்பது வரலாறு. ஆனால் இன்று தமிழை நீங்கள்தான் ஆள்கிறீர்கள்" என்று வைரமுத்து இராஜேஸ்வரியைப் புகழ்ந்து பாராட்டியிருக்கிறாராம்.

இராஜேஸ்வரி 1981 முதல் பாதுகாத்து வரும் நேயர்களின் பாராட்டுக் கடித மலையைப் பார்த்தால் பிரமிப்பாக இருக்கிறது. அதை அவர் அகர வரிசைப் படி அமைத்து பாதுகாத்து வருவது வியப்பூட்டுவதாகும்.

தனது நிகழ்ச்சிகளை மட்டும் கேசட்டில் பதிவு செய்து (500 கேசட்டுகளுக்குக் குறையாமல்) சேர்த்து வைத்திருக்கும் இலங்கைப் பெண் நேயர் ஒருவரைப் பற்றி இராஜேஸ்வரி மனம் நெகிழ்ந்து கூறுகிறார்.

இராஜேஸ்வரியின் கணவர் சண்முகம் மறைந்தபோது, அவர் அடைந்த துயரத்திற்கு அளவே இல்லையாம். அப்போது இந்திய – இலங்கை நேயர்களிடம் இருந்து வந்த ஆயிரக் கணக்கான கடிதங்கள் தான் அவரை அமைதிப்படுத்தியதாம்.

இராஜேஸ்வரி தனது ஒரே மகள் வசந்தியைத் திருச்சியில் மணமுடித்துக் கொடுத்திருக்கிறார். மாப்பிள்ளையும் அவரது பரம ரசிகரே. ராஜேஸ்வரியின் இரண்டு மகன்களும் இலங்கை கலைத் துறையிலேயே பணிபுரிந்து வருகிறார்கள்.

*(நன்றி : தேவி)*

*பேட்டி : மேஜர்தாசன், திருச்சி சிவாஜிராவ்*
*உதவி : திருச்சி எஸ். பி. பி. அழகர்.*

---

ராஜீ அம்மா ....
ஆறு பத்து வயதுக்கு மேல்
உங்கள் வயது இருந்தாலும்,
உங்கள் அமுத குரலுக்கு
பத்து ஆறு வயது தானம்மா..
எனக் கூறல் மிகையாகாதம்மா...

ராஜீ அம்மா...
உங்களுக்கு இந்த மழலை
ஒன்று தர விரும்புகிறேன்...
என்னிடம் செல்வம்.... ஏட்டறிவு இல்லை...
என் ஆயுளைத் தவிர...

ராஜீ அம்மா....
என் ஆயுளை தவிர .... என்னிடம்
வேறொன்றும் இல்லை ....
இந்த ஏழை ...
என் ஆயுளில் பாதியை
உங்களுக்குத் தரவிரும்புகிறேன்...!

ம. மதிராஜா, *பாளையங்கோட்டை*



வானொலிக் கலைஞர்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய ஸ்ரீதேவி நாடகசபா அரங்கேற்றிய முதலாவது நாடகமே "மனித தெய்வம்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலி - ஒளி பதில்

*"நாடறிந்து கொண்ட மகள்*
*நாடகத்தால் வந்தவளாம்*
*ஊரறிந்து கொள்ளவென்று*
*ஓர் பரிசு தந்துவையும்!*
*காடறியப் போக முதல்*
*கூடழிந்து போகு முதல்*
*பாரறிந்து கொண்டவளை*
*ஏடதனில் ஏற்றி வையும்!"*

*என்று இளங்கவிஞர் காரைநகர் கண்ணுதலான் எழுதியதற்கேற்பப் பிரபலமடைந்துள்ள வானொலிக் குயில் இராஜேஸ்வரி சண்முகம், வாசகர்களின் கேள்விக்கு இதோ பதிலளிக்கிறார்........*

திருமதி சந்திராணி தங்கத்துரை,
*சவளக்கடை, கல்முனை.*

கேள்வி : முதன் முதலாக உங்கள் குரல் எந்த ஆண்டில் வானொலியில் ஒலித்தது? அப்பொழுது உங்களது மனநிலை எப்படி இருந்தது? அன்று முதல் இன்று வரை உங்கள் குரல் இனிமையாக இருப்பதற்குக் காரணம் என்ன?

பதில் : 1952 ஆம் ஆண்டுதான் எனது குரல் முதன் முதலாக வானொலியில் ஒலித்தது. எனது குரல் எத்தனையோ வீடுகளின் வானொலிப் பெட்டிகளில் கேட்கிறது என்பதை எண்ணியபோது ஆனந்தமாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. குரல் இனிமைக்கு எதுவுமே நான் செய்வதில்லை. இயற்கையாய் வாய்ந்த குரலுக்கு இறைவனுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்!

செல்வன் கே. பிரபாகரன்,
*பெரிய நீலாவணை, கல்முனை.*

கேள்வி : எத்தனையாவது வயதில் அறிவிப்பாளராகக் கடமையாற்ற வந்தீர்கள்? நடிப்புத் துறையில் ஆர்வம் உண்டா? நீங்கள் ஓய்வு பெறப் போவதான வதந்தி உண்மையா?

பதில் : நான் அறிவிப்பாளராகும் போது எனது வயது 31. பகுதி நேர அறிவிப்பாளராக 1969இல் தெரிவு. நடிப்புத் துறையில் அதற்கு முன்னரே ஆர்வம் இருந்தது. 1952 முதல் வானொலி நாடகங்களில் நடித்து வந்துள்ளேன். ஒலிபரப்புத் துறையில் 46 வருடங்களும் அறிவிப்புத்துறையில் ஏறத்தாழ 27 வருடங்களைத் தாண்டியும், கடமை இன்னும் அழைப்பு விடுக்கிறது. இயற்கை நியதிப்படி எல்லோருமே ஒரு நாள் ஓய்வு பெறத்தான் வேண்டும். அரசாங்க விதிகளின்படி ஓய்வு பெற வேண்டிய வயதெல்லையை நான் அடைந்து விட்டபோதிலும், எப்போது என் குரல் உங்களுக்கும் எனக்கும் வெறுத்துப் போகிறதோ அதுவரை ஓய்வொழிச்சல் இன்றி வானொலியோடு என் வாழ்வு ஐக்கியமாகியே இருக்கும்!

எஸ். சுகுமாரன்,
*பெல்மோரல் டிவிசன், அக்கரைப்பத்தனை*

கேள்வி : நல்ல குரல் வளம் கொண்ட வானொலிக்குயிலே.... ஏன் நீங்கள் பாடகியாகவில்லை?

பதில் : "கல்யாணப் பரிசு" படத்தில் தங்கவேலு சொன்ன பாணியில் "நான் பாட ஆரம்பித்து விட்டால் ஏகப்பட்ட பாடகிகள் ஏமாந்து போய் விடுவார்களே, அதனால்தான் பாடவில்லை" என்றும் சொல்லலாம் அல்லவா? எல்லாக் குயில்களும் எல்லாக் காலமும் பாடிக் கொண்டே இருப்பதில்லை. ஆகவே என்னை ஒரு ஊமைக்குயிலாக நினைத்துக் கொள்ளுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மகேஸ்வரி ராமதாஸ்,*
*வரகாஸ்தென்ன, வத்தேகம*
கேள்வி : "நேயர்களுக்குத்தான் என் முதல் மரியாதை. ஏனென்றால் அவர்களுடைய இறுதி மரியாதையைப் பெற நான் முதல் மரியாதை செலுத்துவது தானே முறை" என்று பேட்டியில் பதிலளித்தீர்கள். ஆனால், உங்களை வளர்த்துவிட்ட வானொலியை மறந்து விட்டீர்களே?
**பதில்** : வானொலியை நான் ஒரு போதும் மறந்ததில்லை. நேயர்கள் என்றாலே வானொலியும் அவர்களுள் அடக்கம். வானொலி மூலமாகத்தானே நீங்கள் அனைவரும் எனது அன்புக்குரிய நேயர்களானீர்கள்!" "திருவிளையாடலிலே" அம்மையப்பனைச் சுற்றினால் உலகத்தையே சுற்றிய மாதிரித்தான் என்பது போல, நேயர்களுக்கு முதல் மரியாதை என்றால் அது வானொலிக்கும் என்றுதானே அர்த்தம்!

*எஸ். ஜே. ரஞ்சன், தெஹிவளை*
கேள்வி : பிரபல அழகு தமிழ் அறிவிப்பாளர் அப்துல் ஹமீதைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?
**பதில்** : தமது ஆற்றலால் அகிலம் புகழும் அளவுக்குத் தமிழ் அறிவிப்புத் துறையைச் சிகரத்துக்கே எடுத்துச் சென்று, அதே சிகரத்தில் இன்னும் நிற்பவர். "அகரம் தமிழுக்குச் சிகரம்" என்பதுபோல், "அ" எனும் எழுத்தைத் தன் பெயரின் ஆரம்ப எழுத்தாகக் கொண்ட அசாத்தியத் திறமைசாலி!

*வி. கணேஷன், லிந்துல*
கேள்வி : "வொய்சுக்கும் வயசுக்கும் சம்பந்தமில்லை" எனும் தலைப்பிலான தங்களது பேட்டிக் கட்டுரையில், 1952ஆம் ஆண்டு விவேகானந்த மகா வித்தியாலயத்தில் நடந்த நாடகப் போட்டியைப் பார்த்தவர்களுள் இலங்கைப் பத்திரிகை உலகின் ஜாம்பவானும் ஒருவர் என்று குறிப்பிடப்பட்டிருந்ததே, அந்த ஜாம்பவான் யார்?
**பதில்** : அவர்தான் திரு. எஸ். டி. சிவநாயகம் அவர்கள். பத்திரிகைத் துறையில் முத்திரை பதித்த என் பெருமதிப்புக்குரிய வெகுசனத் தொடர்புத்துறையாளர்!

*செல்வி. சரோஜ் ராஜன், கிருலப்பனை.*
கேள்வி : இலங்கை வானொலி அறிவிப்பாளர்களில் தங்களைக் கவர்ந்த ஆண், பெண் அறிவிப்பாளர்கள் யார்?
**பதில்** : தமக்கே உரித்தான பாணிகள் மூலம் யார் யாரெல்லாம் நேயர்கள் மனதில் இடம் பிடித்தார்களோ, அவர்கள் எல்லோருமே எனக்குப் பிடித்தவர்களாவர்.

*எஸ். வில்வராஜா. கொழும்பு 11.*
கேள்வி : உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்? இவர்களில் கலைவாரிசு யார்?
**பதில்** :எனக்கு மூன்று பிள்ளைகள். மகள் வசந்தி சிவகுமார். மகன்மார் சந்திரமோகன், சந்திரகாந்தன். மூவருமே கலைத்துறையில் ஆர்வம் கொண்டவர்கள். தத்தமது துறைகளில் வளர்ந்து வருகிறார்கள். வாரிசுகள் நிச்சயம் என் பேரைக் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது!

*ஆ. சிவகுமார், பிரதான வீதி, கொட்டகலை*
கேள்வி :இலங்கையில் இன்று புதிய தமிழ் வானொலி அலைவரிசைகள் ஆரம்பமாகி அவற்றிடையே போட்டிகளும் ஏற்பட்டுள்ள இக்கால கட்டத்தில் இலங்கை வானொலி வர்த்தக சேவை தனது நேயர்களை எப்படித் திருப்திப்படுத்தப் போகிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் : இலங்கை வானொலி வர்த்தக சேவை அன்று தொட்டே நேயர்களைத் திருப்திப்படுத்தி வந்திருப்பதால்தான் கடல் கடந்த நாடுகளில்கூட அதன் புகழ் இன்றும் நிலைத்திருக்கின்றது. புதிய அலை வரிசைகளோடு போட்டியாக நிச்சயம் அது தன் கைவரிசையை காட்டுமென்று நீங்கள் நம்பலாம்!

*சி. பாபு, பளலுவெவ, பலாகல*
கேள்வி : சில அறிவிப்பாளர்களது தமிழ் உச்சரிப்பை விளங்கிக் கொள்ள முடிவதில்லையே அம்மா, இப்படிப்பட்ட புதிய அறிவிப்பாளர்களுக்கு தங்கள் அறிவுரை என்ன?
பதில் : இப்போது வரும் தமிழ் பாடல்களில்கூட சொற்களின் உச்சரிப்பை விளங்கிக் கொள்ள முடியவில்லையே........ அதுதான் புதுமை என்று நினைத்து விடாமல் சரியாக, தெளிவாக உச்சரித்தால்தான் உலகம் மதிக்கும் அறிவிப்பாளர்களாக வர முடியும் என்பதே என் அபிப்பிராயம்!

*பாலா சங்குப்பிள்ளை, அட்டன்*
கேள்வி : நேயர்கள் கேட்கும் பாடல்களை ஒலிபரப்பும் போது உங்கள் மனதில் மலரும் நினைவுகள் ஏற்பட்டதுண்டா?
பதில் : அந்தந்தப் பாடல்கள் வெளிவந்த காலகட்டங்களில் நிகழ்ந்த சம்பவங்கள் பிற்காலத்தில் அப்பாடலைக் கேட்கும்போது நினைவுகளை மலர வைப்பது சகஜம்தான். இதற்கு நான் மட்டும் விதிவிலக்கல்ல!

*சானா சண்முகராஜன், நாவலப்பிட்டி*
கேள்வி : ஒலிபரப்புத் துறையில் உங்கள் சாதனை என்ன? உயர்வுக்குக் காரணம் குரல் வளமா? திறமைச் சேவையா?
பதில் : சோதனைகள், வேதனைகள் அனைத்தையும் தாண்டினால்தான் சாதனை! சாதனைகளை நான் புரிந்தேனா இல்லையா என்பதை நானே சொல்வதைவிட மற்றவர்கள் சொல்வதுதான் மரியாதை. என் உயர்வுக்குக் காரணமாக தொழில் மேல் பக்தியையும் சேர்த்துக் கொள்ளலாம்!

*அமுதா காளிமுத்து, கொழும்பு – 14*
கேள்வி : வானொலிக் குயிலுக்கு வாய்ப்பாட்டு வருமா?
பதில் : பள்ளிப் பராயத்தில் வாய்ப்பாடும் மனப்பாடம் பண்ணியதுண்டு. வாய்ப்பாட்டும் இனிதாய்ப் பாடியதுண்டு. இப்போது வாய்ப்பாட்டை அல்ல, வயிற்றுப் பாட்டை அல்லவா பார்க்க வேண்டி உள்ளது!

*ரஞ்சித் பிரபா, ஹப்புத்தளை*
கேள்வி : அன்றைய தொழில் நுட்ப வசதிகள் குறைந்த ஒலிபரப்புத் துறைக்கும் இன்றைய நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் கூடிய ஒலிபரப்புத் துறைக்குமிடையில் நீங்கள் காணும் வேறுபாடுகள் என்ன?
பதில் : பிழைகளே விடாமல் நேரடி ஒலிபரப்பில் தமது முழுத் திறமைகளையும் காட்டும் ஆர்வத்தில் அக்கறையோடு செயல்பட்டார்கள் அன்று. ஆனால் இன்று தொழில் நுட்பம் வளர்ந்துவிட்ட போதிலும், தொழிலில் இருந்த பக்தியும் பயமும் குன்றிப் போனது போலவே உணர்கிறேன்!

*திருமதி சகுந்தலா, கல்கிசை*
கேள்வி : அறிவிப்புத் துறையைப் பொறுத்த வரையில் நிறைவேறாத ஆசைகள் ஏதேனும் உங்களுக்கு உண்டா?
பதில் : நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் ஏதுமில்லை. நடந்ததையே நினைத்திருந்தால் அமைதி என்றுமில்லை. அளவுக்கு மிஞ்சி ஆசைப்படாததால் நிறைவேறாத ஆசைகளாய்க் குறிப்பிட ஒன்றுமில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ. என். எம். ஜவாத், *புத்தளம்*
கேள்வி : பிறவி அறிவிப்பாளர் திருமதி இராஜேஸ்வரி சண்முகம் அவர்களே... உங்கள் குரலினிமையயின் ரகசியம் என்ன?
பதில் : இதற்கெல்லாம் தேன் 2 கிராம், கற்கண்டு 4 கிராம், கரும்புச் சாறு 3 லீட்டர், அமிர்தம் 4 சொட்டு என்று மருத்துவக் குறிப்புகளும் செய்முறையுமா சொல்ல முடியும்? ரகசியம் எதுவுமில்லை. குரல் ஆண்டவன் தந்தது. அவனிடம்தான் காரணம் கேட்க வேண்டும்!

ஏ. ஆர். பகீரதன், *கொழும்பு – 14*
கேள்வி : நித்யஸ்ரீ பாடிய "கண்ணோடு காண்பதெல்லாம் தலைவா" என்ற 'ஜீன்ஸ்' படப் பாடலில் தங்களைக் கவர்ந்தது இசையா? குரலா?
பதில் : இரண்டும்தான்! அருமையான இசைக்குப் பொருத்தமான குரலை அறிமுகப்படுத்திய ஏ. ஆர். ரகுமான். பாராட்டுக்குரியவர்! அது மாத்திரமல்ல. இலக்கிய நயம் சொட்டும் கவியரசர் வைரமுத்துவின் பாடல் வரிகளும்தான்! இரட்டைக் கிளவி பற்றிப் பாடும் இப்பாடல் எனக்கு மிகவும் பிடித்தது!

டில்சாட் ரகுமானியா, *டயகம பஜார்.*
கேள்வி : ஞாபகம் இருக்கிறதா? வானொலியில் முதன் முதலாகப் பேசிய வசனம் ஞாபகம் இருக்கிறதா? எந்த நாடகத்தில்?
பதில் : மறக்க முடியவில்லை........ மறக்க முடியவில்லை...... வானொலியில் நான் பேசிய வசனம் மறக்க முடியவில்லை! அது இதுதான் :"ரொம்பக் களைச்சுப் போய் வந்திருக்கீங்களே அப்பா...... காப்பி ரெடி, முகத்தை அலம்பிட்டு வாங்கோ" என்பதாகும். என். எஸ். எம். ராமையா எழுதிய "விடிவெள்ளி" தான் வானொலியில் நான் நடித்த முதல் நாடகம்!

எம். எல். ரஷீட், *கொழும்பு – 10.*
கேள்வி : ஈரடிக் கவி வரிகள் மூலம் ஈர்த்திடும் வானொலிக் குயிலே! உங்கள் சொந்த ஊர் எது?
பதில் : எந்த ஊர் என்றவரே சொந்த ஊரைச் சொல்லவா? எந்தையும் தாயும் இருந்து குலாவி மகிழ்ந்து ஊர் – கருவிலே என்னைச் சுமந்த ஊர் அதுவே என் சொந்த ஊர். இலங்கை மணித்திருநாடு என் நாடு. என் பிறந்த ஊர் கொழும்பு. ஆனால் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றுதான் சொல்வேன்.

கே. ஏகாம்பரம், *கொழும்பு – 06*
கேள்வி : வானொலி நேயர்கள் யாராவது உங்களைக் கவிதை வரிகளால் வாழ்த்தியதுண்டா?
பதில் : உண்டு! சமயம் வரும்போது பட்டியல் போட்டுக் காட்டுகிறேன்!

*சி. ஜீவராஜா, கரகம்பிட்டி*
கேள்வி : வானொலியில் பாடிப் புகழ்பெற்றவர்களைப் பற்றித்தான் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்களோ பேசிப் புகழ்பெற்று விட்டீர்களே, அது எப்படி?
பதில் : உங்களைப் போன்றவர்கள் தந்த உற்சாகத்தாலும், உள்ளத்தில் ஊற்றெடுத்த உத்வேகத்தாலும்தான்!

எஸ். ரவீந்திரன், *யாழ் வீதி, வவுனியா*
கேள்வி : வானொலியில் பாடல்கள் ஒலிபரப்பின்போது இடை நடுவில் குறுக்கீடு செய்யும் உங்கள் விளக்கங்கள் தேவைதானா?
பதில் : இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பின் முன்னோடிகள் பலரும் கையாண்டு நேயர்களைக் கவர்ந்த பழைய பாணிதான் இது. ரசனைகள் வித்தியாசமானவை. அதிகமானோரின் எண்ணப்படிதான் இதனைத் தொடர்கிறேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பி. யு. மலர், பொல்ஹேன்கொட, கொழும்பு – 5*

கேள்வி : நான் ஒரு அறிவிப்பாளராக வர விரும்புகிறேன். அதற்கு என்ன செய்ய வேண்டும்?

பதில் : நல்ல அறிவிப்பாளர்களாக நாடு ஏற்றுக் கொண்டவர்கள் என்னென்ன காரணங்களால் அந்த மதிப்பினைப் பெற்றார்கள் என்பதை உணர்ந்து கொண்டு, உங்கள் அறிவிப்புத் திறமையை விருத்தி செய்து கொள்ளுங்கள். குரல் வளமும், சமயோசித அறிவும், மக்களைக் கவரும் பிரத்தியேகப் பாணியும் தேவை!

*ஏ. கே. விஜயகுமார், பாமன்கடை, கொழும்பு – 6*

கேள்வி : உங்களைச் சந்தித்துச் சிந்தித்துப் பேட்டிக் கட்டுரை எழுதியவருக்கு இன்னும் எத்தனையோ வானொலி, வாஹினி கலைஞர்கள் இலங்கையில் இருப்பது தெரியாதா? ஏன் இந்தப் பாரபட்சம்?

பதில் : எல்லோரையும் ஏக காலத்தில் பேட்டி கண்டு வெளியிடுவது என்பது எவருக்குமே சாத்தியமாகாது. படிப்படியாய்த்தானே எல்லாம் நடக்க வேண்டும்! இதைப் போய்ப் பாரபட்சம் என்றால் பாரபட்சத்துக்கு என்ன சொல்வது? விரைவில் உங்கள் அபிமானத்துக்குரியவர்களின் பேட்டிகளும் இடம் பெறலாம்!

*ஏ. சி. சமீம், ஏறாவூர்*

கேள்வி : அழகு தமிழ் அறிவிப்பாளர் அப்துல் ஹமீட் அவர்கள் தன் வேலையை ராஜினாமா பண்ணியதன் காரணம் என்ன?

பதில் : கட்டுப்பாடுகளற்ற சிட்டுக்குருவியாய் உலகையே வட்டமிடத்தான்!

*எஸ். ஹெறரோல் நில்சன், பொகந்தலாவ*

கேள்வி : வானொலி மூலம் மிகமிகப் பிரபலமடைந்துள்ள தாங்கள் தொலைக் காட்சியில் ஏன் இன்னும் தலைகாட்டவில்லை?

பதில் : போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து. எல்லோரும் எல்லாத் துறையிலும் தலை காட்டித் தலைகுனியாமல் என்றும் தலைநிமிர்ந்தே இருக்க வானொலி போதுமென நினைப்பதால் தொலைக் காட்சியில் என் தலை தெரியவில்லை. ஆனால், குரல் அவ்வப்போது ஒலிக்கிறதே!

*அ. கனகசூரியர், ஊரெழு.*

கேள்வி : ஒலிபரப்புத் துறையில் நீண்ட கால அனுபவமுள்ள தாங்கள், ஒலிபரப்புத் துறை தொடர்பாக எத்தகைய கருத்துக்களை நேயர்களாகிய எங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறீர்கள்?

பதில் : ஓரிரு வரிகளில் விடை கூறக்கூடிய விஷயமல்ல இது. வானொலி நேயராக நீண்ட கால அனுபவமுள்ள நீங்கள் எமது நிலையம் பற்றிக் கொண்டிருக்கும் உயர்வான எண்ணம் தொடர்ந்தும் நிலைக்கும் வண்ணம் ஒலிபரப்புத்துறையினர் பணியாற்றிப் பல்லாயிரம் நேயர்களைத் தம்வசப்படுத்த வேண்டுமென்பதே எனது ஆசை. உங்களது அபிலாஷைகளுக்கமைய நல்ல நல்ல நிகழ்ச்சிகள் தந்து தமது முதன்மை நிலையில் என்றும் திகழ வேண்டும் எமது ஒலிபரப்புத்துறை!

*தவ. சஜிதரன், மாத்தளை*

கேள்வி : பாரதில் வாழும் பழந்தமிழர் தம்மையே, ஈரடிக்கவியால் ஈர்த்திட்ட அம்மா!, வேறான துறைகளில் விருப்பமுள்ள யான், மாறாப் புகழ் மாத்தளை இந்துக் கல்லூரியின் மாணவனுமாவேன்!, செந்தமிழ் தன்னிலே தங்களைப் போலேயறிவிப்பாளராய், வந்திட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்ற வாஞ்சை யானவென், சிந்தனை நிறைவேறிடச் சிறந்த தாயுங்கள் மதி, தந்திடும் ஆலோசனை தானும் யாதோ?

பதில் : அறிவோடும் தெளிவோடும் அறிவித்தல் வேண்டும்!

குறையற்ற குரல் கொண்டு நிறைவூட்ட வேண்டும்!

அவர்போல இவரென்று ஊர் சொன்னால் வெட்கம்!

இவர் போல யாரென்று பேர் பெற்றால் வெல்கம்!

*பெமீலா ஆதம்பாவா, நுவரெலியா*

கேள்வி : எதிர்பாராத பரிசுகள் ஏதாவது கிடைத்திருக்கிறதா? மனதில் தாக்கத்தை ஏற்படுத்திய நேயர் ஆக்கம் ஏதாவது உண்டா?

பதில் : நேயர்களின் மாறாத அன்பே எனக்குக் கிடைத்துள்ள மகத்தான பரிசு. கைப் பொருளைச் செலவழித்து பரிசுகள் தருவதை விட, எனது அறிவிப்பு முறையையும் ஆக்கங்களையும் மனப்பூர்வமாக விமர்சிக்கும் முறையே விலை மதிப்பற்ற வெகுமதியாகி விடுகிறது. எதிர்பாராத பரிசுகளும் கிடைத்திருக்கின்றன. தாக்கமேற்படுத்திய ஆக்க மென்றால் விவரித்துக் கொண்டே போகலாம். தரமான ஆக்கம் அனுப்புவோர் பலர் மனதில் நிலைத்தே இருக்கிறார்கள். வாய்ப்புக் கிடைத்தால் அவர்களைப் பற்றியும், ஆக்கமும் ஊக்கமும் தந்த கருத்துக்களையும் நூல் வடிவில் கொண்டு வருவேன்.

*வீரையா திருச்செல்வம், நாகசேனை*

கேள்வி : வானொலிக்கு ஆக்கங்கள் எழுதுவதையும் பாடல்கள் கேட்பதையும் குறை கூறுபவர்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்குத்தான் எழுத வேண்டு மென்கிறார்களே, இதற்கு தங்கள் பதில் என்ன?

பதில் : குறை கூறுவோர் எதற்குமே குறை கூறலாம். தமது கலையுணர்வை ரசனையைப் பலரும் பல விதத்தில் வெளிப்படுத்துகிறார்கள். பத்திரிகைகளுக்கு மட்டும்தான் எழுத வேண்டும். வானொலிக்கு எழுதக் கூடாது என்று கட்டுப்படுத்த யாருக்கும் உரிமையில்லை. தனி மனித சுதந்திரத்தில் தலையிடுவது போன்றதல்லவா இது!

*செல்வி. ப்ரியநேசி, களுத்துறை தெற்கு.*

கேள்வி : கவிதை வரிகள் மூலம் பாடலுக்கு விளக்கம் சொல்லும் தங்களுக்குக் கவிதைகள் எழுதும் பழக்கம் உண்டா?

பதில் : கவிதைகளை எழுதிப் பார்க்கும் பழக்கம் உண்டு. பத்திரிகைகளுக்கு அனுப்பும் வழக்கம் இல்லை!

*கே. ராஜமணி, ஆக்ரோயா பஸார்*

கேள்வி : இலங்கை, இந்தியப் பத்திரிகைகளில் வெளிவந்த பேட்டிகளில் உங்களைக் கவர்ந்த பேட்டி எது?

பதில் : "வம்புல மாட்டி விடாதீங்க" என்ற கவிஞர் வாலியின் பாடல் வரிகள்தான் ஞாபகத்திற்கு வருகிறது.

*முஹம்மட் இர்ஷாத், கேகாலை.*

கேள்வி : இலங்கையின் பிரபல சிறந்த அறிவிப்பாளராக விளங்கும் அப்துல் ஹமீத், வானொலி வர்த்தக ஒலிபரப்பில் தற்போது பணியாற்றாமல் இருப்பதன் காரணம் என்ன?

பதில் : வர்த்தக ஒலிபரப்பில் அவர் குரல் இன்னும் ஒலிக்கத்தானே செய்கிறது. அதை எண்ணியாவது திருப்திப்படுவோம்!

*பி. மனோகரன், ராஜகிரிய.*

கேள்வி : இளைய தலைமுறை அறிவிப்பாளர்களில் தாங்கள் காணும் நிறை குறைகள் யாவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் : நிறை குறைகளைச் சொன்னால் இன்றைய தலை முறை ஏற்றுக் கொள்ளவா போகிறது!

எஸ். ஜே. ஜீவகுமாரி, *களனிய.*
கேள்வி : அப்துல் ஹமீதும் நீங்களும் புதிய எப். எம் ஒன்றில் பணியாற்றப் போவதாகக் கொழும்பில் ஒரு வதந்தி பரவியுள்ளதே. இது உண்மையா?
பதில் : வததந்தி என்று நீங்களே சொல்லி விட்டீர்களே! எல்லா வதந்திகளும் உண்மையாவதில்லையே!

எஸ். ஜே. ஜீவகுமாரி, *களனிய.*
கேள்வி : அப்துல் ஹமீதும் நீங்களும் புதிய எப். எம். ஒலிபரப்பொன்றில் பணியாற்றப் போவதாகக் கொழும்பில் ஒரு வதந்தி பரவியுள்ளதே, இது உண்மையா?
பதில் : வதந்தி என்று நீங்களே சொல்லி விட்டீர்களே! எல்லா வதந்திகளும் உண்மையாவதில்லையே!

அ. பரமேஸ்வரன், *கொழும்பு – 13.*
கேள்வி : ஒலிபரப்புத் துறையில் தங்களுக்கேற்பட்ட களிப்பான, கசப்பான சம்பவங்களை அறியத் தருவீர்களா?
பதில் : கசப்பான சம்பவங்களைக் களிப்பான சம்பவங்களினால் மறக்கிறேன். எல்லாம் நன்மைக்கே என்று நினைக்கும் போது கசப்பும் களிப்பும் ஒன்றுதான்!

எஸ். கோகுல், *ரதல்ல.*
கேள்வி : மனதுக்குள் யாருக்காவது அனுதாபப்படுவதுண்டா?
பதில் : எனக்குள் என்னைப் பற்றியேகூட நான் அனுதாபப் பட்டுக் கொள்வதுண்டு. இந்நிலையில் பிறரைப் பற்றியும் அனுதாபப்படாமல் இருப்பேனா?

ச. ஆனந்தி, *கொழும்பு – 13.*
கேள்வி : வெளிநாடுகளில் உங்களுக்குக் கிடைத்த பாராட்டும், கௌரவமும் உள்நாட்டில் ஏன் உங்களுக்குக் கிடைக்கவில்லை?
பதில் : "சிறந்த பெண் அறிவிப்பாளர்" என்ற தேசிய விருது உள்நாட்டிலேதான் கிடைத்தது!

மணிமேகலா ஞானசேகரன், *கம்பளை.*
கேள்வி : எத்தனை வருடங்களாக வானொலி நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்? இத்துறையில் சாதித்தது என்ன? யாருக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளீர்கள்?
பதில் : 27 வருடங்களுக்கும் மேலாக நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கின்றேன்! சாதித்தது உங்களைப் போன்ற நேயர்களைச் சம்பாதித்தது! "ஆசைதரும் கோடி அதிசயங்கள் கண்டதிலே.... ஓசைதரும் இன்பம் உவமைஇல்லா இன்பம் அன்றோ". இது மகாகவி பாரதியின் குயில்பாட்டு.

"தாவிக் குதிப்பதுவும் தாளங்கள் போடுவதும்.... ஆவி உருகுதடி ஆஹாஹா என்பதுவும்....... ஆசைக் குயிலே அரும் பொருளே தெய்வமே......., பேசமுடியா பெருவாழ்வு கொண்டு விட்டேன்". இது பாரதியின் குயில் பாட்டுக் கேட்ட குரங்கின் நிலை. அந்தக் குரங்கின் நிலையில் இருந்து கொண்டு நான் கூறுவதென்ன வென்றால்: என் மகிழ்ச்சியில், வெற்றியில் பங்கெடுத்துக் கொண்டு நல்வாழ்த்துக்கள் தந்து ஏறத்தாழ 43 வருட காலக் கலைப்பயணத்தில் என்னுடன் கரம் கோர்த்துக் கொண்ட பல்லாயிரக் கணக்கான நல்லிதயங்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் நானும் சொல்லுவேன் நாளுமே நன்றி. இனிக்கின்ற நெஞ்சோடு இதயத்து நன்றியினால் பனிக்கின்ற கண்ணோடு பதில் வாழ்த்துப் பகருகின்றேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வொய்சுக்கும் வயசுக்கும் சம்பந்தமில்லை

*சந்திப்பின் சிந்திப்பில் சிந்திய கருத்துக்கள்*

*பூவுக்குள் ஒளிந்திருக்கும் கனிக்கூட்டம் அதிசயம்!*
*வண்ணத்துப் பூச்சி உடம்பில் ஓவியங்கள் அதிசயம்!*
*துளை செல்லும் காற்று மெல்லிசையாதல் அதிசயம்!*
*குருநாதர் இல்லாத குயில் பாட்டு அதிசயம்!*

இப்படி ஆரம்பமாகும் ஒரு அருமையான பாடல் "ஜீன்ஸ்" திரைப்படத்தில் இடம் பெற்றிருப்பது வானொலி நேயர்கள் அறிந்ததே. இப் பாடலை இயற்றியவர் கவிஞர் வைரமுத்து. இசை ஏ. ஆர். ரகுமான். பாடியவர்கள் உன்னிக் கிருஷ்ணன் – சுஜாதா.

"குயில்" என்றால் கூவும் (பாடும்) பறவை என்று மட்டும் அர்த்தமல்ல – சொல். கோகிலம், துளை, மேகம் என்றும், "குயிலுதல்" என்றால் சொல்லுதல், ஒலித்தல், அமைத்தல், பதித்தல், செறித்தல், இழைத்தல், நெய்தல், துளைத்தல் என்றும் அர்த்தங்களாகும்.

குயிலோசையைக் குரலினிமைக்கு உவமை கூறுவார்கள் கவிஞர்கள். அந்த இனிமை 'சொல்' எனும் மொழி வளத்திலுமுண்டு; ஓசை நயத்திலுமுண்டு. ஆகவேதான் குரலினிமை குயிலாகிறது.

'கவிக்குயில்' என்றால் சரோஜினி, 'கானக்குயில்' என்றால் சுப்புலட்சுமி, 'இசைக்குயில்' என்றால் வடநாட்டில் லதா மங்கேஷ்கர், தென்னாட்டில் சுசிலா, 'சின்னக்குயில்' என்றால் சித்ரா. இந்த வரிசையில் தமிழ் எனும் சொல் கொண்டு ஒலி வானில் வலம் வரும் 'வானொலிக் குயில்' தான் திருமதி இராஜேஸ்வரி சண்முகம்.

இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பின் 'பொங்கும் பூம்புனல்' மூலமாகவும், கொழும்பு சர்வதேச வானொலி ஒலிபரப்பின் 'பொதிகைத் தென்றல்' மூலமாகவும் இலங்கை, இந்திய ரசிகர்களை மட்டுமன்றி, இவ்வுலகின் பல பாகங்களிலுமுள்ள தமிழ் நேயர்களையும் தனது இனிய குரல் வளத்தால் கவர்ந்தவர் தான் திருமதி இராஜேஸ்வரி சண்முகம் என்பது சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை. நாடகத் துறை மூலமாகக் கலைத்துறைக்கு அறிமுகமானவர்தான் இராஜேஸ்வரி சண்முகம். 1952ஆம் ஆண்டு கொழும்பு, பம்பலப்பிட்டி, சென் பீட்டர்ஸ் கல்லூரியிலும், விவேகானந்தா மகாவித்தியாலயத்திலும் நடைபெற்ற அகில இங்கை மாவட்டப் பாடசாலைகள் நாடகப் போட்டியில்.........

கையிற் காற் சிலம்புடன் கனல் தெறிக்கும் கன்னல் தமிழ் வசனம் பேசிக் கண்ணகியாகவே காட்சியளித்தாள் கன்னியொருத்தி. அந்தக் கன்னிதான் இன்றைய இராஜேஸ்வரி சண்முகம்.

அறிஞர் பெருமக்கள் பலர் முன்னிலையில் அவரது நடிப்பாற்றல் அன்று அறிமுகமான பொழுது, அதை ரசித்தவர்களுள் இலங்கைப் பத்திரிகையுலகின் ஜாம்பவானும் ஒருவர். இராஜேஸ்வரியின் நடிப்பாற்றலை அந்த நாள் ஞாபகத்தில் இன்றும் கூட மறக்காது மனம் திறந்து பாராட்டுகிறார் அவர். அதுமட்டுமின்றி முன்பு வெளிவந்த பிரபல வார இதழொன்றில் ஒரு வாசகி பேருவளையிலிருந்து கேட்டிருந்த "வானொலி அறிவிப்பாளர்களில் உங்களைக் கவர்ந்த பெண் குரல் யாருடையது? ஆண் குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருடையது?'' என்ற கேள்விக்கு......... "பெண் குரல் இராஜேஸ்வரியுடையது. ஆண் குரல் அப்துல் ஹமீதுடைய. இப்படிச் சொல்வதால் மற்றவர்களைப் பிடிக்காது என்று பொருள் அல்ல. அவர்களிலும் பலரை எனக்கு மிகவும் பிடிக்கும்'' என்று திரிஞானியார் பதிலளித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கொழும்பு, கொட்டாஞ்சேனை, மத்திய மகாவித்தியாலய மாணவியாக இருந்த காலகட்டத்தில் பள்ளிப் படிப்பிலும் நாடக நடிப்பிலும் கெட்டிக்காரியாக இருந்த காரணத்தால்தான், படிப்பிலும் நடிப்பிலும் முதல் பரிசுகள் பலவற்றைத் தட்டிக் கொண்டார் இந்த இராஜேஸ்வரி.

பாடசாலைகளுக்கிடையே நாடகப் போட்டி என்று வந்தபோது, இவர் காட்டிய நடிப்புத் திறமைகள் நடுவர்களைக் கவர்ந்ததால் 'கண்ணகி'க்கு முதலிடம் கிடைத்தது. இந்நாடகத்தில் கண்ணகியாக நடித்த இராஜேஸ்வரியின் நடிப்பைப் பாராட்டிய நடுவர்களில் ஒருவரான கலாஜோதி சானா, வானொலி நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பையும் இவருக்கு வழங்கினார்.

வானொலியில் இவர் நடித்த முதல் நாடகம் காலஞ்சென்ற பிரபல மலையக எழுத்தாளர் என். எஸ். எம். ராமையா எழுதிய 'விடிவெள்ளி' நாடகமாகும். வானொலியில் தொடர் நாடகமாக வந்த சில்லையூர் செல்வராசனின் "சிலம்பின் ஒலி'' நாடகத்தில் பாண்டிமாதேவியாகவும் நடித்தார். கண்ணகியாக மட்டுமல்ல, பாண்டிமாதேவியாகவும் தன்னால் நடிக்க முடியும் என்பதை நிரூபித்ததன் மூலம் சில்லையூர் செல்வராசனின் பாராட்டையும் பெற்றார். 1952 இலிருந்து 69 வரையும் வானொலியில் நாடகம், மாதர் நிகழ்ச்சி, உரைச்சித்திரங்களில் நடித்து வந்தார். இவர் முத்திரை பதித்த நிகழ்ச்சிகளில் சி. சண்முகம் எழுதிய "நெஞ்சில் நிறைந்தவள்" நகைச்சுவை நாடகம், "பூவும் பொட்டும்" மாதர் நிகழ்ச்சியில் 52 வாரங்கள் ஒலிபரப்பானது. இந்நாடகத்தில் 'அசட்டு லட்சுமி' யாக நடித்த இராஜேஸ்வரி சண்முகத்தை அந்த நாள் ஞாபக ரசிகர்கள் நிச்சயமாக மறந்திருக்க மாட்டார்கள். தமிழ் தேசிய சேவையில் மாதர், சிறுவர் நிகழ்ச்சி தயாரிப்பாளராகவும் இவர் பணியாற்றி இருக்கிறார்.

தனது பதின்மூன்றாவது வயதிலேயே பகுதிநேர அறிவிப்பாளராகி பிறகு படிப்படியாக நிரந்தர அறிவிப்பாளர், சிரேஷ்ட அறிவிப்பாளர், மீஉயர் அறிவிப்பாளராக உயர்ந்தும் இன்றும் இத்துறையை விட்டு விலக முடியாதவராகி இருக்கிறார் இவர்.

1958இல் பிரபல வானொலி நாடகாசிரியர் சி. சண்முகத்தைத் திருமணம் செய்து கொண்டார். மலரும் நினைவுகளில் இவரது கல்யாணத்தைப் பற்றிக் கேட்டபொழுது, ஒரு கணம் அந்தக் காலகட்டத்திற்கே சிறகடித்துச் சென்ற இவரது சிந்தனைகள், இன்றைய அவரது ஈரடிக்கவிதைப் பாணியிலேயே பதிலைத் தந்து : "கலை இணைத்ததால் காதல் கொண்டோம்....... காதல் கொண்டதால் கல்யாணம் செய்தோம்'' என்று கூறிப் புன்னகை புரிந்தார்.

இப்படிக் கவிதை வரிகளில் அவர் தன் காதலைப் பற்றியும் கல்யாணத்தைப் பற்றியும் குறள் வடிவில் கூறிய பொழுது, "மதுரைவீரன்'' திரைப்படத்தில் கவிஞர் கண்ணதாசன் எழுதி எம். ஜி. ஆர். பேசிய : "கண்டோம் கட்டுண்டோம் காதலித்தோம்........ காலம் வந்தது தூக்கிச் சென்றேன்'' என்ற வசனமே ஞாபகத்துக்கு வந்தது.

இராஜேஸ்வரியின் கணவர் காலஞ்சென்ற சி. சண்முகத்தைப் பற்றிக் கூறுவதானால் இவரும் ஒரு வானொலிக் கலைஞரே. 1955ஆம் ஆண்டு இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலியில் தட்டெழுத்தாளராகப் பணியாற்றிய போதுதான் நாடகக் கலையில் இவருக்கு ஆர்வம் ஏற்பட்டது. அந்த ஆர்வத்தை இவருக்கு கூட்டியவர் கலாஜோதி சானா. வளர்த்தவர் பொன்மணி குலசிங்கம்.

1956ஆம் ஆண்டு அரசாங்க சேவையில் சேர்ந்து சிறு கைத்தொழில் திணைக்களத்தில் 22 வருடங்களும், சுற்றுலா, கிராமிய தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சில் 13 வருடங்களும் பணியாற்றி ஒய்வு பெற்றார். அரசாங்கத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் பொழுதே, இலங்கை வானொலியில் பகுதி நேர அறிவிப்பாளராகவும் பணியாற்றினார். இவர் எழுதிய 15 நிமிட, 30 நிமிடத் தொடர் நாடகங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பது இவருக்கே தெரியாததாம். தொடர் நாடகங்களில் "துணி விடு தூது" 52 வாரங்களும், "லண்டன் கந்தையா" 52 வாரங்களும், சிறுவர் மலரில் "அப்பாவும் மகனும்" 100 வாரங்களுக்கு மேலும் ஒலிபரப்பாகி இவருக்குப் புகழ் தேடித்தந்தன.

இவரது முதலாவது மேடை நாடகம் "மனிதருள் மாணிக்கம்" 1957ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பம்பலப்பிட்டி, சரஸ்வதி மண்டபத்தில் மேடையேறியது. நாடகக் கலையின் மீது இவருக்குப் பித்துப் பிடிப்பதற்குக் காரணமாக இருந்தவரும் இவருடைய நாடகங்கள் எல்லாவற்றிலுமே முக்கிய கதாபாத்திரங்கள் ஏற்று நடித்தவரும் இவருடைய துணைவி இராஜேஸ்வரிதான்.

சுமார் ஆறு வருடங்களுக்கு முன் இராஜேஸ்வரியின் கணவர் சண்முகம் மறைந்தபோது இவர் அடைந்த துயருக்கு அளவே இல்லை. இலங்கை, இந்திய வானொலி நேயர்களிடமிருந்து வந்த ஆயிரக் கணக்கான கடிதங்களே இவரை அமைதிப்படுத்தியது.

இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பின் "பொங்கும் பூம்புனல்", கொழும்பு சர்வதேச ஒலிபரப்பின் "பொதிகைத் தென்றல்" நிகழ்ச்சிகள் ஆரம்பித்த நாள் முதல் ஈரடிக்கவிதை கொண்டு திரைப்படப் பாடல்களைத் தொகுத்து வழங்கி வருவது இராஜேஸ்வரியின் தனிப் பாணி.

இந்தப் பாணியினால் ஈர்க்கப்பட்ட இளைய, பழைய தலைமுறை நேயர்கள் இலங்கையில் மட்டுமின்றி இந்தியாவிலும் ஏராளமாக உள்ளனர் என்பதற்கு அவருக்கு வந்து குவியும் பாராட்டுக் கடிதங்களே சான்றாகும். இவற்றுள் கவிஞர் வைரமுத்து, பழநிபாரதி எழுதிய கடிதங்களையும் காணக் கூடியதாக இருந்தது. ஒன்றல்ல, இரண்டல்ல எத்தனையோ உள்நாட்டு, வெளிநாட்டுக் கடிதங்களுண்டு; அத்தனையும் இவருக்குக் கற்கண்டு.

சில மாதங்களுக்கு முன் சிவாஜி கணேசன் இலங்கை வந்திருந்த சமயம் விழாவொன்றில் வைத்து சிவாஜிக்கு, இராஜேஸ்வரி சண்முகம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டபோது, "வானொலியில் குரலைக்கேட்டு 16 வயதுடையவராக இருப்பார் என்றல்லவா எண்ணியிருந்தேன்" என்று சொல்லி ஆச்சரியப்பட்டாராம். அடுத்த வருடம் 1999 மார்ச் மாதம் 16ஆம் திகதி 61 ஆவது வயதில் காலடி எடுத்து வைக்கப் போகும் இராஜேஸ்வரியின் வயதில், சிவாஜி கணேசன் குறிப்பிட்ட 16உம் இருக்கத்தான் செய்கிறது. 61ஐ மாற்றிப் போட்டால் 16 தானே? அத்துடன் இவரது பிறந்த திகதி 16 என்றபடியால் "என்றும் 16" இவர் வயதில் இணைந்தே இருக்கிறது.

"வொய்சுக்கும் வயசுக்கும் சம்பந்தமே இல்லை" என்று "வானொலிக் குயில்" பட்டமளிப்பு விழாவின்போது அகில இந்திய வானொலியின் தூத்துக்குடி நிலைய இயக்குனர் திரு. இளசை சுந்தரம் கூறியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் அமைச்சர் செ. இராசதுரை வழங்கிய "மொழி வளர்ச் செல்வி", ஸ்ரீசாஷ்டா பீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாசன் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையில் வழங்கிய "வாகீச கலாபமணி", வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அரசு சார்பில் வழங்கிய "தொடர்பியல் வித்தகர்", "சம்மாந்துறை கலைத்துறை சார்ந்த மக்களால் கொடுக்கப்பட்ட "வான்மகள்" என்றெல்லாம் பல பட்டங்களை இவர் பெற்ற போதிலும், எட்டயபுரம் தென்பொதிகைத் தமிழ்ச் சங்கம் 1995ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ஆம் திகதி விழாவெடுத்து வழங்கிய "வானொலிக் குயில்" என்ற பட்டம்தான் இவருக்கு வெகு பொருத்தமாக அமைந்து விட்டது. அந்தப் பொருத்தத்தைக் கடந்த வருடம் மணிவிழாக் கண்ட இராஜேஸ்வரி சண்முகத்துக்கு கவிஞர் வைரமுத்து எழுதிய பாராட்டுக் கடிதமே நிரூபிக்கிறது. மேல் நாட்டிலுள்ள பல தமிழ் அமைப்புக்களும் இவரை வரவழைத்துக் கௌரவித்தது.

இராஜேஸ்வரி சண்முகத்துக்கு எந்தக் கவிஞர், பாடலாசிரியர்களைப் பிடிக்கும் என்று கேட்டபோது..... "இலக்கிய நயம் சொட்டும் பாடல்கள் எழுதும் எல்லோரையுமே எனக்குப் பிடிக்கும். தாகூரின் பாடல்கள் முதல் இன்றைய புதுக்கவிஞர் வைரமுத்துவின் பாடல்கள் வரை நான் நேசிப்பவை. குறிப்பாகக் கவியரசர் கண்ணதாசனின் பாடல்களில் அலாதிவிருப்பம்".

"அண்மைக் காலங்களில் வெளிவந்த பாடல்களில் இலக்கிய நயம் இல்லை என்று சிலர் கூறுகிறார்கள். அதை ஏற்றுக் கொள்ள மறுப்பவள் நான். அண்மைக் காலப் பாடல்களில்கூட இலக்கிய நயம் கண்டு, சங்ககால இலக்கிய – இலக்கணப் பாடல்களோடு அவற்றைத் தொடர்புபடுத்தி ஒப்புவமை கண்டு புதிய பாடல்களுக்கும் ராஜ அந்தஸ்தைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் "பொதிகைத் தென்றல்" எனும் வளமார்ந்த தமிழ் நிகழ்ச்சியினூடே நேயர்களுக்குச் சொல்லி வருகிறேன்" என்றார்.

இவருக்குப் பிடித்த நடிகர்: சிவாஜி கணேசன், நடிகை : சாவித்திரி, பாடகர்கள்: சௌந்தரராஜன், பாலசுப்பிரமணியம், சுசிலா. இன்றைய இளைய தலைமுறைப் பாடகர்களில் ஹரிஹரன், சித்ரா. பிடித்த அறிவிப்பாளர்கள்: செந்திமணி மயில்வாகனம். இந்தியாவில் சரோஜ் நாராயண். தமிழக டெலிடிராமாக்களின் தரத்தில் ஒரு டெலிடிராமா தனது குடும்பத் தயாரிப்பாக வெளிவர வேண்டுமென்பதே இவரது லட்சியமாம்.

கணீரென்ற குரலில் கன்னித் தமிழில் கூவும் இந்த வானொலிக் குயிலுக்கு ஒரு பாடகியாக வர முடியாமற் போனதுதான் கவலையாம். பாடமுடியாவிட்டாலும் ஈரடிக் கவிதை விளக்கம் மூலம் பிறரது பாடல்களை ஒலிபரப்பி வரும் இவர், விளையாட்டாக எழுதிய பாட்டொன்று இன்று வானொலியின் "முற்றத்து மல்லிகை" நிகழ்ச்சியில் வெற்றி நடை போடுகிறது. பயாஸ் – ரெட்ணம் இசையமைப்பில் டி. எஸ். முருகேசு பாடிய "ஊரெங்கும் காதல் கீதம் நான் இசைப்பேன்" என்பதே அப்பாடலாகும்.

விளம்பரத் துறையிலும் இவரது குரல் சாதனை படைத்து வருகிறது. இன்றும்கூட விளம்பரதாரர்கள், பெண் அறிவிப்பாளர் என்றால் இவர் குரல்தான் வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றனர். இவரிடம் ஒரு பொறுப்பைக் கொடுத்தால் அதைச் செவ்வனே செய்து கொடுப்பார் என்ற மேலிடத்தாரின் நம்பிக்கைக்குரியவராகவும் இவர் திகழ்கிறார். இவரது பேட்டிகள் இலங்கைப் பத்திரிகைகளில் மட்டுமன்றி, தமிழ் நாட்டு "தினமலர், தினகரன், ராணி, மங்கை, தேவி"யிலும் வெளிவந்திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைத் துறையினரும் அவ்வப்பொழுது தமது உயர்வான விமர்சனங்களால் என்னை ஊக்குவித்தார்கள்; இன்றும் ஊக்குவித்து வருகிறார்கள்" என்றார். "நீங்கள் யாருக்கு முதல் மரியாதை செலுத்துவீர்கள்?" என்று கேட்டபோது......

"நிச்சயமாக நேயர்களுக்குத்தான். ஏனென்றால் என்றோ ஒருநாள் அவர்கள் எனக்கு இறுதி மரியாதை செலுத்த வேண்டியிருக்கும். ஆகவே அந்த இறுதி மரியாதையை நான் பெற அவர்களுக்கு முதல் மரியாதை செலுத்துவதுதானே முறை.........?" என்று அவர் எதிர் கேள்வி கேட்டதிலும் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது.

"பனி இல்லாத மார்கழியா? படையில்லாத மன்னவரா? இனிப்பில்லாத முக்கனியா? இசையில்லாத முத்தமிழா?" என்ற கண்ணதாசனின் பாடல் பாணியில்.........

"கசப்புணர்வில்லாத கலைப்பணியா?" என்று கேட்டபோது.

"சிறியோர் செய்த சிறு பிழை எல்லாம் பெரியோர் ஆகில் பொறுத்தல் கடனே என்ற வாக்கியத்தில் நம்பிக்கையுடையவள் நான். அதைத்தான் என் வாழ்க்கையிலும் கடைப்பிடித்து வருகிறேன்" என்று அவர் சொல்லும் பொழுதே அகத்தின் அழகு முகத்தில் தெரிந்தது.

கட்டுக்கட்டாக வைத்திருக்கும் நேயர் கடிதங்களை மீண்டும் மீண்டும் வாசித்துப் பார்ப்பதும், ஒலிப்பதிவு செய்து பத்திரப்படுத்தி வைத்திருக்கும் நிகழ்ச்சிகளைக் கேட்டுக் கேட்டு மகிழ்வதும்தான் இப்போதைய இவருடைய பொழுது போக்காம்.

"என்னவளே அடி என்னவளே........ எந்தன் இதயத்தைத் தொலைத்து விட்டேன்........" என்ற பாடலடிகளைக் கூறி, இதற்கு உங்கள் ஈரடி விளக்கத்தைத் தாருங்கள் என்றதும்.

காதலில் வீழ்ந்தது இதயம் – அவள்

காலடியில் அவன் சரணம்" என்று அவர் உச்சரித்தபோது, வானொலிக் குயிலோசை என் கண் எதிரே ஒலித்தது.

*சந்திப்பு : ஷண்*

வீரகேசரி வார வெளியீடு
06.09.1998



இசைக் குயிலுடன் வானொலிக் குயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரோட்டி மகன் நாடக விமர்சனத்திலிருந்து.......

பேராசிரியர் க. கைலாசபதி

கடந்த சில தினங்களாகக் கலையரசு சொர்ணலிங்கத்தாரின் ஈழத்தில் நாடகமும் நானும் என்ற நூலைப் படித்துக்கொண்டிருந்தேன். நூலைப் படிக்கப் படிக்க என் மனதில் இடம்பெற்றிருந்த ஒரு கருத்து உறுதிப்பட்டது. தனியொரு நடிகன் முன்னேறுவதற்கு மட்டுமல்லாது, பொதுவாகவே நாடகக்கலை முன்னேற்றமடைவதற்கும் கதைச் சிறப்புள்ள நாடகங்கள் ஆட்பெறுவது இன்றியமையாதது. கதையம்சம் சிறப்பாகவுள்ள நாடகத்திலேயே பாத்திரச் சிறப்பும் பொருந்தியிருக்கும்; அப்பாத்திரங்களைத் தாங்குவோர் தமது ஆற்றலையும் முயற்சியையும் நன்கு வெளிக்காட்டச் சந்தர்ப்பம் ஏற்படும். இவை கருத்தளவில் நாடகவியல் மாணவர்க்குத் தெரிந்த செய்திகளேயாயினும் கலையரசின் அனுபவங்கள் வாயிலாகக் புலப்படுத்தப்படும் பொழுது உண்மையின் நாதத்துடன் ஒலித்தன.

கடந்த 25.3.69 மாலை கொழும்பு லும்பினி மண்டபத்தில் நிழல் குழுவினர் அளித்த தேரோட்டி மகன் நாடகத்தைப் பார்த்துகொண்டிருந்த பொழுது மேற்குறிப்பிட்ட எண்ணமே மேலெழுந்தது. பி. எஸ். ராமையாவின் அந்த நாடகம் கதையாழங் கொண்டது; சிக்கலான பாத்திரங்களைக் கொண்டியங்குவது; நாடக இலக்கணங்கள் பலவும் வாய்க்கப்பெற்றது. எனவே எமது முதல் தர நாடக நெறியாளரில் ஒருவரான சுஹைர் ஹமீட்டின் கைவண்ணத்துடன் வெற்றிகண்டதில் வியப்பெதுவுமில்லை.

மிக அருமையாகவே வெற்றியீட்டும் எமது நாடகங்களில் பல அம்சங்களும் ஒருங்கே இயைந்து பொருந்தியிருப்பது அருமையிலும் அருமை. இதற்கு அடிப்படைக் காரணம் அறிவும் ஆற்றலும் வாய்க்கப் பெற்ற நாடக நெறியாளர் அரிதாயிருப்பதேயாகும். சுபேர் ஹமீட் இக்குறையை அவ்வப்போது நிவர்த்தி செய்துவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இதனைக் கூறியதும் நாடகத்தில் வெற்றிக்குக் காரணமாயிருந்த பிறரையும், பிறவற்றையும் குறிப்பிடவேண்டுமல்லவா?

## *சிறந்த நடிப்பு*

கர்ணன்தான் நாடகத்தில் கதாநாயகனெனினும் அன்றைய தினம் தனது நடிப்பால் யாவரையும் கவர்ந்து நாடகத்தின் போக்கையே ஆக்கிரமித்துக் கொண்டவர் குந்திதேவியாய் நடித்த இராஜேஸ்வரி சண்முகம். பொதுவாக எம்மிடையே நடிகைகள் குறைவு என்பது வாய்பாடாக இருப்பினும் திருமதி சண்முகம் அக்குறைபாட்டிற்கெல்லாம் ஈடு செய்வது போல நடித்தார். அர்ச்சுனன் கண்ணன், கர்ணன் ஆகியோருடன் வேறுபட்ட உணர்ச்சி நிலைகளில் உரையாடும்போது தனது திறமை அத்தனையையும் வெளிப்படுத்தினார் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பெருவிழா

## வாழ்த்துமடல்

நிகழ்விடம் :
*அபிநயா அரங்கு*
*நெல்லை, தமிழ்நாடு*

28.01.95 ஞாயிறு அன்று நெல்லையில் நடைபெற்ற முப்பெருவிழாவில் இலங்கை வானொலியின் முதுநிலை அறிவிப்பாளர் இராஜேஸ்வரி சண்முகம் அவர்களுக்கு "வானொலிக் குயில்" பட்டம் வழங்கிய பொழுது வழங்கிய வாழ்த்துமடல்.

முப்பெருவிழாவிற்கு முகப்பாய் எங்கள்
நற்றமிழ் மொழியாள் இராஜேஸ்வரி சண்முகம்
சுற்றமாய் நேயர்கள் சூழ்ந்திட விருதினைப்
பெற்றதோர் நாளிதில் பெருமைகள் பலவுண்டு

பொதிகை சங்கம் பிறக்கின்ற இந்நாளில்
மலர் முகத் தாய்க்கு வானொலிக் குயில் எனும்
குரல் வளப் புதுமை சேர் விருதும் உதயம்
வளர்முகத் தமிழில் வளர்பிறை உதயம்

பலர் மனம் பாராட்டும் சங்கமும் உதயம்
பொதிகைத் தமிழால் அமுதம் படைக்கும்
பொதிகைத் தென்றலின் அன்னையே உங்கள்
புதுமைத் தமிழுக்கு வாழ்த்து – உங்கள்
அருமைத் தமிழுக்கு அன்புசேர் வாழ்த்து

*வாழ்த்துடன்*
*திருமதி லலிதா பிரபாகரன், விழுப்புரம்*

## *காம்புக்கு ஒரு பூவின் வாழ்த்து*

*பேரான பேரெல்லாம் பாடிவைக்க*
*பேசேன் நான், மூங்கையிவன் ஏது பாட?*
*புஸ்வானம் பூவானை வாழ்த்துதல் போல்*
*புவனத்தின் புதுவானே இது மேக வாழ்த்து*
*ஈரிழையாய் தமிழோடுன் குரலினையும்*
*ஈசலதாய் எங்களிரு செவிகள் பாயும்*
*கண்ணொளியை செவிகளுக்கே தந்து செல்வாய்*
*கமுகுக்குள் இசைமீட்டும் காற்றைப் போல*
*காடுங்களிடைப் பாடும் குயிலே – இது*
*காம்புக்கோர் பூ வடித்த வாழ்த்துப் பாட்டு.*

*அன்போடும் தமிழோடும்*
இ. தயானந்தா
19.03.1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அறிவிப்பாளருக்கு குரல் வளத்துடன் கல்வி , கேள்வி ஞானமும் வேண்டும்"

அரசியல், சமூக, பொருளாதார, கலாசார மற்றும் பல்வேறு துறைகளில் சாதனை நிகழ்த்தி முன்னணியில் திகழும் மகளிரை வாராவாரம் 'நெஞ்சின் அலைகள்' நிகழ்ச்சிக்காக 'ஸாகரி' பேட்டி காண்பார். ஆணாதிக்க சமூக அமைப்பிற்கொண்டு சாதனை படைத்த அரிவையர்கள் பலரின் பேட்டிகள் இப்பகுதியில் தொடராக வெளிவரும். இனிய குரல் வளத்தால் இலட்சக் கணக்கான தமிழ் ரசிகர்களை இலங்கையில் மட்டுமல்ல வெளி நாடுகளிலும் கொண்டிருக்கும் திருமதி ராஜேஸ்வரி சண்முகத்தை இவ்வாரம் உங்களுக்கு அறிமுகம் செய்கிறோம்.

கேள்வி : வானொலி அறிவிப்பாளர் துறையில் எவ்வாறு பிரவேசித்தீர்கள்?

